# தள்ளிப் போகாதே!

பிரேமா



# தள்ளிப் போகாதே!

பிரேமா

அறிவாலயம்
தபால் பெட்டி எண்: 667,
புதிய எண்: 32/7, பழைய எண்: 107/7,
கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன்: 28353520
Email: arivalayamvenkat@yahoo.in


## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : தள்ளிப் போகாதே! |
| ஆசிரியர் | : பிரேமா |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : மே, 2017 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 220 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அறிவாலயம் தபால் பெட்டி எண்: 667, பு.எண்: 32/7, ப.எண்: 107/7, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. |

விலை: ரூ.100.00

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

## முன்னுரை

அன்பான வாசகர்களே!

எனது கதைகளை வாசித்து எனக்கு தொடர்ந்து ஆதரவு தரும் உங்கள் அனை வருக்கும் எனது நன்றிகள் பல உரித்தாகுக. உங்களில் சிலர் எனது கதைகளைப் பற்றி சில வரிகள் என் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கின்றீர்கள். அந்தச் சில வரிகள் எனக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கிறது என்றால் அது மிகையாகாது. மின்னஞ்சல் அனுப்பும் தோழமைகளுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

இதில் உள்ள நிறை குறைகளை premaarumugamyahoo.com என்ற எனது மின்னஞ்சலுக்கு அனுப்பி நான் மென்மேலும் வளர உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு ஆதரவு அளித்து வரும் அறிவால யத்திற்கு எனது நன்றிகள்.

அன்புடன்
**பிரேமா**

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1) | காத்திருந்தேன் உனது காதலுக்காக | 130.00 |
| 2) | நீயில்லாமல் நானில்லை | 130.00 |
| 3) | யாதுமாகி என்னுள் நின்றாய் | 120.00 |
| 4) | உயிரே உனக்காக | |
| 5) | வரமாய் வந்த தளிரே | 120.00 |
| 6) | மனசெல்லாம் நீயே | |
| 7) | மாயம் செய்தாயோ | 130.00 |
| 8) | இதயத்திலே அமர்வாய் | 130.00 |
| 9) | என்னை ஆளும் உறவே | 140.00 |
| 10) | என்றும் மகிழ்வுடன் | 130.00 |
| 11) | எங்கிருந்தோ வந்தான் | 120.00 |
| 12) | மையல் கொண்டேனடி | 150.00 |
| 13) | நிழலாய் தொடர்வேன் | 120.00 |
| 14) | இனியொரு பிரிவில்லை | 170.00 |
| 15) | நின்னை மறவேன் நின்னை பிரியேன் | 160.00 |
| 16) | நேசத்திலே நெஞ்சம் | 220.00 |
| 17) | மனதை திருடி விட்டாய் | 150.00 |
| 18) | தொடரும் உறவிதுவோ | 150.00 |
| 19) | தள்ளிப் போகாதே | 100.00 |

# தள்ளிப் போகாதே!



## 1

சென்னை மாநகரத்தில் மாலை நான்கு மணிக்கே சாலைகள் பரபரப்பாய் காட்சியளித்தன. பள்ளி மற்றும் கல்லூரிகளில் இருந்து திரும்பும் வாகனங் களால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட ஆரம்பித்தது.

அந்த நெரிசலில் சிக்கி இருந்தவர்களில் நரேந் திரனும் ஒருவன். அவனுக்கு வயது முப்பத்தி இரண்டு என்று சொன்னால் யாரும் நம்பத்தான் மாட் டார்கள். பார்ப்பதற்கு நல்ல உயரமும் அதற்கேற்ற பருமனுமாய் இருந்தாலும் அவனது களையான முகம் அவனது வயதைக் குறைத்தே காட்டும்.



நரேந்திரன் பிறந்து வளர்ந்தது சென்னை என் றாலும் கல்லூரிப் படிப்பில் தொடங்கி இன்று வரை பெங்களூரு வாசியாக மாறிவிட்டவன்.

இரு நாட்களுக்கு முன்பு தான் அவன் மீண்டும் சென்னையில் குடியேறி இருக்கிறான். அவன் தன்னுடைய தொழிலை சென்னையில் ஆரம்பித்து இருந்தான்.

நரேந்திரன் தன் காரை அந்த அடுக்கு மாடிக் குடி யிருப்பிற்குள் செலுத்தினான். காரை நிறுத்தி விட்டு தன் வீட்டிற்குச் செல்லாமல் அந்தக் குடியிருப்பை ஒட்டி இருந்த சிறுவர் பூங்காவிற்கு சென்றான்.

அங்கே குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந் தனர். அங்கே இருந்த சிமெண்ட் இருக்கை ஒன்றில் அமர்ந்து கொண்டு அவர்களை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

''ஆயாம்மா! என்னை நல்லா ஆட்டுங்க.'' என்று ஊஞ்சலில் அமர்ந்திருந்த குழந்தை அருகே இருந்த வரிடம் கூறிக் கொண்டிருந்தது.

''என்னால ஆட்ட முடியாது பாப்பா. வேலை செஞ்சது இடுப்பெல்லாம் நோவுது. நான் ஒரு ஓரமா போய் உட்கார போறேன். நீயா வெளையாடு.'' என்று கூறிவிட்டு அந்த ஆயாம்மா குழந்தையை விட்டு அகன்று சற்றுத் தள்ளிப் போய் அமர்ந்து கொண்டாள்.

தன்னைப் போல் இன்னொரு வீட்டு வேலையாளும் அங்கே அமர்ந்திருக்கவும் அவர்கள் இருவரும் கதை பேச ஆரம்பித்தார்கள்.

அந்தக் குழந்தையால் ஊஞ்சலை உந்தித் தள்ள முடியவில்லை. அதனால் ஊஞ்சல் அசைவேனா என்றது.

'யாரேனும் தனக்கு உதவ மாட்டார்களா?' என்று அவள் சுற்றிலும் நோட்டம் விட்டாள்.

நரேந்திரன் ஒரு புன்னகையுடன் அவளருகே எழுந்து சென்று, ''நான் ஆட்டி விடட்டுமா?'' என்று கேட்டதும் முகம் மலர தன் தலையை ஆட்டினாள்.

அவனும் ஐந்து நிமிடங்களுக்கு அந்த ஊஞ்சலை ஆட்டி விட்டான். அவள் உற்சாகமாய் சப்தம் எழுப் பியவாறு அதில் ஆடிக் கொண்டிருந்தாள்.

''போதும் பேபி. இதுக்கு மேல ஆடக் கூடாது.''

''இன்னும் கொஞ்சம் நேரம்.''

''நோ. மத்தவங்களுக்கு சான்ஸ் குடுக்கணும்ல.'' என்றவன் அவளை ஊஞ்சலில் இருந்து இறக்கி விட்டுவிட்டு அந்த சிமெண்ட் இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டான்.

அவன் அருகே வந்தவள் அவனை மேலும் கீழும் அளவிட்டாள்.

''என்னடா பேபி அப்படி பார்க்கிறே?''

''நான் ஒண்ணும் பேபி கிடையாது. மிதுளா. மித்து குட்டி.''

''ஓ! உன்னை குட்டின்னு கூப்பிடலாம். ஆனா பேபின்னு கூப்பிடக் கூடாதா?'' என்று கேட்டவன் அவள் கன்னம் பிடித்துக் கொஞ்சுவதற்கு கை நீட்டவும், அவள் அவனது கையை தட்டி விட்டாள்.



''என்னை தொடாமல் பேசுங்க. எனக்கு யாராச்சும் என்னை தொட்டால் பிடிக்காது.'' என்று பெரிய மனுஷ தோரணையில் சொன்னவளைக் கண்டு புன்னகைத்தான்.

''சரிங்க மித்து குட்டி. நான் உங்களை தொடலை. என்னை எதுக்கு அப்படி பார்த்தீங்கன்னு இன்னும் நீங்க சொல்லலையே!''

''உங்களை பார்த்தா சூப்பர் மேன் மாதிரி இருக்கீங்க அங்கிள்.''

'அங்கிள்?! நான் அங்கிளா?! அப்பான்னு சொல் லாமல் அங்கிள்னு சொல்லுறாளே!'

அந்த வார்த்தை தந்த வலியை விழுங்க அவ னுக்கு சில நொடிகள் தேவைப்பட்டது.

'அவளோட ஒண்ணே முக்கால் வயசிலே போன நீ அவளோட மூன்றரை வயசுல தான் திரும்பி வந்து இருக்க. அப்புறம் எப்படிடா அவளுக்கு உன்னை அடையாளம் தெரியும்? நீ அப்பப்போ வந்து அவளைப் பார்த்து இருக்கணும்.' என்று மனசாட்சி இடித்தது.

'நான் வந்தேனே! ஆனா இவ தாத்தா என்னை திருப்பி அனுப்பிட்டாரே! இவளோட அம்மா என் போட்டோவை காட்டி இது தான் உங்க அப்பான்னு சொல்லி வளர்த்து இருக்கலாமில்ல' என்று தனக்குள் வாதிட்டுக் கொண்டிருந்தான்.

''என்ன அங்கிள் யோசிக்கிறீங்க? நீங்க சூப்பர் மேன் மாதிரியே பெரிய ஆளா இருக்கீங்க! நான் சொன்னது சரி தானே!''

''மித்து பேபி சொன்னால் சரியா தான் இருக்கும்.''

''திரும்பவும் பேபி சொல்லாதீங்க. எங்க டாடி மட்டும் தான் என்னை அப்படி கூப்பிடணும்.''

''ஓ! உங்க டாடி உன்னை அப்படி தான் கூப்பிடு வாரா?''

''ம்ம்ம் அப்படி தான் அம்மா சொல்லுவாங்க. எங்க டாடி ஃபாரினில் இருக்கார். நான் அவரை பார்த்து ரொம்ப நாள் ஆச்சு தெரியுமா. எனக்கு அவரை பார்க் கணும்னு ஆசையா இருக்கு.''

தன் மகளை இழுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றிய ஆவலைக் கட்டுப் படுத்திக் கொண்டு கைகளை இறுக்கமாய் மூடி அமர்ந்திருந்தான்.

''நான் சீ-சா விளையாட போறேன். நீங்க இன் னொரு சைட் உட்காருறீங்களா?''

''நானா? சீ -சா உடைஞ்சிடும்.''

''ஆமா. நீங்க சூப்பர் மேன். அப்போ சும்மா கை வச்சு அமுக்குங்க.''

''உனக்கு என்னை அசிஸ்டெண்ட் ஆக்க பார்க் கிறியா? நாட்டி கேர்ள்.'' என்றவன் அவளோடு சென்று அந்த விளையாட்டையும் விளையாட அவளுக்கு உதவி செய்தான்.

''மித்து! நான் உனக்கு விளையாட ஹெல்ப் எல் லாம் பண்ணுறேன் தானே! அப்போ நான் உன்னோட பிரண்டு தானே?''



''ஆமா. நீங்க எனக்கு பிரண்டு தான்.''

''அப்போ நீ என்னை பிரண்டுன்னு கூப்பிடுறியா?''

அவள் தன்னை 'அப்பா' என்று கூப்பிடவில்லை என்றாலும் 'அங்கிள்' என்று அழைக்க வேண்டாமே என நினைத்தே அவன் அவ்வாறு கேட்டான்.

''நான் சின்ன பொண்ணு. நீங்க பிக் அங்கிள். அத னால நான் உங்களை பிரண்டு அங்கிள்னு கூப்பிடு றேன்.'' என்றதும் வெறுத்துப் போனான்.

''யார் தம்பி நீங்க? புதுசா இருக்கீங்க.'' என்று மிதுளாவுடன் வந்திருந்த ஆயாம்மா நரேந்திரனை விசாரித்தாள்.

''நான் பக்கத்து அபார்ட்மெண்ட்க்கு புதுசா குடி வந்திருக்கேன். சி பிளாக்ல ரெண்டாவது மாடியிலே இருக்கேன்.''

''இந்த பொண்ணும் அதே பிளாக் தான். முதல் மாடியிலே குடியிருக்காள்.''

'அது தெரிஞ்சு தானே வந்திருக்கேன்' என மனதில் நினைத்துக் கொண்டவன், ''அப்படியா?'' என்று மட்டும் கேட்டான்.

''பை மித்து.'' என்று அவளிடம் கையாட்டி விடைபெற்றவன் தன் காரை எடுத்துக் கொண்டு நேரே அலுவலகத்திற்கு சென்றான்.

மகளுடன் விளையாடுவதற்காகவே வேலையை பாதியில் விட்டுவிட்டு அலுவலகத்தில் இருந்து வீடு வந்திருந்தான்.

அவன் சொந்தமாய் பிசினஸ் செய்து கொண் டிருந்தான். அதனால் அவன் எப்பொழுது வேண்டு மானாலும் போகலாம். வரலாம். யார் அவனை கேள்வி கேட்க முடியும்.



## 2

**த**ன் வேலையை முடித்த சிந்து அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு கிளம்பினாள்.

அவள் அருகே வந்த அலுவலக தோழி ஒருத்தி, ''என்ன சிந்து வீட்டுக்கு கிளம்பீட்டீங்களா?'' என்றாள்.

''ம்ம்ம் என் பொண்ணு காத்துக்கிட்டு இருப்பாள்.''

''உங்களைப் பார்த்தால் உங்களுக்கு மூன்றரை வயசிலே பொண்ணு இருக்குன்னு யாரும் சொல்ல மாட்டாங்க.''

''எங்க வீட்டுல நான் படிச்சு முடிச்ச உடனே எனக்கு கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்க. இப்போ தானே எனக்கு இருபத்தியாறு வயசு ஆகுது. என்னவோ எனக்கு முப்பது வயசு தாண்டிட்ட மாதிரி பேசுறீங்க.''

''வயசை விடுங்க. பாதி பேர் டெலிவரிக்கு அப்புறம் ஷேப்லெஸ்ஸா போயிடுறாங்க இல்ல. நீங்க அப்படி இல்லாமல் செம சிக்குன்னு இருக்கீங்க



இல்லையா. அதை சொன்னேன்.'' என்றதும் சிந்து அவளைப் பார்த்து முறுவலித்து விடைபெற்றாள்.

அன்று வீடு வந்த தன் தாய் சிந்துவிடம் மிதுளா, தான் பார்த்த புது சூப்பர் மேன் அங்கிள் பற்றியும் அவன் தன்னுடைய பிரண்டு அங்கிள் ஆனது பற்றியும் கதை அளந்து கொண்டிருந்தாள்.

சிந்து மகளது பேச்சைக் கண்டு கொள்ளவில்லை.

ஆனால் நான்கு நாட்கள் தொடர்ச்சியாய் மகள் அந்த பிரண்டு அங்கிள் பற்றியே புகழ்ந்து கொண் டிருக்கவும் சிந்து ஒரு தாயாய் கவலைப்பட ஆரம் பித்தாள்.

'யார் அது? புதுசா வந்த ஒருத்தன் எதுக்காக என் பொண்ணுகிட்ட க்ளோஸா பழகுறான்னு நான் பார்த்தே ஆகணுமே! ஈவினிங் நாலு மணிக்கு ஒருத்தன் தினமும் வரான்னா... ஒண்ணு அவன் வேலை வெட்டி இல்லாமல் இருக்கணும். இல்லைன்னா என் பொண்ணை பார்க்கிறது மட்டுமே அவன் வேலையா வச்சிருக்கணும்.'

'எதுவா இருந்தாலும் ஆபத்து. இன்னைக்கு ஆபிஸில் இருந்து சீக்கிரமா வந்து அவன் யாரு என்னன்னு நான் பார்த்தே ஆகணும்' என முடிவு செய்தாள்.

மகளிடம் தான் அலுவலகத்தில் இருந்து சீக்கிரம் வரப் போவது பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

மாலை நான்கு மணிக்கு சிந்து சிறுவர் பூங்கா விற்கு வந்தாள். அவள் சத்தியமாய் நரேந்திரனை அங்கே எதிர்பார்க்கவில்லை.

வெகு சில மாதங்களுக்கு பிறகு கணவனை கண்டவள் அப்படியே சிலையாய் நின்று விட்டாள். அவளது பார்வை அவனையே ஒரு எதிர்பார்ப்போடு வலம் வந்தது.

ஆனால் அவனோ அங்கே இருக்கிற ஊஞ்சலையும் சறுக்கு மரத்தையும் பார்ப்பது போல தான் அவளையும் பார்த்து வைத்தான். அதில் அவள் கடுப்பானாள்.

'பெங்களூர்ல இருந்து இங்கே எதுக்கு வந்திருக்கார்? பொண்ணை பார்க்கவா? இல்லைன்னா வேலை விஷயமா வந்திருக்காரா?' என யோசித்தாள்.

அவளது கால்கள் அவளையும் அறியாமல் அவனை நோக்கி நடக்க ஆரம்பித்தன.

சிந்துவை கண்ட மிதுளா வேகமாக அவளருகே ஓடி வந்து, ''என்னம்மா இன்னைக்கு சீக்கிரம் வந்துட்டீங்க?'' என்று கேட்டவள்,

நரேந்திரன் புறம் திரும்பி, ''பிரண்டு அங்கிள்! இவங்க தான் என்னோட அம்மா.'' என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

அவர்கள் இருவரிடம் இருந்தும் எந்தப் பதிலையும் எதிர்பார்க்காத மிதுளா, ''அம்மா! நான் கொஞ்ச நேரம் ஸ்லோப்பிலே விளையாடுறேன்.'' என்று அறிவித்து விட்டு அங்கிருந்து ஓடிவிட்டாள்.

''என்ன திடீர்னு? இவ்வளவு மாசம் கழிச்சு எங்க நினைப்பு?'' என்று சிந்து கேட்டாள்.



நரேந்திரன் தன்னைச் சுற்றிலும் பார்வையிட்ட பின், ''என்கிட்டயா பேசுறீங்க? என்ன கேட்டீங்க?'' என்றான்.

அவன் மரியாதை பன்மை போட்டு விளிக்கவும் கடுப்பானவள், ''எங்க நினைப்பெல்லாம் உங்களுக்கு வருதான்னு கேட்டேன்.'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு வார்த்தைகளைத் துப்பினாள்.

''நான் ஏன் உங்களை நினைக்கணும்? நான் மிதுளாவை பார்க்க வந்தேன்.''

''அவ என் பொண்ணு.''

''அவ உங்களுக்கு மட்டும் தான் பொண்ணா?''

''கண்டிப்பா. நான் தான் அவளை பெத்து, கஷ்டப்பட்டு வளர்த்துக்கிட்டு இருக்கேன்.''

''ஓ! தனியாவே இதையெல்லாம் உங்களால செய்ய முடியும்னா எதுக்கு அந்த நரேந்திரனை கல்யாணம் பண்ணி பாதியில் விட்டுட்டு போனீங்க? கல்யாணம் பண்ணாமல் தனியாவே வாழ்ந்திருக்க வேண்டியது தானே?'' என்றதும் முறைத்தாள்.

''இங்கே பாருங்க. நான் உங்க பொண்ணை பார்க்க வரலை. நான் நரேந்திரன் பொண்ணை தான் பார்க்க வந்தேன்.'' என்று அவன் தன்னை தானே மூன்றாம் மனிதனாய் பாவித்து அவளிடம் பேசிக் கொண்டிருந்தான்.

''அங்கிள்! என்னை ஊஞ்சல் ஆட்ட வாங்க!'' என்று மிதுளா அழைத்தாள்.

''அங்கிளா?!'' என்று வாய்விட்டு கேட்ட சிந்து, 'அதுல உனக்கு வருத்தம் இல்லையா?' என்பது போல நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

''நரேந்திரன் பொண்ணு அவனை தானே அப்பான்னு கூப்பிடுவாள். மத்தவங்க எல்லாம் அங்கிள் தானே?'' என்றவன் அவளைப் பார்த்து கேலியாய் முறுவலித்து விட்டு மகளிடம் சென்றான்.

'பாதியிலே விட்டுட்டு வராமல் என்ன நடந்தாலும் பரவாயில்லைன்னு இவர் கூட இருந்திருக்கணுமா என்ன? நான் பிரிஞ்சு வந்தது பிடிக்கலைன்னால் எங்களைத் தேடி வந்திருக்க வேண்டியது தானே!'

'இவ்வளவு நாளும்... கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் வராமல் இருந்துட்டு இப்போ வந்து நிக்கிறார். எதுக்கு வந்திருக்கார்னும் புரியலை.'

'நான் தான் உன் அப்பான்னு மித்துகிட்ட சொல்லாமல் அங்கிள்னு கூப்பிட வச்சுக்கிட்டு வேற இருக்கார். இவர் கணக்கு வழக்கு என்னன்னு எனக்குப் புரியலையே' என்று குழம்பினாள்.

மனதிற்குள் கோபம் வண்டி வண்டியாய் இருந்த போதிலும் மகளும் கணவனும் சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதை கண்டவளின் மனம் நிறையவே செய்தது.

ஊஞ்சல் ஆடி முடித்த மிதுளா உடன் சேர்ந்து விளையாடுவதற்கு தோழி ஒருத்தி கிடைக்கவும் நரேந்திரனை கண்டு கொள்ளாமல் அவளோடு சென்று விட்டாள்.



நரேந்திரன் மகளை ரசித்துக் கொண்டே அங்கே இருந்த இருக்கையில் சென்று அமர்ந்தான். சிந்து அவனருகே வந்து அமர்ந்தாள்.

''நாலு நாளா இங்கே வரீங்கன்னு மிதுளா சொன்னாள். சென்னையிலே நாலு நாளா இருக்கீங்கன்னா... ஏதாச்சும் வேலையா வந்தீங்களா?''

''நான் தான் அப்பவே சொன்னேன்ல. நரேந்திரன் பொண்ணை பார்க்க தான் வந்தேன்னு.''

அவன் திரும்ப திரும்ப தன்னை மூன்றாம் மனிதனாய் பாவித்து பேசவும், ''நரேந்திரன் நரேந்திரன்... ஹெல் வித் ஹிம்.'' என்று கடுப்போடு கூறினாள்.

''ம்ம்ம் அவனுக்கு நரகத்தை காண்பிச்சுட்டு தானே வந்திருக்க. இனிமேலும் புதுசா அவன் நரகத்தை பார்க்கணுமா என்ன?''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் இடத்திற்கு மிதுளாவை பார்த்துக் கொள்ளும் ஆயாம்மா வந்தாள்.

''சிந்தும்மா! இந்த தம்பியை உனக்கு தெரியுமா?''

சிந்து ஏதேனும் பதில் கூறுவாள் என்று சில நொடிகள் காத்திருந்த நரேந்திரன் அவள் ஒன்றும் சொல்லவில்லை என்றதும், ''நான் அவங்க வீட்டுக் காரரோட பிரண்டு.'' என்றான்.

''அப்படிங்களா தம்பி? நீங்களும் மித்து பாப்பாவோட அப்பா கூட வெளிநாட்டில் வேலை பார்க்கிறீங்களா?''

''நான் வெளிநாட்டுக்கு எல்லாம் போனதில்லைம்மா. எனக்கு இங்கே தான் வேலை.''

''உங்களுக்கு கல்யாணம் ஆகிடுச்சா?''

''ஆகிடுச்சும்மா.''

''இங்கே ரெண்டாம் மாடியிலே தானே குடி இருப்பதா சொன்னீங்க. உங்க சம்சாரத்தை நான் பார்க்கலையே!''

''என் பொண்டாட்டி இங்கே இல்லை. பெங்களூரில் இருக்காள்.''

அவனிடம் கேள்விகளை கேட்டு பதிலை பெற்றுக் கொண்ட ஆயாம்மா சிந்துவிடம் திரும்பி, ''நான் கிளம்பட்டுமா சிந்தும்மா? பாப்பாவை நீயே பார்த்துகுவே தானே?'' என்றதும் சிந்து தலையாட்டினாள்.

ஆயாம்மா அகன்றதும், ''எதுக்கு பொய் பொய்யா சொல்லுறீங்க?'' என்றாள்.

''மிதுளா அப்பா ஃபாரினில் வேலை பார்க்கிறதா நீ சொன்னதை சொல்லுறியா?''

''நீங்க அள்ளி விட்ட பொய்களை பத்தி கேட்டேன். நான் சொன்ன பொய்யை பத்தி கேட்கலை. தனியா இருக்கிற லேடிகிட்ட எல்லோரும் அவ ஹஸ்பண்ட் பத்தி கேட்டால் அவ வேற என்ன தான் சொல்லுவாள்?''

''ஏன் உண்மையை சொல்ல வேண்டியது தானே! என் புருஷனை பாதியிலே கழட்டி விட்டுட்டு வந்துட்டேன்னு.'' என்றதும் முறைத்தாள்.



மிதுளா அங்கே வரவும், ''மித்து! வா போகலாம்.'' என்றாள்.

''இன்னும் கொஞ்ச நேரம் விளையாடுறேன்மா.''

''விளையாடின வரைக்கும் போதும். வா போகலாம். அ...'' என்று தொடங்கியவள் அப்பா என்றும் சொல்ல முடியாமல் அங்கிள் என்றும் சொல்ல முடியாமல் சில நொடிகள் தடுமாறினாள்.

''உன் பிரண்டுகிட்ட சொல்லிட்டு வா. போவோம்.''

''பிரண்டு அங்கிள்! டாட்டா. நாளைக்கும் வாங்க. நாம நிறைய நேரம் விளையாடுவோம்.''

மகளது கன்னம் பிடித்து கொஞ்சுவதற்கு அவன் தன் கையை அவளருகே கொண்டு செல்லவும், மிதுளா வேகமாக அவன் கையை தட்டிவிட்டாள்.

''நான் அன்னைக்கே உங்ககிட்ட சொன்னேன்ல. என்னை டச் பண்ணாதீங்க.''

மகளது பேச்சு நரேந்திரனை விட சிந்துவிற்கு வலியைக் கொடுத்தது.

மகளது பாதுகாப்பிற்காய் அவள் சொல்லிக் கொடுத்த பழக்கம் தான் அது!

ஆனால் தகப்பனையே கொஞ்ச விடாமல் அவள் தடுப்பதை அவளால் பார்க்க முடியவில்லை. மனம் வலித்தது.

'உன் அப்பா கூட இருந்த வரைக்கும் அவர் உன்னை தூக்கி வச்சுக்கிட்டே தான் அலைவார். இப்போ

அவரை தொடக் கூடாதுன்னு சொல்லுறியே குட்டிம்மா' என கண்கள் கலங்க நின்றாள்.

''மித்து குட்டி! இவர் உன்னோட அ...'' என்று தொடங்கியவள் நரேந்திரனை அப்பா என்று அறிவிக்க முடியாமல் திணறினாள்.

''இவர் நமக்கு ரொம்ப பிரண்டும்மா. அவர் தொட்டால் தப்பில்லைடா குட்டி. வேற யாரையும் தான் தொட விடக் கூடாது.'' என்றாள்.

தாய் கூறியதை கேட்டு யோசனையில் ஆழ்ந்த மிதுளா சில நொடிகளுக்கு பின் நரேந்திரன் புறம் திரும்பி, ''சரி ஓகே. ஆனா என்னை கொஞ்சுறேன்னு சொல்லி நீங்க என் கன்னத்தை பிடிச்சு இழுக்கக் கூடாது. என் தலையை கலைச்சு விடக் கூடாது.'' என்று கட்டளையிட்டாள்.

''இல்லை. நான் உன்னை டச் பண்ணாமல் இருந்துக்கிறேன்.'' என்று மகளிடம் கூறியவன்,

''அங்கிளுக்கு உரிய எல்லை எதுன்னு எனக்கும் தெரியும். நான் அதையே மெயின்டெயின் பண்ணிக்கிறேன்.'' என்று சிந்துவிடம் முணுமுணுத் தான்.

மகளைப் பார்த்து கை அசைத்து விடைபெற்றவன் மறந்தும் சிந்துவின் புறம் திரும்பாமல் சென்றான்.

அன்று அவன் காரில் வரவில்லை. கால் டாக்சியில் தான் வந்திருந்தான்.



சிந்துவை பார்த்த கடுப்பில் கால் டாக்சிக்காக காத்திருக்க வேண்டாமென முடிவு செய்தவன் ஓடும் ஆட்டோ ஒன்றை கை காட்டி நிறுத்தி அதில் ஏறிச் சென்றுவிட்டான்.

அவனும் ஆயாம்மாவும் அவன் இதே அடுக்கு மாடி குடியிருப்பில் உள்ள இரண்டாவது மாடியில் குடி இருப்பதாக பேசிக் கொண்டதை சிந்துவும் கேட்டாள் தான்.

ஆனால் அவன் அள்ளி விட்ட பொய்களில் அதுவும் ஒன்று என சிந்து நினைத்தாள். அவன் ஆட்டோ ஏறிச் செல்லவும் அவன் வெளியில் இருந்து வந்து மிதுளாவை பார்த்துவிட்டு செல்வதாகவே சிந்து நம்பினாள்.

'இவர் ஒண்ணு தன் பொண்ணுகிட்ட வந்த அன்னைக்கே நான் தான் உன் அப்பான்னு சொல்லி இருக்கணும். சொல்லாமல் விட்டுட்டார்.'

'இப்போ நான் திடுதிடுப்புன்னு இவர் தான் உன் அப்பான்னு சொன்னால்... அப்போ அப்பா ஃபாரின் போய் இருக்காருன்னு நீ பொய்யா சொன்னே? என்று மித்து கேட்பாளே!'

'அவளுக்கு நான் என்ன பதில் சொல்ல? என்னை சிக்கலில் மாட்டி விடுறதுக்காகவே வந்திருக்கார் போல!' என திட்டிக் கொண்டாள்.



# 3

அன்றில் இருந்து இரண்டாம் நாள் நரேந்திரன் வழக்கத்தை விட பத்து நிமிடங்கள் தாமதமாய் அந்த சிறுவர் பூங்காவிற்கு வந்து சேர்ந்தான்.

மிதுளா கன்னத்தில் கை வைத்துக் கொண்டு சோக மாய் அமர்ந்திருந்தாள். பள்ளிச் சீருடையை கூட அவள் மாற்றவில்லை.

புத்தகப் பை மற்றும் சாப்பாட்டு பையோடு அமர்ந் திருந்தவளை கண்டு குழம்பிய நரேந்திரன் அவ ளருகே சென்றான்.

''என்னாச்சு மித்து? ஏன் டிரஸ் கூட மாத்தலை?''

அவனைக் கண்டதும் மிதுளாவின் முகத்தில் சந்தோஷமும் நிம்மதியும் எட்டிப் பார்த்தன.

''பிரண்ட் அங்கிள்! நீங்க வந்துட்டீங்களா? வீட்டுக்கு போனேன். வீடு பூட்டி இருக்கு. ஆயாம்மா இல்லை.'' என்று அவள் தன் கையை விரிக்கவும் அவன் கடுப்பானான்.

'சரி என் கூட வா' என்ற சொல்ல வாயெடுத்தவன் அவள் வர மறுப்பாள் என யூகித்து சிந்துவிற்கு அழைத் தான்.



மகளிடம் இருந்து சற்றுத் தள்ளிப் போய் பேச ஆரம் பித்தான்.

அவள் போனை இயக்கவும், ''ஹலோ! நான் நரேந்திரன் பேசுறேன்.'' என்றான்.

''சொல்லுங்க.''

''இங்கே உன் வீடு பூட்டி இருக்காம். ஆயாம்மா இல்லையாம்.''

''அச்சோ! எங்கே போயிட்டாங்க? ஒரு வாரமா சரியா தானே வந்தாங்க. எப்பவும் அம்மாவும் அப் பாவும் தான் மித்துவை பார்த்துக்குவாங்க. அவங்க ரெண்டு பேரும் ஆன்மீக டூர் போய் இருக்காங்க. அவங்க திரும்பி வர இன்னும் ஒரு மாசம் ஆகும். அதனால தான் இந்த ஆயாம்மாவை நான் பார்த்துக்க சொல்லி இருந்தேன். இப்போ என்ன பண்ண? அவங்க போன் நம்பர் கூட என்கிட்ட இல்லையே!''

''போன் நம்பர் கூட தெரிஞ்சு வச்சுக்கலையா? ரொம்ப நல்லா இருக்கு. வீட்டு அட்ரஸாவது தெரி யுமா? இல்ல அதுவும் தெரியாதா? எதுவும் தெரியாத ஒருத்தவங்களை நம்பி நீ பொண்ணை ஒப்படைச்சு இருக்க!'' என்று திட்டினான்.

''வீட்டு அட்ரஸ் தெரியும். அவங்க வீட்டை நான் பார்த்திருக்கேன்.''

''இப்போ அவங்களை தேடி ஒண்ணும் ஆகப் போறதில்லை. நீ மித்துகிட்ட பேசி என் கூட வர சொல்லு. நீ ஆபிஸ் விட்டு வரும் வரை நான் அவளை பார்த்துக்கிறேன்.''

''சரி நான் அவகிட்ட சொல்லுறேன்.''

''இந்த காலை கட் பண்ணிட்டு வீடியோ கால் போடுறேன். நீ அவகிட்ட பேசு.'' என்றவன் அழைப்பை துண்டித்தான்.

''மித்து குட்டி! உங்க அம்மா கூட போனில் பேசு.'' என்று சொல்லி வீடியோ கால் செய்து அவளிடம் நீட்டினான்.

''அம்மா! ஆயாம்மா காணோம்.''

''உன் பிரண்டு சொன்னார். நீ அவர் கூட போடா மித்து. அம்மா வரும் வரைக்கும் அவர் கூடவே இரு. அம்மா சீக்கிரமா வர பார்க்கிறேன்.''

''ஓகேம்மா. பை.'' என்று சொன்னதும் அவளிடம் இருந்து கைப்பேசியை வாங்கி அழைப்பை துண்டித்தான்.

''மித்து! என்னோட வீட்டுக்கு போகலாம் வரீங்களா?'' என்று கேட்டு அவளது பைகளை தூக்கிக் கொண்டு அவள் கையை பிடித்துக் கொண்டு தன் வீட்டை நோக்கி அழைத்துச் சென்றான்.

அவன் அவளது பிளாக் பக்கம் நடக்கவும், ''உங்க வீடு இங்க தான் இருக்கா?'' என்று கேட்டாள்.

''ஆமா. நான் செகண்ட் ப்ளோரில் இருக்கேன்.''

அவனது வீட்டிற்குள் நுழைந்தவள் சுற்றிலும் பார்வையை சுழலவிட்டாள். நரேந்திரன் அவளுக்கு மாற்றுவதற்கு ஒரு உடை எடுத்து வர உள்ளே சென்றான்.



அவன் தன் மகளுக்காக நான்கைந்து உடைகள் வாங்கி வைத்திருந்தான். அதை அவளிடம் கொடுக்க தான் அவனுக்கு சந்தர்ப்பம் அமையவில்லை.

தொலைக்காட்சிக்கு அருகே இருந்த புகைப் படத்தை கையில் எடுத்த மிதுளா அதை பார்வையிட்டாள். அது அவளது புகைப்படம் தான்.

அது அவள் மூன்று மாதக் குழந்தையாக இருந்த போது எடுக்கப்பட்டது. அதனால் அந்தப் புகைப் படத்தில் இருப்பது தான் என்கிற விபரம் அவளுக்கு தெரியவில்லை.

''பிரண்டு அங்கிள்! இது யாரு?''

''என்னோட பேபிடா மித்து.''

''உங்க பேபி அழகா இருக்கு.''

அந்தப் புகைப்படத்தை அவளிடம் இருந்து வாங்கி, ''என் பேபி அழகு தான்.'' என்று சொல்லி அதற்கொரு முத்தம் பதித்தான்.

அவளது ஷு, சாக்ஸ், டை போன்றவற்றை கழட்டினான்.

''நீ உன் யூனிஃபார்மை மாத்துறியா?''

''என்கிட்ட டிரஸ் இல்லையே!''

''என்னோட பேபியோட டிரஸை நீ போட்டுக்கோ.''

''பேபியோட டிரஸ் எனக்கு எப்படி சேரும்?'' என்று கேட்டு அவள் தன் வாய் பொத்தி சிரிப்பதை புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

''நான் தெரியாமல் என் பேபிக்கு பெருசா... ரொம்ப பெருசா ஒரு டிரஸ் வாங்கிட்டேன். அது உனக்கு சேரும்.'' என்றவன் அந்த உடை அடங்கிய கவரை அவளிடம் நீட்டினான்.

''நான் போய் அந்த ரூமில் டிரஸ் மாத்திட்டு வரேன்.'' என்று சொல்லி அவள் படுக்கை அறைக்குள் சென்றாள்.

'உனக்கு ஒன்றரை வயசு ஆகும் வரை நீ என் கூட தான் இருந்தே! அப்போ உனக்கு அப்பா மட்டும் தான் சொல்லத் தெரியும்.'

'நீ என்னை விட்டுப் பிரிஞ்சு போன பின்னாடி மூணு மாசம் கழிச்சு நான் உன்னை பார்க்க வந்த போது நீ பேசக் கூடிய நிலையில் இல்லை.'

'இப்போ நிறைய பேசுறே! ஆனா உரிமையா கொஞ்ச கூடிய நிலையில் நான் இல்லை. விதியோட விளையாட்டை பார்த்தியா?' என்று மனதோடு பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

உடை மாற்றி வெளியே வந்தவளிடம், ''டிரஸ் சரியா இருக்கா?'' என்று கேட்டான்.

''மித்து சூப்பரா இருக்காளா?''

''என் பேபி எப்பவுமே அழகு தான்.'' என்று மெது வாக முணுமுணுத்தவன் சூப்பர் என்று சைகையில் செய்து காண்பித்தான்.

''பிரண்டு அங்கிள்! எனக்கு பசிக்குது.''



''நான் அப்பவே சாப்பாடு ஆர்டர் பண்ணிட்டேன். இப்போ வந்துடும்.''

''ம்ம்ம் ஓகே.''

''நான் உனக்காக எல்லாம் பண்ணுறேன்ல. எனக் காக நீ ஒண்ணே ஒண்ணு பண்ணுவியா?''

''என்ன பண்ணனும்?''

''இனிமேல் நீ என்னை பிரண்டுன்னு மட்டும் தான் கூப்பிடணும். அங்கிள்னு சொல்ல கூடாது. என்ன ஓகேவா?''

அவள் தன் தலையை ஒரு பக்கமாய் சாய்த்து, ''ம்ம்ம்ம் ஓகே.'' என்றாள்.

அவளைத் தூக்கி வைத்துக் கொஞ்ச பரபரத்த கைகளை அடக்கிக் கொண்டான். மகள் சம்மதம் தெரி வித்ததால் மகிழ்ந்து போனான்.

அவன் ஆர்டர் செய்திருந்த உணவு வந்தது. குட்டி குட்டி இட்லிகள் சாம்பாரில் மிதந்து கொண்டிருந்தன. அதன் மீது நெய் ஊற்றப்பட்டு இருந்ததால் கமகம வென்று வாசமாய் இருந்தது.

அதை கிண்ணத்தில் இட்டு கரண்டியை போட்டு மகள் முன் கொண்டு வந்தான்.

''ஹை குட்டி இட்லி!'' என்று சந்தோஷப்பட்டாள்.

''பிரண்டு! இது எனக்கு ரொம்ப பிடிக்கும் தெரியுமா?''

'எனக்கு தெரியாமல் வேற யாருக்கு தெரியும்?' என நினைத்துக் கொண்டான்.

'தான் ஊட்டினாள் அதற்கு என்ன சொல்லுவாளோ' என்ற சந்தேகத்தோடு அந்த இட்லியை எடுத்து அவள் வாயருகே கொண்டு சென்றான்.

அவள் மறுக்காமல் வாங்கிக் கொண்டாள். அதை கண்டு அவன் மனம் சந்தோஷமடைந்தது.

சாப்பிட்டு முடித்ததும், ''இன்னைக்கு விளையாடவே இல்லை. நாம போய் விளையாடுவோமா?'' என்று அவள் கேட்டாள்.

''வயிறு ஃபுல்லா சாப்பிட்டுட்டு என்ன விளையாடப் போகிறே?''

''அப்போ டிவி பார்க்கட்டுமா?''

''டிவி பார்க்கலாம். அதுக்கு முன்னாடி ஒரு வாக்கிங் போவோமா? நம்ம அப்பார்ட்மெண்ட்டை சுத்தி வரலாம். ஓகேவா?''

''வாக்கிங்கா? நானா? எங்க தாத்தா தான் வாக்கிங் போவார். நான் ஏன் போகணும்?''

''எல்லோருமே வாக்கிங் போகணும். உடம்புக்கு அது நல்லது.'' என்றதும் அவனுடன் கிளம்பினாள்.

''நீ சின்ன குழந்தை. அதனால ஒரு ரவுண்ட் போனால் போதும். ஆனா டெய்லி போகணும். அப்புறமா பெரிய பொண்ணா ஆனதும் நிறைய ரவுண்ட் போகணும்.''

''ஓகே பிரண்டு. இனிமேல் டெய்லி நானும் ஒரு ரவுண்ட் சுத்தி வருவேன். நீங்க என்னை கூட்டிட்டு போவீங்களா?''



''கண்டிப்பா கூட்டிட்டு போவேன். எனக்கு அதை விட வேற என்ன வேலை இருக்கு.''



4

அவர்கள் ஒரு முறை அந்தக் குடியிருப்பு வளாகத்தை சுற்றி வந்தார்கள். அதன் பின் அவளை மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்றான். அங்கே காற்றாட சிறிது நேரம் உலாத்தினார்கள். அதன் பின்பே வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

தொலைக்காட்சியை இயக்கி அவளுக்கு பிடித்த பொம்மை படத்தை போட்டு விட்டான். அவள் அதில் ஒன்றிப் போனாள்.

எப்பொழுதும் மகளுடன் விளையாடி விட்டு திரும்பவும் அலுவலகம் செல்பவன் இன்று செல்ல முடியாத காரணத்தால் அலைபேசி மூலம் தன் தொழில் பேச்சுக்களை மேற்கொள்ள ஆரம்பித்தான்.

இரவு ஏழரை மணிக்கு சிந்து நரேந்திரனை அழைத்தாள்.

அழைப்பு சிந்துவிடம் இருந்து என்பதை பார்த்தவன் மிதுளாவிடம் இருந்து விலகிச் சென்று பேச ஆரம்பித்தான்.

''சொல்லு.''

''எங்கே இருக்கீங்க? பார்க்ல தேடினேன். உங்களை காணோம்.''

''என்னோட வீட்டுல இருக்கோம்.''

''என்னது உங்க வீட்டிலா? அத முதல்லயே சொல்லி இருக்கலாமில்ல. நான் ஆபிஸில் இருந்து நேரா அங்கே வந்து மித்துவை கூட்டிட்டு வந்திருப் பேன்ல.''

'ஒரு மாடி ஏற இவளுக்கு அவ்வளவு கஷ்டமா? ஒல்லியா தானே இருக்காள்!' என்று அவனது சிந்தனை சென்றது.

''இப்போ திரும்பவும் உங்க ஏரியாவுக்கு வந்து மித்துவை கூப்பிட்டுக்கணுமா? ப்ச். ஏற்கனவே இன்னைக்கு வேலை ஜாஸ்தி. நான் செம டயர்டா இருக்கேன். இதுல நீங்க வேற...'' என்று அவள் அலுத்துக் கொண்டாள்.

'இவளுக்கு முதல் மாடி ஒரு ஏரியாவிலும் ரெண்டாவது மாடி இன்னொரு ஏரியாவிலும் இருக்கு போல' என நக்கலடித்துக் கொண்டான்.

தன் நக்கலை வெளியிடாமல், ''நானே மித்துவை கொண்டு வந்து உன் வீட்டுல விடுறேன்.'' என்று மட்டும் சொல்லி அழைப்பை துண்டித்தான்.

மகளை அழைத்துக் கொண்டு படி இறங்கி சிந்துவின் வீட்டை அடைந்து அழைப்பு மணியை அடித்தான்.



'யார் வந்திருக்காங்க?' என்ற யோசனையோடு கதவைத் திறந்த சிந்து அவர்கள் இருவரையும் அங்கே எதிர்பார்க்கவில்லை.

கதவு திறக்கப்பட்டதும் மிதுளா தன் அறை நோக்கி ஒடிவிட்டாள். மிதுளாவின் பைகளை அவன் அங்கே இருந்த மேஜையில் வைத்தான்.

''இங்கேயே இருந்துக்கிட்டு உங்க வீட்டுல இருக் கேன்னு ஏன் பொய் சொன்னீங்க?''

''நான் எப்போ பொய் சொன்னேன்? என் வீட்டுல இருந்து தான் வரோம்.''

''நாம போன் பேசி முடிச்சு ரெண்டு நிமிஷம் ஆகலை. அதுக்குள்ளே இங்கே வந்து நிக்குறீங்க. இதுல பொய் சொல்லலைன்னு சாதிக்க வேற செய்யுறீங்க.''

''மாடியில் இருந்து கீழே இறங்கி வர ரெண்டு நிமிஷம் போதாதா?'' என்றதும் விழித்தாள்.

''என்ன முழிக்கிற? அன்னைக்கு அந்த ஆயாம்மா கூட கேட்டாங்க இல்ல... ரெண்டாவது மாடியிலே தானே உங்க வீடுன்னு.''

''நிஜமாவே இங்கேயா இருக்கீங்க? அன்னைக்கு சொன்ன எத்தனையோ பொய்யில் இதுவும் ஒண் ணுன்னு நான் நினைச்சேன்.''

''அன்னைக்கு நான் அப்படி எத்தனை பொய் சொன்னேன்?''

''உங்க வைஃப் பெங்களூருல இருப்பதா சொன்னீங்களே!''

''அது பொய்யுன்னு உனக்கு யார் சொன்னா? அவள் அங்கே தான் இருக்காள்.''

''சும்மா விளையாடாதீங்க.''

''நான் ஏன் உன் கூட விளையாட போறேன்? நிஜமாவே அவள் அங்கே தான் இருக்காள். இங்கே நான் கொஞ்சம் செட்டில் ஆனதும் அவளை கூட்டிட்டு வந்துடுவேன்.''

'என்ன சொல்லுறார்? உண்மை பேசுறாரா? பொய் சொல்லுறாரா? ஒண்ணும் புரியலையே' என அவள் குழம்பிப் போய் நின்றாள்.

''நீ என்ன நினைச்சே... நீ என்னை விட்டுட்டு போன உடனே தாடி வளர்த்து தேவதாஸா மாறுவேன்னா? எங்க அம்மா எனக்கு கல்யாணம் பண்ணி வச்சாங்க. நானும் என் வைஃபும் சந்தோஷமா வாழ்க்கை நடத்திக்கிட்டு இருக்கோம்.''

''அப்போ இதுக்கு என்ன அர்த்தம்?'' என்று அவள் தன் கழுத்தில் தொங்கி கொண்டிருந்த தாலியை தூக்கி காண்பித்தாள்.

''செயினுக்கெல்லாம் அர்த்தம் இருக்கா என்ன?'' என்று அவன் படுநக்கலாக கேட்டான்.

''இது செயினா?''

''செயின் இல்லையா? அப்போ இது என்ன வளையலா?''



''என் தாலியை பார்த்தால் உங்களுக்கு கிண்டலா இருக்கா?''

''இதுக்கு பேர் தான் தாலியா? இதை இன்னமுமா உன் கழுத்திலே போட்டு இருக்கே? எதுக்கு?'' என்றதும் அவனைக் கடுப்புடன் முறைத்தாள்.

''என்னை விட்டுட்டு வந்த பின்னாலயும் இதை கழட்டாமல் இருக்கியா என்ன? இல்லைன்னா என்னை மாதிரி நீயும் இன்னொரு கல்யாணம் பண்ணிக் கிட்டியா?'' என்றதும் அவள் விருட்டென்று தன் வீட்டிற்குள் சென்று மறைந்தாள்.

அவனும் தன் வீட்டை நோக்கி நகர்ந்து கொண்டே, 'இவ என்னை வேணாம்னு சொல்லிட்டு போவாளாம். மூணே மாசத்தில் விவாகரத்து கேட்டு வக்கீல் நோட்டீஸும் அனுப்புவாளாம். என் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காமல் வருஷக் கணக்கிலே இருப்பாளாம். நான் இவ நினைப்பில் தனியா வாடணுமாம். என்ன அவசியம் வந்துச்சு?' என்று மனதோடு திட்டிக் கொண்டே சென்றான்.

'வர வர இவர் செய்யுற எதையுமே என்னால புரிஞ்சுக்க முடியலை. வேற கல்யாணம் பண்ணினால் இங்கே எதுக்கு வந்தார்?'

'நான் இங்கே இருப்பது தெரியாமல் குடி வந்துட்டாரா? அப்படியே குடி வந்தாலும் எங்க கூட எதுக்கு நெருங்கிப் பழகணும்?'

'அட லூசு சிந்து! அவன் ஒண்ணும் உன்கிட்ட நெருங்கிப் பழகலை. மிதுளா கூட மட்டும் தான்

நெருக்கமாய் பழகுறான். அதுவும் அவள் அப்பா தான் என்பதை கூட சொல்லாமல் பழகிக்கிட்டு இருக்கான்.'

'அவன் புது பொண்டாடிக்கு பயந்து தான் மிதுளாகிட்ட உண்மையை சொல்லாமல் இருக்கானா என்னவோ?'

'அப்படி பயப்படுறவர் எதுக்கு அவ கூட பழகணும்?'

'அவனுக்கு இன்னொரு கல்யாணம் ஆகியிருந் தாலும் மிதுளா அவனோட பொண்ணு என்பதை யாராலும் மாத்த முடியாது தானே! ரத்த பாசம் இழுத் திருக்கும்.'

'அப்போ நான் தான் இவரை நினைச்சு தனியா தவிச்சுக்கிட்டு இருக்கேனா? அவர் நல்லா ஜாலியா தான் வாழ்ந்துக்கிட்டு இருக்காரா?' என்று தனக்கு தானே கேள்வியும் கேட்டு பதிலும் சொல்லிக் கொண் டிருந்தாள்.

''அம்மா! அம்மா!'' என்று மகளது உலுக்கலில் தன் யோசனையில் இருந்து வெளியே வந்தவள் என்ன என்பதாய் அவளை ஏறிட்டாள்.

''ஹோம் வொர்க் செய்யணும்.''

அவள் கேட்ட உதவியை செய்ய ஆரம்பித்தவள் மகளது உடையை அப்பொழுது தான் கவனித்தாள்.

''புது டிரஸா இருக்கு யாரு மித்து வாங்கி தந்தா?''

''பிரண்டு அங்கிள் தான் தந்தார்.''



''கடைக்கு போய் வாங்கினீங்களா?''

''இல்ல. அவரோட குட்டி பேபிக்கு போய் ரொம்ப பெரிய டிரஸ் வாங்கிட்டாராம். அதனால நீ வச்சுக் கோன்னு தந்தார்.''

''அவரோட பேபியை நீ பார்த்தியா?''

''ஆமாம்மா போட்டோவில் பார்த்தேன். அழகா இருந்துச்சு.''

''உன்னை மாதிரி இருந்தாளா?''

''இல்லைம்மா. ரொம்ப குட்டி பேபி.'' என்று அவள் தன் கைகளை சுருக்கி காட்டினாள்.

'நிஜமாவே அப்போ அவருக்கு இன்னொரு கல் யாணம் ஆகிடுச்சா?' என்று நினைத்த போது அவளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது.



## 5

அடுத்த நாள் காலையில் சிந்து கடமையாய் நரேந்திரன் மிதுளாவிற்கு தந்த உடையை துவைத்துப் போட்டாள். அதன் பின்பே அலுவலகம் கிளம்பினாள்.

அன்று மாலை அலுவலகத்தில் இருந்து திரும்பி யவள் அந்த உடையை அயர்ன் செய்து எடுத்து கொண்டு நரேந்திரனை பார்க்கக் கிளம்பினாள்.

அவர்களது குடியிருப்பில் ஒவ்வொரு பிளாக்கிலும் தரை தளத்தில் ஒரு நோட்டீஸ் போர்டு உண்டு. அதில் யார் யார் எந்தெந்த வீட்டில் குடி இருக் கிறார்கள் என்று எழுதி போட்டு இருப்பார்கள்.

அதில் பார்த்து நரேந்திரனின் வீட்டு எண்ணை குறித்துக் கொண்டாள். ஆயாம்மாவை மிதுளாவிற்கு துணை வைத்துவிட்டு தன் முன்னாள்(?) கணவனைப் பார்க்கச் சென்றாள்.

இவள் சென்ற நேரம் அவன் வீட்டில் தான் இருந் தான். கதவும் கூட திறந்து தான் இருந்தது.

பெயருக்கு அழைப்பு மணியை அழுத்திவிட்டு வரவேற்பறைக்குள் நுழைந்து வாயில் கதவை மெல்லச் சாற்றினாள். அந்த தானியங்கி கதவு மூடிக் கொண்டது.

அவள் அந்த வீட்டை சுற்றிலும் நோட்டம் விட் டாள். வீடு கலைந்து கிடந்தது. பெரிய பெரிய அட்டைப் பெட்டிகள் வரவேற்பறையில் இருந்தன.

'இன்னும் வீட்டை அடுக்கி முடிக்கலையோ? இவருக்கு வீடு ரொம்ப நீட்டா இருக்கணுமே! இப்படி எல்லாம் வச்சுக்க மாட்டாரே' என்று நினைத்தாள்.

அங்கே திறந்திருந்த ஒரு அட்டைப் பெட்டியில் மேலாக இருந்த ஒரு புகைப்பட தொகுப்பை கையில் எடுத்து பார்க்க ஆரம்பித்தாள்.

அழைப்பு மணியின் ஓசையை கேட்டு செய்து கொண்டிருந்த வேலையை பாதியில் விட்டுவிட்டு



எட்டிப் பார்த்த நரேந்திரன் அங்கே சிந்துவை கண்டதும் 'இவள் தானா?' என்று நினைத்து கொண்டு தன் வேலையை தொடர ஆரம்பித்தான்.

புகைப்படங்களை பார்வையிட்டவள் நரேந்திரன் தன் தாயுடன் சிரித்துக் கொண்டு நின்றிருப்பதை பார்த்து, 'அம்மா கூட நிக்கும் போது மொத்த பல்லும் வெளியே தெரியுமே! இளிக்கிறதை பாரு!' என்று திட்டிக் கொண்டே அடுத்தடுத்த புகைப்படங்களை பார்வையிட்டாள்.

அதில் ஒன்றில் கூட அவளோ மித்துவோ இல்லை என்றதும் அவளுக்கு கோபமும் வருத்தமும் சேர்ந்தே தோன்றியது.

அந்தப் புகைப்பட தொகுப்பில் இருந்த கடைசி படம் அவளை குழப்பத்தில் தள்ளியது. நரேந்திரன் மூன்று மாத குழந்தை ஒன்றை தன் கையில் பிடித்த படி நின்று கொண்டிருந்தான்.

'மிதுளா சொன்ன இவனோட பேபி இது தானோ?' என்று நினைத்த போது கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

செய்து கொண்டிருந்த வேலையை முடித்துவிட்டு அங்கே வந்த நரேந்திரன், "என்ன விஷயமா என்னை பார்க்க வந்திருக்கே?" என்றான்.

கண்களில் துளிர்த்த நீரை துடைத்துக் கொண்டே, "நேத்து நீங்க மித்துவுக்கு குடுத்த டிரஸை துவைச்சு அயர்ன் பண்ணிட்டேன். அதை திருப்பி குடுத்துட்டு

போகலாம்னு வந்தேன்.'' என்று சொல்லி அதை நீட்டினாள்.

''தாங்க்ஸ்.'' என்று அவன் அதை பெற்றுக் கொண்டான்.

'என் பொண்ணுக்கு நான் வாங்கி கொடுத்த டிரஸை நீ ஏன் திருப்பி தரே?' என்று அவன் கேட்காதது அவளுக்கு ஏமாற்றத்தை தந்தது.

''ரெண்டு வருஷம் கழிச்சு திடீர்னு வந்து எதுக்கு என்னையும் என் பொண்ணையும் டிஸ்டர்ப் பண்ணு றீங்க?''

''ஹலோ! வெயிட் எ மினிட். நான் எப்போ உன்னை டிஸ்டர்ப் பண்ணினேன்? நான் கல்யாணமான பேமிலி மேன். ஐ கம் ஃப்ரம் எ டீசன்ட் பேமிலி.''

''நான் எதுக்கு அடுத்த வீட்டு பொண்ணை டிஸ்டர்ப் பண்ண போறேன்? நீ பாட்டுக்கு சத்தமா எதையாச்சும் பேசி வைக்காதே! பார்க்கிறவங்க என்னை தப்பா நினைச்சுக்க போறாங்க.''

''நீங்க டீசன்ட் பேமிலின்னா... நான் இன்டீசன்ட் பேமிலில இருந்து வந்திருக்கேனா?''

''உன்னை பத்தின ஆராய்ச்சி எனக்கு எதுக்கு? டிரஸை குடுக்க தானே வந்தே? கொடுத்தாச்சு இல்ல. அப்போ...'' என்றவன் வெளியே கைகாட்ட....

'என்னைப் பார்த்து வெளியே போன்னு சொல்லு றாரா?' என்று இன்னும் கொஞ்சம் கடுப்பானாள்.



''எனக்கு இன்னைக்கு உண்மை தெரியாமல் நான் இங்கே இருந்து போக மாட்டேன்.''

''என்ன உண்மை தெரியணும்?''

''இந்த போட்டோவில் இருக்கிறது உங்க குழந் தையா?'' என்று அவள் அந்தப் புகைப்படத்தைக் காட்டவும், அதை வாங்கிப் பார்த்தான்.

''ஆமா. அதுக்கு என்ன இப்போ?''

''அப்போ நீங்க இன்னொரு கல்யாணமும் பண்ணி குழந்தையும் பெத்துக்கிட்டீங்க. அப்படி தானே?''

''யெஸ். நான் அன்னைக்கே அப்படி தான் சொன்னேன். நீ தான் அது பொய்யுன்னு சொல்லி நம்ப மாட்டேன்னு சொன்ன.''

அப்பொழுது அவனது அலைபேசி சிணுங்கவும் அதை எடுத்து இயக்கி, ''சொல்லு டார்லிங். எப்படி இருக்கே?'' என்றான்.

''....''

''பேபி என்ன செய்யுறாள்? என்னை தேடுறாளா?''

''....''

ஹாஹா என்று சிரித்து கொண்டே, ''அவளை விட உனக்கு தான் என்னை தேடுதா? ஈவன் ஐ டூ மிஸ் யூ வெரி பேட்லி. இங்கே சீக்கிரமா வீட்டை செட் பண்ணிட்டு உன்னை கூப்பிட்டுக்கிறேன்டா. அது வரைக்கும் நான் இல்லாமல் அட்ஜஸ்ட் பண் ணிக்கோ.'' என்றதும்,

''எவகிட்டே பேசுறீங்க?'' என்று அவனது கைப்பேசியை சிந்து பறிக்க முயன்றாள்.

அவன் அவளிடம் அதை தராமல், ''டார்லிங்! இங்கே சத்தம் அதிகமா இருக்கு. என்ன சத்தம்னு கேட்கிறியா? இங்கே பக்கத்துல ஒரு லேடி... ஹிஸ்டீரியா பேஷண்ட் போல! அப்பப்போ கத்துறாங்க. நான் அப்புறமா கால் பண்ணுறேன்.'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

''என்னை பார்த்தா உங்களுக்கு ஹிஸ்டீரியா பேஷண்ட் போல இருக்கா?''

''இப்போ எதுக்கு தேவை இல்லாமல் என் வீட்டுல வந்து கத்திக்கிட்டு இருக்க? எனக்கு என் வீடு அமைதியா இருந்தால் தான் பிடிக்கும். ப்ளீஸ் நீ உன் வீட்டுக்கு கிளம்பு.''

''இவ எப்படா நம்ம வாழ்க்கையை விட்டு போவாள். அடுத்த கல்யாணம் பண்ணுவோம்னு காத்திருந்தீங்களா? நான் தான் லூசு மாதிரி உங்களை நினைச்சு இங்கே தவிச்சுக்கிட்டு இருந்தேனா? விட மாட்டேன். நீங்க எப்படி அவ கூட வாழ்ந்துடுறீங்கன்னு நான் பார்க்கிறேன்.''

''உன்னால என்னை என்ன செய்ய முடியும்?''

''கோர்ட்டில் கேஸ் போடுவேன்.''

''என்னன்னு கேஸ் போடுவே?''

''முதல் மனைவி உயிரோடு இருக்கும் போது ரெண்டாவது கல்யாணம் பண்ணினது செல்லாதுன்னு சொல்லுவேன்.''



''முதல் மனைவியை டைவர்ஸ் பண்ணினவங்க எல்லோரும் இன்னொரு கல்யாணம் பண்ணாமலா இருக்காங்க. காமெடி பண்ணாமல் வேற வேலையை போய் பாரு.''

''டைவர்ஸா? நமக்கு தான் டைவர்ஸ் ஆகலையே.''

''எவன் சொன்னான்? அதெல்லாம் கோர்ட்டில் எப்பவோ தீர்ப்பாகிடுச்சு.''

''நான் கோர்ட்டுக்கு வராமல் அதெப்படி அப்படி தீர்ப்பாகும்?''

''நீ எதுக்கு வரணும்? என்னை வேணாம்னு ஒருத்தி சொல்லிட்டு போவாள். நான் அவளுக்காக என் வாழ்க்கையை தொலைச்சுக்கிட்டு நிப்பேனா? ஒரு பொண்ணை செட் பண்ணி இவள் தான் என் வைஃப்னு கோர்ட்ல கொண்டு போய் நிறுத்தி விவாகரத்து வாங்கிறது எனக்கு கஷ்டமா என்ன?'' என்று அள்ளி விட்டான்.

அவன் சொல்வதை உண்மை என்று நம்பி அவள் ஆடிப் போனாள்.

அங்கே இருந்த சோபாவில் பொத்தென்று அமர்ந்தாள். தன் தலையில் கை வைத்து அமர்ந்து கொண்டு யோசிக்க ஆரம்பித்தாள்.

இரு நிமிடங்கள் கழித்தும் அவள் அசைவதாக இல்லை என்றதும், ''என்னாச்சு? இங்கேயே உட்கார்ந்துட்டே! வீட்டுக்கு போகலையா?'' என்று கேட்டான்.

''என்னை கிளப்பி விடுறதிலேயே குறியா இருக் கீங்க போல!''

''நான் கல்யாணமான ஆம்பிளை. நீ என் வீட்டுல வந்து இப்படி உட்கார்ந்திருப்பதை யாராச்சும் பார்த்தால் என்னை தப்பா பேச மாட்டாங்களா? என் பேர் கெட்டுப் போவதை நான் என்னைக்குமே விரும்ப மாட்டேன்.''

''ஓ! நான் இங்கே உட்கார்ந்திருந்தால் உங்க பேர் கெட்டுடுமா? அப்போ நான் இந்த இடத்தை விட்டு அசைய மாட்டேன். என்ன செய்வீங்க?''

''கத்தி கலாட்டாவெல்லாம் பண்ண மாட்டேன். சின்னதா ஒரு போலீஸ் கம்ப்ளையின்ட் குடுப்பேன். அவங்க வந்து உன்னை அப்புறப்படுத்திடுவாங்க.''

''என்ன?! என்ன சொன்னீங்க?! போலீஸ்ல சொல்லு வீங்களா? அந்த அளவுக்கு ஆகிடுச்சா? அப்போ இதை சுத்தமா மதிக்கிறதில்லைன்னு முடிவு பண் ணிட்டீங்களா?'' என்று அவள் தன் தாலியை எடுத்து மீண்டும் காட்டினாள்.

''அதை நீ முதல்ல மதிச்சியா? அதுக்குரிய மரியா தையை நீ தந்தாயா?''

''மரியாதை தராமல் தான் கழுத்திலே இன்னும் மாட்டிக்கிட்டு அலையுறேனா?''

''சும்மா அதை கழுத்திலே தொங்க விட்டுக்கிட்டு அலைஞ்சால் போதுமா? அதை மதிக்கிறவளா இருந் தால் அதை கட்டியவன் கூட சேர்ந்து வாழணும்.''



''சேர்ந்து வாழ முடிஞ்சால் வாழ்ந்திருக்க மாட்டேனா?''

''சேர்ந்து வாழ முடியாத அளவுக்கு நான் உன்னை கொடுமைப்படுத்தினேனா?''

''இல்லை.''

''குடிச்சுட்டு வந்து உன்னை தினமும் அடிச்சேனா?''

''இல்லை.''

''டிரக்ஸ். சிகரெட்... இப்படி ஏதாச்சும் கெட்ட பழக்கம்?''

''இல்லவே இல்லை.''

''உன்னை விட்டுட்டு வேற பொம்பிளை கூட தொடர்பு வச்சுக்கிட்டேனா?''

''அதான் இப்போ எவளையோ கல்யாணம் பண்ணி பிள்ளையும் பெத்து இருக்கீங்களே!''

''அது இப்போ. உன்னை விவாகரத்து பண்ணின பிறகு. நான் கேட்கிறது நீ என் கூட சேர்ந்து வாழ்ந்த காலத்திலே! சொல்லு உன்னை விட்டுட்டு வேற பொண்ணை செட் பண்ணினேனா?''

''இல்லை.''

''நான் எதுவுமே பண்ணலை. உனக்கு வாழ பிடிக் கலைன்னு நீ விலகி போனே! உன் உணர்வுக்கு மதிப்பு குடுத்து நானும் விலகி நிக்கிறேன். இப்போ வந்து எதுக்கு தையா தக்கான்னு குதிக்கிறே?''

அவள் அமைதியாக இருக்கவும், ''உனக்கு ஒரு சின்சியர் அட்வைஸ் சொல்லட்டுமா? என்னோட எக்ஸ் வைஃப்ன்னு தான் இந்த ஃப்ரீ அட்வைஸ். பேசாமல் உன் தாலியை கழட்டி வச்சுடு. உன்னோட ப்ராப்ளம் சால்வ் ஆகிடும்.'' என்றான்.

''இதை கழட்டிட்டால் நீங்களும் நானும் வாழ்ந்த வாழ்க்கை இல்லைன்னு ஆகிடுமா?''

''இது தானே உனக்கு அந்த வாழ்க்கையை ஞாப கப்படுத்துகிறது. அப்போ இது இல்லைன்னா நீ மறக்க சான்ஸ் இருக்கில்ல.''

''இதை கழட்டிட்டால் மிதுளா இல்லாமல் போயி டுவாளா?''

''அதெப்படி மறைவாள்? என்னைக்கு இருந்தாலும் அவளோட அப்பா நான் தான். என்ன தான் எனக்கு இன்னொரு பொண்ணு இருந்தாலும் என்னோட மூத்த பொண்ணு மிதுளா தான். அவள் என்னோட செல்லம் தான்.''

''உங்க மூத்த பொண்ணை எப்படி கொஞ்சு வீங்க? அதான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட் டீங்களே!''

''என் மனைவி மித்துகிட்ட பேசுறதை தப்பாவே எடுத்துக்க மாட்டாள். அவ ரொம்பவே பிராட் மைண்டட் பெர்சன். ஆனா உன்கிட்ட பேசுறதை பார்த்தால் உன்னை தொலைச்சு கட்டிட்டு தான் அடுத்த வேலை பார்ப்பாள்.''



''சரியான சண்டைக்காரியா?''

''என் விஷயத்துல அவள் அவ்வளவு பொசஸிவ். அது தான் எனக்கு அவகிட்ட பிடிச்ச விஷயமே!''

அவள் மீண்டும் அமைதியானதும், ''எனக்கு வேலை இருக்கு. உன் கூட வெட்டியா பேச நேரம் இல்லை. நீ கொஞ்சம் வெளியே போனால் நல்லா இருக்கும்.'' என்றான்.

தன் தாலியை கையில் தூக்கிப் பார்த்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தவள் அவனை நிமிர்ந்து பார்த்து, ''இது என் கழுத்திலே இருக்க வேண்டாம்னா... இதை கட்டின நீங்களே கழட்டிடுங்க.'' என்றாள்.

''அவ்வளவு தானே! செஞ்சுட்டால் போச்சு!'' என்று சற்றும் அலட்டாமல் கூறியவன் அவளை நெருங்கி தாலியில் கை வைக்க

சிந்து தன் பலத்தை எல்லாம் திரட்டி அவனது கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.



# 6

நரேந்திரன் சிந்து தன்னிடம் முன்பு கூறியதை நினைத்துப் பார்க்க ஆரம்பித்தான்.

படுக்கையறையில் புடவை ஒன்றை மடித்துக் கொண்டிருந்த சிந்துவின் பின்னால் வந்து அவளை இறுக அணைத்துக் கொண்ட நரேந்திரன் அவளைத் தூக்கிச் சுற்ற ஆரம்பித்தான்.

''விடுங்க நரேன். என்னை இறக்கி விடுங்க.''

''விட மாட்டேன்.''

''தலை சுத்துது நரேன். ப்ளீஸ்'' என்றதும் சுற்றுவதை நிறுத்தினான்.

அவன் மேல் சாய்ந்து கொண்டு தன்னை நிலைப் படுத்திக் கொண்டவள், ''உங்களுக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன். என்னை இப்படி தூக்கி சுத்தாதீங்கன்னு.'' என்றாள்.

''அப்படி சுத்தினால் தான் நீ இப்படி என் மேல சாஞ்சு நிற்பே!''

''அது தானா விஷயம்? இனிமேல் நான் தலை சுத்துச்சுன்னா பெட்டில் போய் உட்கார்ந்துகிறேன்.''

''முடிஞ்சா இப்பவே போ.''

அவள் அவனிடம் இருந்து விடுபட போராடி தோற்றாள். 'என்ன முடியலையா?' என்று அவன் தன் புருவங்களை உயர்த்திக் கேட்டதும் அவனை செல்லமாக அடித்தாள்.

அவன் அவளை தன்னோடு இறுக்கிக் கொள்ளவும், ''டேய் முரடா! வலிக்குதுடா! ஒரு நாள் இல்ல ஒரு நாள் என்னோட எலும்பெல்லாம் உடைய போகுது. எப்படி அத்தனை எலும்பும் ஒரே நேரத்திலே உடைஞ்சதுன்னு டாக்டர் கேட்க போறார். உங்க மானம் போகப் போகுது.'' என்றாள்.



''அப்போ உன்னை விட்டுடவா? அப்புறமா என் கிட்ட வந்து இறுக்கி அணைச்சு ஒரு உம்மா தாங்கன்னு கேட்க கூடாது.''

''ம்ம்ம் அது வந்து... அது...''

''எது வந்து? இப்போ மட்டும் குரல் தந்தி அடிக்குது.''

''எனக்கு வேண்டியதை நான் என் ஹஸ்பண்ட் கிட்ட கேட்க தான் செய்வேன்.''

''அதே மாதிரி எனக்கு வேண்டியதை நானும் என் வைஃப்கிட்ட இருந்து எடுத்துக்குவேன்.'' என்றவன் அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டான்.

''ஓகோ! நீங்களா எடுத்துக்குவீங்களோ? எப்படின்னு நானும் பார்க்கிறேன்.'' என்றவள் அவனுக்கு கிச்சு கிச்சு மூட்டினாள்.

அவன் சிறிதும் அசையாமல் அவளை மேலும் இறுக்கிக் கொள்ளவும், ''சொரணை கெட்ட மனுஷா! கிச்சு கிச்சு காட்டுறேன். கொஞ்சமாச்சும் நெளியுறீங்களா?'' என்று நக்கல் செய்தாள்.

நிமிர்ந்து அவள் முகம் பார்த்தவன், ''இதுக்கு பேரு தான் கிச்சு கிச்சு மூட்டுறதா? அப்போ இதுக்கு என்ன பேரு?'' என்று அவளது இடுப்பில் குறுகுறுப்பு காட்டவும், அவள் அலறிக் கொண்டு துள்ளினாள்.

''நரேன்! போதும் நரேன். எனக்கு ரொம்ப கூசுது.''

அவன் நிறுத்தவும் எம்பி அவன் கன்னத்தை கடித்து வைத்தாள்.

அவன் சிறு சப்தம் கூட எழுப்பவில்லை என்றதும், ''முரட்டு தோலுடா உனக்கு.'' என்றாள்.

''அப்புறம் உன்னை மாதிரி மெத்து மெத்துன்னா இருப்பாங்க?''

''ம்ம்ம் ஆனா இந்த முரடனை தானே எனக்கு பிடிக்குது.'' என்றதும் அவன் அவளை தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

தன் நினைவுகளில் இருந்து நரேந்திரன் நடப்பிற்கு திரும்பினான்.

'எனக்கு முரட்டு தோலுன்னு சொல்லுவாள். அவ அறைஞ்ச அறையிலே என் கன்னம் தீயா எரியுது. அவளோட கை பூ போல இருக்கும். அப்போ அறையை குடுத்த அவளோட கை எப்படி எரியும்?'

''இந்த வேகத்தை ஏன்டி என் கூட வாழுறதுல காட்டாமல் போனே!'' என்று வாய்விட்டுப் புலம்பினான்.

சற்று முன்பு தன்னை அலைபேசியில் அழைத்த தன்னுடைய நண்பனை நரேந்திரன் அழைத்தான்.

''ஹலோ நரேன்!''

''சொல்லுடா! எதுக்கு கொஞ்ச நேரத்துக்கு முன் னாடி போன் பண்ணினே?''

''யாரை வெறுப்பேத்தடா என்னை டார்லிங்குன்னு கொஞ்சினே?''



''நான் விஷயம் சொல்லாமலே என்னை சரியா புரிஞ் சுக்கிட்டு அமைதியா இருந்தியே... நண்பேன்டா!''

''உன்னை புரிஞ்சுக்கிறது அவ்வளவு கஷ்டமா என்ன? அதை விடு. யாருன்னு கேட்டேன்? சிந்து வையா?''

''வேற யாரை வெறுப்பேத்த போறேன். அவளை தான்.''

''என்ன சொல்லுறாள்?''

''நான் என்ன சொன்னாலும் நம்பிக்கிட்டு என் கூட மல்லுக்கு நிக்குறாள்.''

''அப்படி என்னத்தை சொல்லி தொலைச்சே!''

''உன் பொண்ணு கூட நான் இருக்கிற போட் டோவை காட்டி இது தான் உங்களோட ரெண்டாவது மனைவிக்கும் உங்களுக்கும் பிறந்த பொண்ணான்னு கேட்டாள்.''

''என்னது ரெண்டாவது மனைவியா?! திடீர்னு அவ எங்கே இருந்து வந்தாள்?''

''நான் தான்டா அவளை வெறுப்பேத்த அப்படி ஒரு பொய்யை சொன்னேன். அதுக்கு தான் ரெண்டு நாளா சாமி ஆடுறாள்.''

''அவ்வளவு கோபம் வருதா? அப்புறம் ஏன் உன்னை விட்டுட்டு போனாள்?''

''அந்த கோபம் தான் எனக்கும். சரி என் கதையை விடு. நீ என்ன விஷயமா போன் பண்ணின?'' என்றதும் நண்பர்கள் வேறு விஷயத்திற்கு தாவினர்.

அரை மணி நேரம் கடந்திருந்தது. நரேந்திரன் கண்ணாடி முன் சென்று நின்று தன் கன்னத்தை ஆராய்ந்தான். மெல்லிய விரல் தடம் தெரிந்தது.

'பார்க்க தான் ஆள் ஒல்லியா இருக்காள். அடி மட்டும் இடி மாதிரி இறங்கி இருக்கு.'

கன்னத்தில் மருந்தை தடவுவதற்காக அதைத் திறந்தான். பின் வேண்டாம் என நினைத்து அதை மூடி எடுத்துக் கொண்டு சிந்துவை பார்க்கச் சென்றான்.

அழைப்பு மணியை அடித்து விட்டு காத்திருந் தான். கதவைத் திறந்தவள் நரேந்திரனை கண்டதும் பின் வாங்கினாள்.

அவன் இரு எட்டுக்கள் எடுத்து வைத்து வீட் டிற்குள் நுழைந்தான். அவன் அவளை நெருங்கவும் அவளது இடது கை வேகமாக அவளது தாலியை பற்றியது.

'லூசு! லூசு! என்னை பத்தி நல்லதாவே நினைக்க மாட்டாள்' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே அவளுடைய வலது கையை இழுத்து வைத்து மருந்திட ஆரம்பித்தான்.

அவள் "ஆ" என்று மெதுவாக அலறினாள். அவளை முறைத்துக் கொண்டே அவளது வலது உள்ளங்கை முழுவதிலும் அந்த மருந்தை தடவி விட்டான்.

'என் கை எரியுதுன்னு இவருக்கு எப்படி தெரிஞ்சது? அவர் கன்னமும் அப்படித் தான் எரியுதோ?' என நினைத்துக் கொண்டாள்.



"என் கையை பிடிச்சு மருந்து போடுறதை பார்த் தால் உங்க வைஃப் ஒண்ணும் சொல்ல மாட்டாளா?"

"நான் தான் அப்பவே சொன்னேன்ல. அவளுக்கு ரொம்ப பெரிய மனசுன்னு. அவ தான் உனக்கு மருந்து போட்டுட்டு வர சொன்னாள். அதனால தான் நான் வந்தேன்."

"நம்புற மாதிரி இல்லையே! புருஷனை அடிச்சு காயப்படுத்தினவளுக்கு போய் யாராச்சும் மருந்து போட சொல்லுவாங்களா?"

"நீ என்னை அறைஞ்சதா நான் எப்போ அவகிட்டே சொன்னேன்?"

"அப்புறம் வேற என்ன சொன்னீங்க?"

"நான் தான் உன் கன்னத்துல அறைஞ்சேன்னு சொன்னேன். அதான் போய் மருந்தை போட்டுட்டு வாங்கன்னு சொன்னாள்."

'முன்னாள் மனைவி கன்னத்துல மருந்து போட சொன்னாளாம் ஒருத்தி. என்னம்மா பொய் சொல்லு றார்.' என்று அவளுக்குத் தோன்றியது.

மருந்தை தடவி விட்டதும் அவன் நகர முற்பட் டான். தனது இடது கையால் அவனை இழுத்து நிறுத்தியவள் அந்த மருந்தை அவனது கன்னத்தில் தடவி விட்டாள்.

அவன் ஹூட் (hood) உள்ள சட்டையை அணிந் திருந்தான். சட்டையின் கழுத்துப் பகுதியில் தொப்பி போன்ற அமைப்பு இருக்கும். அதை இழுத்து

தலையில் மாட்டினால் அது ஒருவருடைய பின் மண்டையையும் கன்னத்தையும் மறைத்து விடும்.

அவள் மருந்தை தடவி முடித்ததும் அவன் அந்த ஹூடை வைத்து தன் கன்னத்தை மறைத்துக் கொண்டான்.

''இப்போ மறைச்சுட்டீங்க. நாளைக்கு ஆபிஸ்க்கு எப்படி போவீங்க?''

''அதை என்னை அறையுறதுக்கு முன்னாடி நீ யோசிச்சு இருக்கணும்.''

''நீங்களும் என் தாலியை தொடுறதுக்கு முன்னாடி யோசிச்சு இருக்கணும்.'' என்றதும் இருவரும் சண்டை கோழிகளாய் மாறி சிலிர்த்துக் கொண்டு நகர்ந்தனர்.

அவன் சென்ற பின் அவள் தன் கையைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

'இவர் சொல்லுறதில் எதெல்லாம் நிஜம். எதெல்லாம் பொய்யுன்னு தெரியலை. இவர் மருந்து போட வந்துட்டதால் மட்டும் இவருக்கு கல்யாணம் ஆகி இருக்காதுன்னு என்னால சொல்ல முடியாது.'

'என்னைக்குமே செஞ்ச தப்பை ஒத்துக்கிட்டு அதை உடனே திருத்திக்கிற குணம் அவருக்கு உண்டு. அதனால கூட அவர் எனக்கு மருந்து போட வந்திருக்கலாம்.'

'என்னை வெறுப்பேத்த தான் பொய் சொல்லுறாரா... இல்லை உண்மையிலே என்னை வெறுத்துட்டாரான்னு தெரியலையே' என்று நினைத்த பொழுது அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது.





# 7

அவளது குழப்பத்திற்கான தீர்வு அந்த வார இறுதியான ஞாயிறன்று கிடைத்தது.

அவர்களது குடியிருப்பு வளாகத்தில் மாதம் ஒரு முறை கூட்டம் போடுவார்கள். குடியிருப்பில் ஏதேனும் பிரச்சனை இருப்பின் அதைப் பற்றி அலசி ஆராய்வார்கள்.

அப்படி ஒரு கூட்டத்தில் வைத்து நரேந்திரன் அறிமுகம் செய்து வைக்கப்பட்டான்.

''இவர் பேர் நரேந்திரன். நம்ம அபார்ட்மெண்ட்டில் புதுசா குடி வந்திருக்கார். இவருக்கு கல்யாணமாகி அஞ்சு வருஷம் ஆகுதாம். மூன்றரை வயதில் ஒரு பெண் குழந்தை இருக்காம். இப்போதைக்கு இவர் இங்கே தனியா தான் குடி இருக்கார். கூடிய சீக்கிரம் இவரோட மனைவியும் குழந்தையும் இங்கே வந்துடுவாங்களாம்.'' என்று அவர்களது சங்கத் தலைவர் அறிமுகம் செய்து வைத்தார்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த சிந்துவின் குழப்பம் தீர்ந்து மனதில் உற்சாகம் பிறந்தது.

'அப்பாடா!' என்ற நிம்மதி உண்டானது.

அன்று நரேந்திரனை தனியாக சந்திக்க நேர்ந்த போது, ''பொய்! பொய்! வாயில் இருந்து வந்ததெல்லாம் பொய். என்னை வெறுப்பேத்தினதுல உங்களுக்கு என்ன கிடைச்சது? ரெண்டு நாளா நான் எவ்வளவு அழுதிருப்பேன்.'' என்று திட்டினாள்.

''நீ எதுக்கு அழுகணும்?''

''உங்களுக்கு இன்னொரு கல்யாணம் ஆகிடுச்சுன்னா எனக்கு அழுகை வராதா?''

''அது தான் எதுக்குன்னு கேட்கிறேன். என்னை பிரிஞ்ச இந்த ரெண்டு வருஷத்திலே நான் உயிரோட இருக்கேனா இல்லை செத்து போனேனான்னு கூட கவலைப்படாத நீ, என் வாழ்க்கையிலே இன்னொரு பொண்ணு வந்துட்டாள்னு சொன்னா மட்டும் எதுக்கு வருத்தப்படணும்?''

இந்தக் கேள்விக்கு என்ன பதிலை சொல்ல என அவள் திருதிருத்தாள்.

''உங்களை தேடி வந்து பார்க்கலைன்னால் எனக்கு உங்க மேல அக்கறை இல்லைன்னு அர்த்தமாகிடுமா என்ன? இப்போ சில பேர் ஃபாரின்ல வேலைக்கு போறாங்க. மனைவி குழந்தைகளை இங்கே இந்தியாவிலே விட்டுட்டு போறாங்க. அவங்களுக்கு எல்லாம் அவங்க குடும்பத்து மேல அக்கறை இல்லையா?''

''ம்ம்ம் அவங்க எல்லாம் வீட்டுக்கு வாரம் ரெண்டு தடவையாச்சும் போன் பண்ணி பேசுவாங்க. அம்மணி எத்தனை தடவை எனக்கு போன் பண்ணீங்க?'' என்று எகத்தாளமாய் கேட்டான்.



''ம்ம்ம் என்னை சொல்லுறீங்க இல்ல... நீங்க என்னை எத்தனை தடவை வந்து பார்த்தீங்க? இல்ல எத்தனை தடவை போன் பண்ணீங்க?''

''உன்னை நான் எதுக்கு பார்க்கணும்? உனக்கு எதுக்கு போன் பண்ணனும்? என்னை வேணாம்னு சொல்லிட்டு போன உன் பின்னாடி நான் ஏன் தொங்கணும்?''

''இப்போ மட்டும் எதுக்கு வந்தீங்க?''

''நீ ஒரு விஷயத்தை தப்பாவே புரிஞ்சுக்கிறே! நான் திரும்ப திரும்ப சொல்லுறேன். நான் உன்னை தேடி வரலை. என் பொண்ணை மட்டும் தான் தேடி வந்திருக்கேன்.''

''அப்போ உங்களுக்கு நான் வேண்டாமா?''

''நீ எனக்கு தேவையே இல்லை.'' என்று அவன் அழுத்தம் திருத்தமாய் சொல்லவும், அவனை முறைத்து விட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

'போடி போ! உண்மையிலே நான் உனக்கு வேணும்னு தோணுச்சுன்னா பெட்டியை கட்டிட்டு நம்ம பொண்ணை கூட்டிட்டு என் வீட்டு கதவை தட்டு. அது வரைக்கும் என்னால முடிஞ்ச மட்டிலும் உன்னை வெறுப்பேத்தியே தீருவேன்.' என்று மனதிற்குள் சூளுரைத்துக் கொண்டான்.

அடுத்த நாள் நரேந்திரன் சிந்துவை கீழே உள்ள சிறுவர்கள் பூங்காவிற்கு வர சொன்னான்.

'இவன் கூப்பிட்டால் நான் போகணுமா?' என்று சிந்துவிற்கு கடுப்பாக இருந்தது.

'போகலைன்னா திரும்ப திரும்ப போன் பண்ணுவான். இல்லைன்னா மித்து முன்னாடி வந்து நின்னு கத்தினாலும் கத்துவான் என்று நினைத்தவள்' வேறு வழியில்லாது அவனைக் காணச் சென்றாள்.

''இந்தா இதை வாங்கிக்கோ. இதை குடுக்க தான் உன்னை வர சொன்னேன்.'' என்று ஒரு கவரை அவளிடம் நீட்டினான்.

'ஆஹா! நமக்கு என்னவோ வாங்கிட்டு வந்திருக்கார் போல! அதை குடுக்க தான் கூப்பிட்டார்னு தெரிஞ்சிருந்தால் சந்தோஷமாவே கிளம்பி வந்திருப்பேனே' என எண்ணிக் கொண்டாள்.

''என்ன இது?''

''ஒரு குழந்தை வச்சிருந்த பொம்மை வேணும்னு மித்து ஆசைப்பட்டாள். அதான் வாங்கிட்டு வந்தேன்.''

'எனக்கு இல்லையா? மித்துவுக்கா? அவளுக்கு மட்டும் தானா?' என ஏமாற்றமடைந்தாள்.

''அவ என்ன ஆசைப்பட்டாலும் வாங்கி குடுத்துடுவீங்களா?''

''என் சம்பாத்தியம் மொத்தமும் என் பொண்ணுக்கு தான். அவளுக்காக என்னால ஒரு பொம்மை வாங்க முடியாதா?'' என்று அவன் கடுப்போடு கேட்டான்.

''நீங்களே அவகிட்ட குடுக்க வேண்டியது தானே!''

''நானே குடுத்து இருப்பேன். அப்புறமா நமக்கு வேண்டிய பொருளை வேற யார்கிட்ட வேணாலும் கேட்டு வாங்கிக்கலாம் போலன்னு அவ நினைச்சிடக் கூடாது இல்ல. அவளைப் பொறுத்தவரை நான் மூணாம் மனுஷன் தானே!''



''ஏன்? நீங்க யாருன்னு சொல்ல வேண்டியது தானே. உங்களை யார் தடுத்தா?'' என்று அவளும்,

'உனக்கு எப்போ மனசு வருதோ அப்போ நீயே சொல்லு. உன் புருஷன் வெளிநாட்டில் இல்லை. கண்ணு முன்னாடி தான் இருக்கான்னு' என்று அவனும் மனதோடு பேசிக் கொண்டார்கள்.

''மூணாம் மனுஷங்ககிட்ட பொருளை வாங்க கூடாதுன்னு சொல்லுறீங்க. ஆனா உங்க பொண்ணு மூணாம் மனுஷங்ககிட்ட க்ளோஸா பழக மட்டும் செய்யலாமா? அதை மட்டும் எப்படி என்கரேஜ் பண்ணுறீங்க?''

அவள் கேள்வி ஏற்படுத்திய வலியை கண்களை மூடி விழுங்கினான்.

'இவள் சொல்லுறதும் சரி தானே! நாளைக்கு வேற எவனாச்சும் ஸ்கூலிலோ இல்ல ஸ்கூல் போகிற வழியிலோ நட்பாய் பேசினால் மித்து அவங்களோட நெருங்கிப் பழகினால் அது குழந்தைக்கு ஆபத்து தானே!'

'நாட்டிலே பாதி குழந்தை கடத்தல் இப்படி தானே நடக்குது. ஐயோ! கடத்தலா?' என மனம் பதறியது.

'அதுக்காக என்னால விலக முடியுமா? மித்துவை பார்க்காமல் இருக்க முடியுமா?' எனத் தடுமாறினான்.

'உனக்கு உன் குழந்தையை கொஞ்சுறது முக்கியமா? இல்லைன்னா அவளோட பாதுகாப்பு

முக்கியமா?' என்ற மனசாட்சியின் கேள்விக்கு முடிவு எடுத்தவன் சிந்துவிடம் அதை தெரிவிக்க ஆரம்பித்தான்.

''என் பொண்ணோட சேஃப்டிக்கு முன்னாடி எனக்கு எதுவும் பெருசில்லை. நாளையில் இருந்து நான் அவளை பார்க்க வர மாட்டேன்.'' என்று சொல்லி விருட்டென்று அந்த இடம் விட்டு நகர்ந்து சென்றான்.

'போடா போ! இப்போ கூட என்னை உன் கூட கூட்டிட்டு போய் வாழணும்னு உனக்கு தோணலை இல்ல. வந்துட்டான்.'

'பொண்ணுக்கு தான் மொத்த சம்பாத்தியமுமாம். அப்போ எனக்கு? நான் யாருடா உனக்கு?'

'நான் இல்லாமல் உன் பொண்ணு மட்டும் எங்கே இருந்து வந்தாள்? இத்தனை வருஷம் கழிச்சு தேடி வந்தானேன்னு பார்த்தால்... நல்லா படம் காட்டுறான்' என்று மனதிற்குள் திட்டித் தீர்த்தாள்.

வீட்டிற்கு சென்ற சிந்து அந்த பொம்மையை மிதுளாவிடம் கொடுத்தாள். அந்த பொம்மையை கண்ட மிதுளா சந்தோஷத்தில் குதித்தாள்.

அடிக்கொரு முறை தன் தாயை வந்து அணைத்து முத்தமிட்டு கொஞ்சி மகிழ்ந்தாள்.

'இவளோட வளமான வாழ்க்கை என்னுடைய பிடிவாதத்தால பாதிக்கப்படுதோ?' என முதல் முறையாக சிந்து யோசிக்க ஆரம்பித்தாள்.





## 8

மறுநாள் சிந்து அலுவலகத்தில் இருந்து வீடு வந்ததும் ஆயாம்மா விடைபெற்று தன் வீட்டிற்கு சென்றாள்.

''மித்து குட்டி! இன்னைக்கு ஸ்கூலில் என்ன பண்ணீங்க?''

''ஒண்ணும் பண்ணலை.''

''ஒண்ணுமே பண்ணலையா? சரி ஈவினிங் நல்லா விளையாடினீங்களா?''

''இல்லை விளையாடலை.''

''விளையாடலையா? ஏன்?''

''எனக்கு ஊஞ்சல் ஆட்டி விட ஆளே இல்லை. பிரண்டு அங்கிள் வரவே இல்லை. நான் அவர் வீட்டுக்கு கூட போய் பார்த்தேன். வீடு பூட்டி இருக்கு.''

''அவருக்கு ஆபிஸில் வேலை இருந்திருக்கும்டா மித்து. அதான் வந்திருக்க மாட்டார்.''

''இத்தனை நாளும் வந்தாரே.''

''இன்னைக்கு ரொம்ப முக்கியமான வேலை வந்திருக்கும்.''

''ம்ம்ம்.''

சுரத்தையின்றி செல்லும் மகளைக் கண்ட சிந்து, 'உங்கப்பாவை ஒரு நாள் பார்க்கலைன்னதும் உனக்கு டல்லடிக்குதா?' என்று நினைத்துக் கொண்டாள்.

அடுத்த இரு தினங்களும் நரேந்திரன் வரவே இல்லை. அதனால் மிதுளா வாடிப் போனாள்.

தொடர்ந்து மூன்று நாட்களாய் அவன் வரவில்லை என்றவுடன் தான் சிந்துவிற்கு அவன் அன்று சொல்லிச் சென்றது நினைவிற்கு வந்தது.

'அடக் கடவுளே! அன்னைக்கு சொன்னதை அப்படியே ஃபாலோ பண்ணுறாரா? சும்மா கிண்டலுக்கு சொன்னாருன்னு நினைச்சேன். இவரை வச்சுக்கிட்டு....' என்று அலுத்துக் கொண்டவள் அவனை போனில் அழைத்தாள்.

''ம்ம்ம் சொல்லு என்ன விஷயம்?''

''ரொம்ப பிஸியா இருக்கீங்களா?''

''நான் எப்பவுமே பிஸி தான். உனக்கு இப்போ என்ன வேணும்? எதுக்கு போன் பண்ணின? அதை மட்டும் சொல்லு.''

''எனக்கு ஒண்ணும் வேணாம். உங்க பொண்ணுக்கு தான் வேணுமாம்.''

''என்ன வேணும்னு கேட்கிறாள்?''

''அவளோட பிரண்டு அங்கிள் வேணுமாம்.''

''ப்ச் நான் தான் சொன்னேன்ல. அவளோட சேஃப்டி முக்கியம்னு.''



''அவளோட சந்தோஷம் முக்கியமில்லையா? மூணு நாளா முகம் சுருங்கி போய் இருக்காள்.''

''இன்னும் நாலு நாள் பார்க்கலைன்னா மறந்திடுவாள். அப்படியே விடு.''

''உங்களுக்கும் அவளுக்கும் இருக்கிற பந்தம் வெறும் ஊஞ்சல் ஆட்டுறதிலா இருக்கு? நீங்க ஊஞ்சல் ஆட்டி அவ கூட விளையாடுவதாலா அவ உங்க மேல இவ்வளவு ஒட்டுதலா இருக்கிறாள்?''

''கண்டிப்பா இல்லை. அவ உங்களை இந்த அளவுக்கு நேசிக்க காரணம் உங்க ரெண்டு பேருக்கு இடையே இருக்கிற ரத்த சம்பந்தம் தான். அது அவ்வளவு சீக்கிரமா மாறாது.''

''ஒன்றரை வயசிலே ஒரு குழந்தை ரொம்ப நாள் பார்க்காத அப்பாவை மறக்கிறது சகஜம் தான். அதான் அப்போ மறந்துட்டாள்.''

''ஆனா மூன்றரை வயசு குழந்தை அவ்வளவு சீக்கிரம் மறக்காது. நீங்க நாலு நாள் இல்லை... நாற்பது நாள் வராமல் இருந்தாலும் அவ உங்களை மறக்க மாட்டாள்.''

''உற்சாகமே இல்லாமல் நடமாடிக்கிட்டு உள்ளுக்குள்ளே நத்தையாய் சுருங்கி தான் போவாள்.'' என்று மகளது மனநிலையை விளக்கினாள்.

''இப்போ என்னை என்ன பண்ண சொல்லுறே?''

''நான் யார் எதையும் சொல்ல? நீங்களாச்சு உங்க பொண்ணாச்சு.'' என்றவள் அழைப்பைத் துண்டித்தாள்.

அடுத்த அரை மணி நேரத்தில் அவளது வீட்டின் அழைப்பு மணி ஒலித்தது.

ஒரு புன்னகையோடு சென்று சிந்து கதவை திறந்தாள். அவள் எதிர்பார்த்தது போல் நரேந்திரன் தான் வந்திருந்தான்.

''மித்து குட்டி! இங்கே வந்து யார் வந்திருக்காங் கன்னு பாரு.'' என்று சிந்து உள்ளறை நோக்கி குரல் கொடுத்தாள்.

அறையில் இருந்து வெளியே வந்த மிதுளா, ''ஹேய் பிரண்ட்! நீங்க ஏன் என்னை பார்க்க வரவே இல்லை?'' என்று கேட்டுக் கொண்டே ஓடி வந்தாள்.

''எனக்கு வேலை இருந்துச்சுடா மித்து குட்டி. என் வீட்டுக்கு போவோமா?'' என்றதும், அவன் விரல் பிடித்து கொண்டு அவனோடு நடக்க ஆரம்பித்தாள்.

''நடுவிலே ஒருத்தி நிக்கிறாளே! அவகிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டாவது போவோம்னு தோணுதா? வளர்ந்த அவருக்கே அது தெரியலைங்கிற போது சின்ன குழந்தையை திட்டி என்ன ஆகப் போகுது?'' என்று வாய் விட்டு புலம்பிக் கொண்டே சிந்து தன் வேலையைப் பார்க்கச் சென்றாள்.

''நான் உங்களை ரொம்ப மிஸ் பண்ணினேன் பிரண்டு.''

மகளது தேடலில் அவன் உள்ளமெல்லாம் குளிர்ந்து.

''நானும் உன்னை ரொம்ப மிஸ் பண்ணினேன்டா மித்து. இத்தனை மாசம் மிஸ் பண்ணியதை விட



இந்த மூணு நாள் நான் மிஸ் பண்ணியது தான் அதிகம்.''

அவன் சொல்ல வருவது புரியாது அவள் விழித்தாள்.

''நாம போய் கொஞ்ச நேரம் ஊஞ்சல் ஆடுவோமா?''

''இப்பவா? அம்மா திட்டுவாங்களே!''

''என் கூட தானே வர போறே! அம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க.''

''அப்போ வாங்க போகலாம்.'' என்று மிதுளா உற்சாகமானாள்.

இருவரும் சிறிது நேரம் அந்தப் பூங்காவில் பொழுதைப் போக்கினார்கள்.

மூன்று நாட்கள் வராததற்கு ஈடு கட்டும் வகையில் அரை மணி நேரம் ஊஞ்சலில் வைத்து தன் மகளை ஆட்டினான். இரவாகி விட்டதால் ஊஞ்சலுக்கு போட்டிக்கு வர ஆளும் இல்லை. அது அவர்களுக்கு வசதியாகப் போயிற்று.

விளையாடி முடித்ததும் நரேந்திரன் மிதுளாவை அழைத்துக் கொண்டு சிந்துவின் வீட்டை நோக்கிச் சென்றான்.

சிந்துவிடம் மகளை ஒப்படைத்துவிட்டு வாசலோடு அவன் விடைபெற்று சென்றுவிட்டான்.

அவன் செல்வதை பார்த்துக் கொண்டே சிந்துவின் பக்கத்து வீட்டு பெண் வசந்தா அங்கே வந்தாள்.

''சிந்து! சொல்லுறேன்னு தப்பா நினைச்சுக்காதே! நாடு இருக்கிற இருப்பிலே நீ பாட்டுக்கு இப்படி தெரியாத ஆம்பிளைகிட்டே குழந்தையை ஒப்படைக் காதே! குழந்தைக்கும் குமரிக்கு வித்தியாசம் தெரி யாமல் அலையுறானுங்க.''

''அப்படி இல்லைன்னா... நீ தனியா இருக்கிற பொண்ணுன்னு உன் குழந்தையை வச்சு உன்னை மடக்க பார்த்தாலும் பார்ப்பான். ஜாக்கிரதையா இரு!'' என்று எச்சரித்தாள்.

அவரது எச்சரிக்கையை கேட்டு சிந்து திகைத்துப் போனாள்.

தன் திகைப்பில் இருந்து மீண்டு அவள் பதில் சொல்லும் முன் வசந்தாவின் பின்னே நின்ற நரேந் திரனைப் பார்த்து அவள் அதிர்ந்தாள்.

அவளது அதிர்ச்சியை கண்டு வசந்தா திரும்பி பார்த்தாள். நரேந்திரனை அங்கே கண்ட வசந்தா சங்கடம் அடைந்தாள்.

நரேந்திரன் தன் கண்களை மூடி, ''பெத்த பொண்ணு கிட்டயும் கட்டின பொண்டாட்டிகிட்டயும் நான் தப்பா நடந்துக்குவேன்னு அடுத்தவங்க நினைக்கிற அளவுக்கு என் நிலைமை மோசமா போச்சா? இந்த அவமானம் எனக்கு தேவையா?'' என்று தன்னை தானே கேட்டுக் கொண்டு அமைதியாக நின்றிருந் தான்.

பின் தன் கண்களை திறந்தவன், ''இது மிதுளா வோட கிளிப்.'' என்று அதை அங்கிருந்த மேஜை



மேல் வைத்து விட்டு சிந்துவை கோபமாய் முறைத்து விட்டுச் சென்றுவிட்டான்.

செல்லும் அவனையே கவலையோடு பார்த்துக் கொண்டிருந்த சிந்துவிடம், ''நான் சொன்னதை எல்லாம் அந்த தம்பி கேட்டிருக்குமோ? ஆனா நான் ஒண்ணும் தப்பா சொல்லிடலையே! நாட்டிலே நடக்கிறதை தானே சொன்னேன்!'' என்று வசந்தா கூறினார்.

''அக்கா! அவர் தான் மிதுளாவோட அப்பா. என்னோட ஹஸ்பண்ட்.''

''அச்சோ!'' என்று வசந்தா தன் வாய் மீது கை வைத்து அதிர்ந்தார்.

''அப்போ மிதுளா அப்பா ஃபாரினில் இருக்கார்னு இத்தனை நாளா நீ பொய் சொன்னியா?''

''ஆமாக்கா நான் சொன்னது பொய் தான்.''

''நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சு இருக்கீங்களா?''

''எங்க ரெண்டு பேருக்கும் ஒரு சின்ன கருத்து வேறுபாடு. அதான் பிரிஞ்சுட்டோம்.''

''இந்த தம்பி தான் தன்னோட அப்பான்னு உன் பொண்ணுக்கு தெரியாதா?''

''ஆமாக்கா. அவளுக்கு தெரியாது.''

''நீ சொல்லலையா?''

''இல்லக்கா. நானும் சொல்லலை. அவரும் சொல்லலை.''

''அதான் சொந்த அப்பாவை மிதுளா அங்கிள்னு கூப்பிடுறாளா?''

''ம்ம்ம் ஆமா.''

''அந்த தம்பிக்கு எவ்வளவு சங்கடமா இருக்கும். உண்மை தெரியாமல் என் பங்குக்கு நான் வேற எக்கு தப்பா வாய் விட்டுட்டேன். அந்த தம்பி பாவம் மனசொடிஞ்சு போய் இருக்குமே! நான் போய் மன்னிப்பு கேட்டுட்டு வரேன். இல்லைன்னா எனக்கு மனசு நிம்மதி ஆகாது.'' என்று கூறிவிட்டு வசந்தா மாடி ஏறிச் செல்ல ஆரம்பித்தாள்.

நேரே நரேந்திரனிடம் சென்றவள், ''தம்பி! என்னை மன்னிச்சுடுப்பா. உண்மை தெரியாமல் எதை எதையோ பேசிட்டேன். நீ தான் மிதுளாவோட அப்பான்னு இப்போ தான் சிந்து சொன்னாள்.'' என்றார்.

''பரவாயில்லைங்க. நீங்க சிந்து மேலயும் மித்து மேலயும் அக்கறை பட்டு தானே அப்படி சொன்னீங்க. நாலு நல்ல மனுஷங்க மத்தியிலே என் மனைவி பாதுகாப்பா இருக்காள்னு நினைக்கும் போது எனக்கு நிம்மதியா தான் இருக்கு.''

''இப்படி தனியா எத்தனை நாளைக்கு இருப்பீங்க? சீக்கிரமா சேர்ந்து வாழுங்கப்பா. நான் அடுத்த வீட்டு மனுஷி. இதுக்கு மேல உங்க விஷயத்துல தலையிடக் கூடாது. நான் வரேன்.'' என்று கூறி விடை பெற்றார்.






அடுத்த நாள் சிந்து நரேந்திரனைப் பார்த்த பொழுது, ''வசந்தாக்கா உங்களை வந்து பார்த்தாங்களா நரேன்?'' என்றாள்.

அவளது கேள்விக்கு பதில் அளிக்காமல், ''நீ இப்போ என்னை எப்படி கூப்பிட்டே?'' என்று அது தான் முக்கியம் போல் கேட்டான்.

''நரேன்னு கூப்பிட்டேன். அதானே உங்க பேரு?''

''கால் மீ மிஸ்டர் நரேந்திரன்.'' என்று அவன் சொன்னதும் அவள் கோபம் சுறுசுறுவென்று ஏறியது.

அவனை அழுத்தமாய் பார்த்துக் கொண்டே, ''முடியாது போடா!'' என்றாள்.

அவன் அவளை முறைத்துக் கொண்டே அங்கிருந்து சென்றான். அவளுக்கு முதுகு காட்டி நடக்க ஆரம்பித்ததும் சிரித்துக் கொண்டே சென்றான்.

எதிரே வந்த வசந்தா அவனது சிரிப்பைக் கண்டு விட்டு சித்துவிடம் வந்து, ''என்ன ஜோக் சொன்னே சிந்து? உன் வீட்டுக்காரர் அப்படி சிரிச்சுக்கிட்டு போகிறார்?'' என்றாள்.

'என்னை பார்த்து முறைச்சுட்டு அந்தப் பக்கம் திரும்பியதும் சிரிக்கிறாரா?' என நினைத்த சிந்து வசந்தாவை பார்த்து அசடு வழிந்து விட்டு வீட்டிற்குள் சென்றாள்.

'உன்னை நரேன்னு நான் கூப்பிடாமல் வேற யாருடா கூப்பிடுவாங்க? உன்னை விட்டு தள்ளி தான் வந்திருக்கேன். அதுக்காக என் உரிமையை விட்டுக் குடுத்துட்டதா அர்த்தம் இல்லை.'

அன்று நரேந்திரனுக்கு வேலை இருந்ததால் மிதுளா கூட விளையாட முடியாது என்பதை சொல்லி விட்டு செல்வதற்காக தான் அவன் சிந்து வீட்டிற்கு வந்தான்.

அவள் நரேன் என்று கூப்பிடவும் அவளை வெறுப்பேற்றி விட்டு தான் சொல்ல வந்ததை சொல்லாமலும் மகளைப் பார்க்காமலும் சென்று விட்டான்.

அன்று இரவு சிந்து கணவனைப் பற்றி சிந்தித்துக் கொண்டே முகத்தில் ஒரு முறுவலுடன் தூங்கச் சென்றாள்.

காலையில் எழுந்து பார்த்த பொழுது மிதுளாவிற்கு ஜுரம் இருப்பது தெரிந்து சிந்து வருத்தப்பட்டாள். வேலைக்கு செல்லாமல் அருகில் இருந்து கவனித்துக் கொள்ள முடிவு செய்தாள்.

வழக்கமாய் கொடுக்கும் மருந்து மாத்திரைகளை கொடுத்துப் பார்த்தாள். ஜுரம் இறங்கவில்லை.

மதியத்துக்கு மேல் மிதுளா, ''அம்மா! எனக்கு அப்பாவை பார்க்கணும்.'' என்றாள்.



''அப்பாவை இப்போ எப்படி குட்டி பார்க்க முடியும்? அப்பா ஊருக்கு வரும்...'' என்று தொடங்கியவளை,

''நீங்க பொய் சொல்லுறீங்க. மாடி வீட்டுல இருக்கிற பிரண்டு அங்கிள் தான் என் டாடின்னு எனக்கு தெரியும்.'' என்றாள்.

அதை கேட்டு அதிர்ந்த சிந்து, ''உனக்கு யாரு மித்து சொன்னாங்க?'' என்று கேட்டாள்.

''நீங்க வசந்தா ஆன்ட்டிகிட்ட சொன்னதை நான் கேட்டேன். எனக்கு அப்பாவை பார்க்கணும்.''

சிந்துவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. மிதுளா திரும்ப திரும்ப தான் சொன்னதையே சொன்னாள்.

'இதையே நினைச்சுக்கிட்டு படுத்து இருப்பாளோ? அந்த ஏக்கத்தில் தான் ஜுரமே வந்திருக்குமோ?'

வேறு வழியின்றி சிந்து நரேந்திரனை அழைத்தாள். இரு மணி அடித்ததும் அழைப்பை துண்டித்தாள்.

அவன் கூப்பிடுவானோ என பத்து நிமிடங்கள் காத்திருந்தாள். அவன் அழைக்கவில்லை என்றதும் அவனை திட்டிக் கொண்டே மீண்டும் அழைத்தாள்.

மணி அடித்து ஓயப் போகும் நேரம் அவன் அந்த அழைப்பை ஏற்று, ''ஹலோ!'' என்றான்.

''நான் சிந்து பேசுறேன்.''

''தெரியுது. சொல்லு.''

''மித்து குட்டி அவங்க அப்பாவை பார்க்கணும்னு அடம் பிடிக்கிறாள்.''

''ஃபாரினில் இருக்கிற உன் ஹஸ்பண்டுக்கு போன் பண்ண வேண்டியது தானே. அதுக்கு எதுக்கு எனக்கு போன் பண்ணி இருக்க?''

'உனக்கு கொழுப்புடா!' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே, ''அவளுக்கு நீங்க தான் அப்பான்னு தெரிஞ்சு போச்சு.'' என்றாள்.

''எப்படி தெரிஞ்சது? நீ சொன்னியா?''

''இல்லை. வசந்தா அக்காகிட்ட நான் சொல்லும் போது கேட்டாளாம்.''

''அதானே பார்த்தேன். நீயாவது உண்மையை சொல்லுறதாவது.''

''ப்ச். இப்போ நான் உங்க கூட சண்டை போடுற மூடிலே இல்லை. மித்துக்கு நல்ல ஜுரம். நீங்க வந்து அவளை பாருங்க.''

''அவளுக்கு ஜுரம்னா டாக்டர்கிட்ட கூட்டிட்டு போ.''

''இப்படி ஒரு பொறுப்பில்லாத தகப்பன் என் பொண்ணுக்கு வேணாம்னு தான் நான் தள்ளி இருந்தேன். உங்களை விட்டு பிரிஞ்சு வந்த மூணாவது மாசம் மித்துவுக்கு ஆக்ஸிடெண்ட் ஆச்சு. ரோட்டிலே அடிபட்டு உயிருக்கு போராடினாள். அப்போ கூட நீங்க வரலை.''



''அப்போ அட்லீஸ்ட் உங்க அம்மா உயிரோட இருந்தாங்க. நீங்க எங்களை மறந்திட்டு அவங்களுக்கு கூஜா தூக்கினீங்கன்னு சொல்லலாம்.''

''இப்போ கொஞ்ச நாளா பொண்ணு தான் முக்கியம்னு ஃபிலிம் காட்ட தானே செய்யுறீங்க! அப்போ அவளை பக்கத்திலே இருந்து கவனிச்சுக்க வேண்டியது தானே!''

''நான் வேலைக்கு கூட போகாமல் அவ கூடவே இருக்கேன். அந்த குட்டி என்னை விட்டுட்டு உங்களை தேடுறாள். எல்லாம் என் நேரம்.''

சில நொடிகள் அமைதியாய் இருந்தவன், ''பேத்தி அடிபட்டு ஹாஸ்பிட்டலில் இருக்காள்னு தெரிஞ்சால்... அவளை போய் பாருடான்னு எங்க அம்மா என்னை துரத்தி விடுவாங்களே தவிர எனக்கு பணிவிடை செய்டான்னு ஒரு நாளும் சொல்ல மாட்டாங்க.''

''நான் ஃபிலிம் காட்டுறேனா இல்லையான்னு உனக்கு புரூவ் பண்ண வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.''

''நீ சொன்ன உடனே பறந்து வரதுக்கு நான் இப்போ சென்னையிலே இல்லை. அதனால என்னை திட்டுறதை நிறுத்திட்டு அவளை டாக்டர்கிட்ட கூட்டிட்டு போகிற வழியை பாரு.'' என்றான்.

அவள் ஒன்றும் சொல்லாமல் அந்த அழைப்பை துண்டித்து விட்டு மகளிடம் சென்று, ''மித்து! அப்பாக்கு போன் பண்ணினேன். அவர் ஊரிலே

இல்லையாம்டா. நாம டாக்டர்கிட்ட போவோமா?'' என்றாள்.

''நான் அப்பாகிட்ட பேசணும்.'' என்று அவள் அடம் பிடிக்கவும், மீண்டும் கணவனை அழைத்தாள்.

''இப்போ என்ன? நான் மீட்டிங்கில் இருக்கேன் சிந்து.'' என்று அவன் எரிச்சல் பட்டான்.

அவனிடம் ஒன்றும் சொல்லாமல் ஸ்பீக்கரை ஆன் செய்து மகள் முன்பு நீட்டி, 'பேசு' என்று சைகை செய்தாள்.

''அப்பா!''

வெகு நாட்களுக்கு பின்பு மகள் தன்னை 'அப்பா' என்று அழைக்கவும் அவனது தேகம் சிலிர்த்தது.

''சொல்லுடா பேபி!'' என்று சொன்ன போது அவன் குரல் கரகரத்து ஒலித்ததை சிந்துவால் உணர முடிந்தது.

''நான் உங்களை பார்க்கணும்பா.''

''அப்பா உடனே ஃபிளைட் பிடிச்சு கிளம்பி வந்தால் கூட வர லேட் ஆகும்டா. அப்பாக்கு முக்கிய மான மீட்டிங் இருக்கு. நீ அம்மா கூட சேர்ந்து ஹாஸ்பிட்டலுக்கு போ. அப்பா காலையிலே வந்துடுறேன்.''

''நிஜமா வந்துடுவீங்க தானே?''

''கண்டிப்பாடா. அப்பா பொய் சொல்லலை.''

''ம்ம்ம் ஓகே.'' என்று அவள் உடனே ஒத்துக் கொள்வதை சற்று பொறாமையுடன் சிந்து பார்த்தாள்.



''அப்பா வச்சுடுறேன்டா பேபி. நீ ஹாஸ்பிட்ட லுக்கு போய் டாக்டரை பாரு. மருந்தை கரெக்ட்டா குடி. பை.''

மகள் 'ம்ம்ம்' என்று சொல்லி சம்மதம் தெரிவித்ததும் அழைப்பை துண்டித்தான்.



## 10

மகளை அழைத்துக் கொண்டு சிந்து மருத்துவ மனைக்கு வந்தாள். குழந்தைகள் நல மருத்துவர் விடுப்பில் இருந்தார்.

''வேற ஸ்பெஷலிஸ்ட்டை பார்க்கிறீங்களா?'' என்று ரிசப்ஷன் பெண் கேட்டாள்.

''எந்த டாக்டர் இருக்கார்?''

''டாக்டர் விவேக் இருக்கார்.''

அன்று மிதுளாவிற்கு அடிபட்ட போது இதே மருத்துவமனையில் தான் அவளை சேர்த்திருந்தனர். அப்பொழுது டாக்டர் விவேக்கின் நேரடி கண் காணிப்பில் தான் மிதுளா இருந்தாள்.

டாக்டர் விவேக் மிதுளாவை நல்ல முறையில் கவனித்துக் கொண்டார். மருத்துவனாய் மட்டும் பழகாமல் உறவினன் போல் அவளிடம் அன்பு செலுத்தி அவளைக் குணப்படுத்தினான்.

'வேற சைல்டு ஸ்பெஷலிஸ்ட் கிட்ட காட்டு வோமா? இல்லை சாதாரண பீவர் தானேன்னு விவேக் டாக்டரை பார்ப்போமா?' என்று சிந்து யோசித்தாள்.

புது ஹாஸ்பிட்டல் போய் புதிதாய் ஒரு குழந்தைகள் நல மருத்துவரை பார்ப்பதை விட இங்கே விவேக் டாக்டரையே பார்ப்பது என்று முடிவு செய்து அந்த ரிசப்ஷன் பெண்ணிடம் தெரிவிக்கவும் செய்தாள்.

டோக்கன் வாங்கிக் கொண்டு வரிசையில் சென்று அமர்ந்தாள். அந்த நீண்ட வரிசையை கண்டவளுக்கு ஆயாசமாக வந்தது.

''எப்போமா வீட்டுக்கு போவோம்?'' என்று விடாமல் நச்சரித்த மகளுக்கு சமாதானம் சொல்லியே சிந்து ஓய்ந்து போனாள்.

'எல்லாத்துக்கும் நானே அல்லாடணும். பேருக்கு மட்டும் இவர் அப்பாவா இருப்பாரா?' என்று கணவனை திட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

இவர்களது முறை வந்த பொழுது இருவரும் அந்த மருத்துவரின் அறைக்குள் நுழைந்தனர். இவர்களை கண்ட விவேக் புன்னகைத்தான்.

''வாங்க மித்து குட்டி!'' என்று வரவேற்கவும் செய்தான்.

''எங்களை உங்களுக்கு ஞாபகம் இருக்கா டாக்டர்?''

''நரேன் குழந்தையை எப்படி என்னால மறக்க முடியும்? நான் அவனோட பிரண்டு.''

''சாரி. நீங்க அவரோட பிரண்டுன்னு எனக்கு தெரியாது.''



''அவன் பெங்களூருல இருந்தான். நான் சென்னை யிலே இருந்தேன். அதனால நீங்க என்னை பார்த் திருக்க சான்ஸ் இல்லை.''

''ரெண்டு வருஷத்திற்கு முன்னாடி இவளுக்கு அடிபட்ட போது நீங்க தான் இவளை ட்ரீட் பண் ணீங்க. அதை மறக்காமல் வச்சு இருக்கீங்க போலன்னு நான் நினைச்சேன்.''

''ம்ம்ம் நல்லா ஞாபகம் இருக்கு. அப்போ தானே இவள் நரேன் பொண்ணுன்னு எனக்கு தெரிஞ்சது. ஆனா இன்னைக்கு உங்களை வச்சு தான் இவளை அடையாளம் கண்டுகொண்டேன்.''

''அந்த விபத்துக்கு அப்புறம் இவளை பார்க்க எனக்கு சான்ஸ் கிடைக்கலை. ஆளே அடையாளம் தெரியாத அளவுக்கு என்னம்மா வளர்ந்துட்டாள். அந்த விபத்து உங்க எல்லோரையும் ரொம்பவே கதி கலங்க வச்சுடுச்சு இல்ல.''

''நரேன் ரொம்பவே ஆடிப் போயிட்டான். இவளுக்கு தேவையான ரத்தத்தை கொடுத்துட்டு இவ கண்ணு முழிக்கிற வரைக்கும் இவளோட கையை பிடிச்சுக் கிட்டு ஐ.சி.யுல தவம் இருந்தானே. அதை மறக்க முடியுமா? அந்த நாளை நரேன் நினைச்சு கூட பார்க்க விரும்ப மாட்டான். ரொம்ப கஷ்டப்பட்டான்.''

''அவர் அன்னைக்கு இங்கே வந்தாரா?''

''ம்ம்ம் இங்கேயே தான் இருந்தான். பொதுவா ஐ.சி.யுல யாரையும் நாங்க அலோவ் பண்ண மாட் டோம். ஆனா அவன் அங்கே இருந்து போக மாட்டேன்னு அடம் பிடிச்சான்.''

''மித்து ரெண்டு வயசு கூட நிரம்பாத குழந்தை. அம்மா அப்பாவோட ஸ்பரிசம் சில நேரம் சில மேஜிக் செய்யும்னு நினைச்சு தான் அவனை உள்ளே இருக்க விட்டேன். இவ டிஸ்சார்ஜ் ஆகி போகிற வரைக்கும் தினமும் வந்தான். என் ரூமில் வச்சு பார்த்துட்டு போனான்.''

'அதனால தான் அந்த விபத்து சமயம் மித்து அப்பா அப்பான்னு சொன்னாளா? நான் கூட குழந்தை ஏக்கத்தில் சொல்லுறாள்னு நினைச்சேன். அவரை பார்த்ததால் தான் சொன்னாளா?'

'அப்போ மித்துக்கு ஒண்ணே முக்கால் வயசு தான் ஆச்சு. கோர்வையா பேச மாட்டாள். இல்லைன்னா நான் கண்டுபிடிச்சு இருப்பேன். எதுக்கு திருட்டுத் தனமா வந்து பார்த்தார்?' என்று தன் சிந்தனையில் மூழ்கி இருந்தவளை மருத்துவரின் குரல் கலைத்தது.

''அதை விடுங்க. இப்போ யாருக்கு என்ன பிராப்ளம்?''

''மித்துக்கு தான் பீவர்.'' என்றதும் அவளை பரி சோதிக்க ஆரம்பித்தான்.

ஊசி போட்டு மாத்திரை எழுதி வாங்கி கொண்டு அவனிடம் இருந்து விடைபெற்று வெளியே வந் தார்கள்.

அன்று இரவு மிதுளாவை தூங்க வைத்த பின்பு சிந்து நடந்ததையே நினைத்துக் கொண்டு இருந்தாள்.

'இத்தனை நாளா இவர் ஆக்ஸிடெண்ட் நடந்த போது கூட எங்களை வந்து பார்க்கலையேன்னு அவர் மேல கோபத்தில் இருந்தேன்.'



'நரேந்திரன் இருப்பது பெங்களூருல. விபத்து நடந்தது சென்னையில். நீங்க யாராவது போன் பண்ணி அவனுக்கு விவரம் சொன்னீங்களா? சும்மா அவன் வந்து பார்க்கலை பார்க்கலைன்னு குத்தம் சொல்லுறதுக்கு உனக்கு எந்த தகுதியும் இல்லை.' என்று மனசாட்சி சுட்டிக் காட்டியது.

'அவரை விட்டுப் பிரிஞ்சு வந்தால் எப்படியோ போங்கன்னு அவர் அப்படியே விட்டுடலாமா? அப்பப்போ வந்து பார்த்திருக்க வேண்டாமா?'

'அதான் விபத்து நடந்த அன்னைக்கே வந்து மித்துவுக்கு தேவையான ரத்தத்தை குடுத்துட்டு கூடவே இருந்ததா விவேக் சொல்லுறாரே! அப்புற மும் ஏன் திட்டுறே?'

'அதை நினைச்சு என்னால சந்தோஷப்பட முடி யலையே! இவருக்கு பொண்ணு மட்டும் போதும். பொண்டாட்டி தேவை இல்லை. என் பொண்ணு கண்ணு முழிக்கிற வரைக்கும் நான் எப்படி அவஸ்தைப் பட்டேன். என் பக்கத்திலே இருந்து ஒரு ஆறுதல் வார்த்தை சொல்லணும்னு இவருக்கு தோணுச்சா?' என்று மனம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

அன்று இரவு நரேந்திரன் சிந்துவை அழைத்து பேசினான்.

''ஹாஸ்பிட்டலுக்கு போனீங்களா?''

''ம்ம்ம் போனோம்.''

''மித்து இப்போ எப்படி இருக்காள்? பீவர் குறைஞ்சதா?''

''ம்ம்ம் நல்லா இருக்காள். தூங்கிறாள்.''

''தூங்கிறாளா? அப்போ வச்சுடுறேன்.'' என்று அழைப்பை துண்டித்தான்.

''என்கிட்ட ரெண்டு வார்த்தை அக்கறையா பேசிட்டால் இவர் கௌரவம் குறைஞ்சுடும்ல. வந்துட்டான்.'' என்று சிந்து வழக்கம் போல் கணவனை திட்டினாள்.



## 11

மறுநாள் காலை எட்டு மணிக்கு நரேந்திரன் தன் மகளை சந்திக்க வந்தான். சோபாவில் அமர்ந்திருந்த மிதுளா தந்தையை கண்டதும் தனது இரு கைகளை யும் விரித்தாள்.

பாய்ந்து வந்து மகளை தூக்கிக் கொண்டவன், ''ஃபீவர் சரியாகிடுச்சா பேபி?'' என்றான்.

''ம்ம்ம்.'' என்றவள் அவன் கழுத்தை கட்டிக் கொண்டு அவன் மேல் சாய்ந்து கொண்டாள்.

கைகள் நடுங்க மகளது முதுகை வருடிக் கொடுத் தவன், ''சாப்பிட்டியா பேபி?'' என்று கேட்டான்.



''இட்லி சாப்பிட்டேன்பா.''

சிந்துவிடம் திரும்பியவன், ''நான் இன்னைக்கு ஆபிஸ் போக மாட்டேன். நான் மித்துவை பார்த்துக் கிறேன். நீ ஆபிஸ் போவதா இருந்தால் போ.'' என்றான்.

''நீங்க தனியா சமாளிச்சுடுவீங்களா? மதிய சாப்பாடு...''

''அதெல்லாம் நான் பார்த்துக்குவேன்.''

''சரி அப்போ நான் ஆபிஸ் கிளம்புறேன்.''

''அவளோட மருந்தை மட்டும் என்கிட்ட குடு.'' என்று கேட்டு வாங்கிக் கொண்டவன் மகளை தன் பிளாட்டிற்கு தூக்கிச் சென்றான்.

''நீங்க தான் என்னோட டாடின்னு ஏன் என்கிட்ட சொல்லவே இல்லை. நான் உங்களை ரொம்ப மிஸ் பண்ணினேன் தெரியுமா?''

''நானும் தான் என் பேபியை ரொம்ப மிஸ் பண்ணினேன்.''

''உங்களுக்கும் அம்மாவுக்கும் சண்டையா?

''ம்ம்ம் சின்ன சண்டைடா பேபி. அதை அப்பா பார்த்துக்கிறேன்.''

''இனிமேல் என்னை விட்டுட்டு போக மாட்டீங்க தானே?''

''போக மாட்டேன்டா.''

''என்னை ஸ்கூலுக்கு கூட்டிட்டு போவீங்களா?''

''கண்டிப்பாடா. இனிமேல் மித்து பேபி என்ன சொல்லுறாளோ அதை தான் டாடி செய்வேன்.'' என்றதும் அவனது கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவனது அகமும் முகமும் மலர்ந்தது. அவனும் தன் மகளுக்கு ஒரு முத்தத்தை வழங்கினான்.

மகளோடு ராக்கிங் சேரில் அமர்ந்தான். (அது ஒரு சாய்வு நாற்காலி. முன்னும் பின்னும் ஆடக் கூடியது).

அவனது மார்பில் தலை வைத்துப் படுத்திருந்த மகளின் முதுகை வருடிக் கொடுத்தவன் மெல்ல அந்த நாற்காலியை ஆட்டினான்.

'என் சொர்க்கம் என் கை சேராதான்னு தான் இத்தனை நாளா காத்திருந்தேன். எனக்கு இது போதும் கடவுளே! சிந்து என்னை புரிஞ்சுக்கிட்டு என் கூட வாழுறதுக்கு வருவாளோ இல்லையோ. என் மகள் என்னை தேடி வந்துட்டாள்.'

'சிந்துவும் என்னை மறக்காமல் தான் இருக்காள். என்ன ஒண்ணு... என்னோட சேருவதுக்கு அவளோட ஈகோ தடுக்குது போல. இது இப்படியே நிலைச்சால் கூட எனக்கு போதும்.'

'தனித்தனி வீட்டில் இருந்தாலும் மனசளவில் ஒரே குடும்பமாய் வாழுற இந்த கொடுப்பினை கிடைச்சால் கூட எனக்கு சந்தோஷம் தான். யாருமே இல்லாத வெறுமை வாழ்க்கைக்கு இது எவ்வளவோ பெருசு' என்று நினைத்தான்.

''அப்பா! அந்த போட்டோவில் உள்ள பேபி இப்போ எங்கே?'' என்று தொலைக்காட்சியின்



அருகே இருந்த புகைப்படத்தை மிதுளா சுட்டிக் காட்டினாள்.

''அது நீ தான்டா மித்து குட்டி.''

''நானா? என்னோட போட்டோவா?'' என்றவள் தந்தையிடம் இருந்து இறங்கி சென்று அதை எடுத்து வந்தாள்.

''நீ தான். குட்டி பேபியா இருந்தப்போ எடுத்தது.''

''உங்ககிட்ட வேற போட்டோ இருக்கா?''

''நிறைய இருக்கே. மித்து பார்க்கிறியா? என் கூட வா.'' என்று படுக்கை அறைக்குள் கூட்டிச் சென்றான்.

பெரிய ஆல்பத்தை தூக்கி வந்து படுக்கையில் வைத்தான். மகளையும் அருகே வைத்துக் கொண்டு அதைப் பார்க்க ஆரம்பித்தான்.

''ஹையா! அம்மா அப்பா நானு. நான் குட்டி பேபியா இருக்கேன்ல.'' என்று சந்தோஷம் அடைந்தவளை பார்த்து முறுவலித்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

''எவ்வளோ பெரிய பொம்மை? இது இப்போ எங்கே இருக்கு?''

''அது ரொம்ப பழசாகிடுச்சுடா. அதான் அப்பா அதை தூக்கிப் போட்டுட்டேன்.''

''அப்படின்னா அது உங்ககிட்ட இல்லையா?'' என்று ஏமாற்றமாய் கேட்டாள்.

''நான் உனக்கு வேற வாங்கி தரேன்.'' என்றதும் சம்மதமாய் தலையாட்டினாள்.

‘‘இந்த போட்டோவில இருக்கிறவங்க யாரு?’’

‘‘இவங்க தான்டா உன்னோட பாட்டி. என்னோட அம்மா.’’

‘‘இவங்க எங்கே இருக்காங்க?’’

‘‘இப்போ அவங்க உயிரோட இல்லை. சாமிகிட்ட போயிட்டாங்க.’’

அன்று முழுவதும் அப்பாவும் மகளும் கதைகள் பல பேசி மகிழ்ந்தனர்.

மாலையில் நரேந்திரன் தன் மகளை அழைத்துக் கொண்டு டாக்டர் விவேக்கை சந்திக்கச் சென்றான்.

‘ஒன்றும் பிரச்சனை இல்லை. மித்து நன்றாகி விட்டாள்’ என்று தெரிந்ததும் நிம்மதியானான்.

ஏழு மணிக்கு மகளை அழைப்பதற்காக சிந்து வந்தாள். அவளோடு செல்ல மிதுளா மறுத்தாள்.

‘‘நான் இங்கே தான் சாப்பிடுவேன்.’’

‘‘அப்பா வீட்டுல இட்லி இல்லையேடா. மதியம் மாதிரி திரும்பவும் ரசம் சாதம் சாப்பிடுறியா?’’ என்று நரேந்திரன் கேட்டான்.

‘‘அன்னைக்கு இட்லி தந்தீங்களே!’’

‘‘அன்னைக்கு ஹோட்டலில் இருந்து வாங்கினேன். இப்போ தானே உனக்கு உடம்பு சரி ஆகி இருக்கு. அதனால ஹோட்டல் சாப்பாடு வேணாம்.’’

‘‘நான் இங்கே தான் சாப்பிடுவேன். இங்கே தான் தூங்குவேன்.’’



‘‘நீ போய் சாப்பாடு எடுத்துட்டு வா. அவ சாப்பிட்டு தூங்கினதும் நான் கொண்டு வந்து விடுறேன்.’’ என்று நரேந்திரன் சிந்துவின் காதில் முணுமுணுத்தான்.

சிந்து தன் வீட்டிற்கு சென்று மகளுக்கான இட்லியை எடுத்துக் கொண்டு வந்தாள். உணவை கொடுத்து விட்டு அவள் சென்றுவிட்டாள்.

நரேந்திரன் மகளை சாப்பிட வைத்து மருந்தை புகட்டி தன் தோள் மீது சாய்த்து தட்டி கொடுக்கவும் மிதுளா தூங்க ஆரம்பித்தாள்.

தூங்கும் மகளை தூக்கிக் கொண்டு சிந்துவின் வீட்டிற்கு சென்றான். அவனிடம் இருந்து குழந்தையை வாங்கியவள் உள்ளே படுக்கை அறைக்குள் சென்று படுக்க வைத்துவிட்டு வந்தாள்.

‘‘நேத்து ஹாஸ்பிட்டலில் உங்க பிரண்ட் டாக்டர் விவேக்கை பார்த்தேன். மித்து அடிபட்டு ஹாஸ்பிட்டலில் இருந்த போது நீங்க மித்து கூட ஐ.சி.யுல இருந்ததா சொன்னார். அவளை கவனிச்சுக்கிட்டதுக்கு தாங்க்ஸ்.’’

‘‘தாங்க்ஸ்?! எதுக்கு? அவ என் பொண்ணு. அவளை நான் கவனிச்சுக்கிட்டா நீ எனக்கு தாங்க்ஸ் சொல்லுவியா? எங்க ரெண்டு பேருக்கும் இடையிலே வருவதுக்கு நீ யாரு?’’ என்று அவன் கோபத்துடன் கேட்கவும், அவள் முகம் கசங்கியது.

வார்த்தையை விட்ட பின்பே அதில் உள்ள அனர்த்தம் அவனுக்குப் புரிந்தது.

''சாரி நான் அப்படி சொல்லி இருக்க கூடாது. நீ தாங்க்ஸ்னு சொல்லவும் எனக்கு சட்டுன்னு கோபம் வந்துடுச்சு. அதான்... ஐயாம் ரியலி சாரி.'' என்று உணர்ந்து மன்னிப்பு கேட்டான்.

தான் சொல்லியதும் தப்பு தான் என்று அவளுக்கு தெரிந்திருந்தும் அவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

அன்று அவன் தனக்கு ஆறுதல் கூறுவதற்கு வரவில்லை என்ற கோபம் அவளை மன்னிப்பு கேட்க விடவில்லை.

''அவ உங்க பொண்ணு. அவளை கவனிச்சுக்கிற கடமை உங்களுக்கு இருக்கு. நான் யாரோ ஒருத்தர் பெத்த பொண்ணு தானே! அதான் எனக்கு ஆறுதல் சொல்லணும்னு உங்களுக்கு தோணலை இல்ல.''

''நான் அன்னைக்கு வந்தேன் சிந்து. உங்க அண்ணனும் அப்பாவும் என்னை உன் பக்கத்திலே விடலை.''

''சும்மா சாக்கு சொல்லாதீங்க.''

''நான் என்ன சொன்னாலும் நீ நம்ப மாட்டே! அப்புறம் எதுக்கு நான் வெட்டியா எதையாச்சும் சொல்லணும்?'' என்றதும் இருவரும் சில நொடிகள் அமைதியாக இருந்தனர்.

''அன்னைக்கு என்ன நடந்துச்சு சிந்து? அந்த விபத்து எப்படி ஆச்சு?''

''மித்து ரோட்டை கிராஸ் பண்ணும் போது அடிபட்டு பேச்சு மூச்சில்லாமல் கிடந்தாள். நிறைய பிளட் லாஸ். ஒரு அம்மா தான் தெய்வம் மாதிரி வந்து காப்பாத்தி னாங்க போல! அவங்க மட்டும் இல்லைன்னா... மித்து இன்னைக்கு நம்ம கூட இருந்திருக்க மாட்டாள்.''



''உன்கிட்ட ஒரு விஷயம் கேட்கணும். அன்னைக்கு தெய்வம் மாதிரி ஒரு அம்மா நம்ம மித்துவை காப்பாத்தினதா சொல்லுற இல்ல நீ அவங்களை பார்த்து நன்றி சொன்னியா?''

''நான் அந்த விபத்து நடக்கும் போது சீனில் இல்லையே!''

''விபத்து நடந்த இடத்திலே உங்க அம்மாவும் அப்பாவும் இருந்தாங்க தானே. அவங்ககிட்ட கேட்டு தெரிஞ்சுக்கிட்டு போய் பார்த்திருக்கலாமே.''

''நான் அப்பாகிட்ட கேட்டேன். அவங்களோட அட்ரஸ் வாங்கி வச்சுக்கலைன்னு சொல்லிட்டார். இந்த சென்னையிலே நான் எங்கே போய் அவங்களை தேடுவேன்?''

''ஓ! அட்ரஸ் வாங்கி வச்சுக்கலையா? சென்னை அட்ரஸா? இல்ல பெங்களூரு அட்ரஸா?'' என்று அவன் எகத்தாளமாய்க் கேட்டான்.

''நீங்க என்ன சொல்லுறீங்கன்னு எனக்குப் புரி யலை.''

''ம்ம்ம் அன்னைக்கு மித்துவை காப்பாத்தினது எங்க அம்மா.''

''என்ன உளறுறீங்க? காப்பாத்தினது அத்தையா இருந்தால் எங்க அப்பா சொல்லி இருப்பாரே!''

''நான் ஒண்ணும் உளறலை. உண்மையை தான் சொல்லுறேன். உன்னை பார்க்கணும்னு எங்க அம்மா பெங்களூருல இருந்து கிளம்பி சென்னை வந்தாங்க. அப்போ தான் அந்த விபத்து நடந்துச்சு. உங்க அப்பா ஏன் சொல்லலைன்னு நீ அவரையே போய் கேட்டுக்கோ.'' என்றவன் அங்கிருந்து கிளம்பிவிட்டான்.

'இவர் சொல்லுறது உண்மையா? ஆனா அப்பா ஏன் சொல்லலை?'

'அத்தை மேல கோபம் இருக்கலாம். அதுக்காக அவங்க செஞ்ச நல்லதை எதுக்கு மறைக்கணும்?'



12

அன்று இரவு அவள் தன் தந்தையை அழைத்து அவரது நலனை விசாரித்து விட்டு, ''அப்பா! அன்னைக்கு ஆக்ஸிடெண்ட்ல நம்ம மித்துவை காப்பாத்தின அம்மாவை நான் இன்னைக்கு பார்த்தேன்பா.'' என்றாள்.

''எங்கே பார்த்தே?'' என்று அவர் பதட்டத்தோடு விசாரித்ததை அவளது மனம் குறித்துக் கொண்டது.

''என்னை தேடி ஆபிஸ் வந்தாங்கப்பா. ரொம்ப கஷ்டப்படுறதா சொல்லி பணம் கேட்டாங்க. நானும் என் கையிலே இருந்த ரெண்டாயிரத்தை குடுத்தேன்.''



''யாரு வந்து பணம் கேட்டாலும் தூக்கி குடுத்துடுவியா என்ன? உனக்கு என்ன கிறுக்கா பிடிச்சு இருக்கு? யாரோ உன்னை நல்லா ஏமாத்திட்டு போய் இருக்காங்க.''

''அதெப்படிப்பா ஏமாத்தினதா சொல்லுறீங்க?''

''நீ தான் அந்த அம்மாவை பார்த்ததில்லையே! அவங்க கண்டிப்பா உன்கிட்ட பணம் கேட்டு வந்திருக்க மாட்டாங்க.''

''அதெப்படி அவ்வளவு உறுதியா சொல்லுறீங்க.''

''வந்து... ஹான்... அந்த அம்மா பார்க்க ரொம்ப பெரிய பணக்கார வீட்டு அம்மாவா தெரிஞ்சாங்க. அவங்க எப்படி உன்கிட்ட வந்து பணம் கேட்பாங்க?''

''என்னப்பா அன்னைக்கு வேற மாதிரி சொன்னீங்க. இப்போ வேற மாதிரி சொல்லுறீங்க?''

''அன்னைக்கு என்ன சொன்னேன்?''

''அவங்களுக்கு தாங்க்ஸ் சொல்லுறதுக்கு அவங்களை பத்தி ஏதாச்சும் தெரியுமான்னு கேட்டப்போ... நான் கேட்டு வச்சுக்கலை. அந்த அம்மா பார்க்க பிச்சைக்காரி மாதிரி இருந்தாங்க. அவங்களை எங்கே போய் தேடுறதுன்னு சொன்னீங்க?''

''நான் அப்படியா சொன்னேன். கண்டிப்பா அப்படி சொல்லி இருக்க மாட்டேன். அந்த அம்மா முகத்திலே பணக்களை சொட்டுச்சு. காதிலே வைரத்தோடு போட்டுக்கிட்டு பட்டுப் புடவை கட்டிக்கிட்டு ஆளே படா டாம்பீகமா இருந்தாங்க.''

''நீங்க சொல்லுறதை வச்சு பார்த்தால் எங்க மாமியார் தான் என் நினைவுக்கு வராங்கப்பா.''

''நீ தேவை இல்லாமல் அவங்களை ஏன் நினைக்கிறே?'' என்று அவர் பதட்டத்தோடு கேட்கவும்,

''சட்டுன்னு என்னவோ அவங்க நினைப்பு வந்துடுச்சு.'' என்றாள்.

''நமக்கு தேவை இல்லாத நினைப்பெல்லாம் எப்பவும் வச்சுக்க கூடாதும்மா. யார் என்ன சொன்னாலும் நம்பிடாதே!''

''இனிமேல் நான் கவனமா இருக்கேன்பா.'' என்று கூறி அழைப்பை துண்டித்தாள்.

'கண்டிப்பா அப்பா தான் பொய் சொல்லுறார். நரேன் சொல்லுறது தான் உண்மை.' என்ற முடிவிற்கு வந்தாள்.

அடுத்த நாள் சிந்து நரேந்திரனை சந்தித்த பொழுது, ''நீங்க சொன்னது தான் சரி நரேன். எங்க அப்பாகிட்ட நான் விசாரிச்சேன். அவர் பேச்சில் இருந்தே அவர் உண்மையை மறைக்கிறார்னு எனக்கு புரிஞ்சது. எனக்கு அன்னைக்கே விஷயம் தெரிஞ்சிருந்தால் நான் அத்தையை தேடி வந்து நன்றி சொல்லி இருப்பேன்.''

அவன் அவளை தீர்க்கமாக பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தான்.

''ஏன் அப்படி பார்க்கிறீங்க?''

''எங்கயாச்சும் சாப்பாடை எடுத்து ஊட்டினத்துக்காக வாய் கைக்கு நன்றி சொல்லுமா? நீ சொல்லுறதும் அப்படி தான் இருக்கு.''



''மித்து அவங்க பேத்தி தான். இருந்தாலும்...'' என்றவள் சில நொடிகளுக்கு பின், ''அத்தை தான் காப்பாத்தினாங்கன்னா அவங்களுக்கு அந்த விபத்து பத்தி தெரிஞ்சிருக்குன்னு தானே அர்த்தம். அப்புறம் ஏன் அவங்க மித்துவை பார்க்க வரலை?'' என்று கேட்டாள்.

அவனது உதடுகளில் ஒரு விரக்தி முறுவல் தோன்றியது.

''நீ அன்னைக்கு சொன்னியே! ஒரு அம்மா தெய்வமா வந்து காப்பாத்தினாங்கன்னு. அது கரெக்ட் தான் சிந்து. மித்துவை காப்பாத்தின எங்க அம்மா தெய்வமாகிட்டாங்க. புரியலையா? அந்த விபத்துல நம்ம பொண்ணை காப்பாத்திட்டு எங்க அம்மா ஸ்பாட்லயே...'' என்று அதற்கு மேல் சொல்லாமல் நிறுத்தினான்.

''என்ன சொல்லுறீங்க?!'' என்று அவள் அதிர்ந்தாள்.

அவளது மூளை ஸ்தம்பித்தது என்று தான் சொல்ல வேண்டும்.

தன் மாமியார் இறந்து விட்டார் என்று விஷயம் அவளுக்கு தெரியும். விஷயம் அறிந்த அன்று அவள் வருத்தமடைந்தாள் தான். பழகிய மனிதர்கள் இறந்தால் நம் மனதில் தோன்றும் இரக்கத்தை விட கொஞ்சம் அதிகமாகவே வருத்தப்பட்டாள் தான்.

என்ன தான் அவரோடு சதா சண்டை போட்டிருந்தாலும் தன் கணவரை பெற்றவர் என்பதால் அவளுக்கு அன்று துக்கம் அதிகமாக தான் இருந்தது.

மரணம் என்பது இயற்கையான ஒன்று தானே என்று தன்னை தானே சமாதானம் செய்து கொண்டிருந்தாள்.

ஆனால் அவரின் மரணம் இயற்கையாய் அமைய வில்லை. ஒரு விபத்தின் மூலம் ஏற்பட்டு இருக்கிறது. அதுவும் தன் குழந்தையை காப்பாற்றும் முயற்சியில் அவரது உயிர் பிரிந்திருக்கிறது என்று தெரிந்ததும் அவளது மூளை சிந்திக்கும் திறனை இழந்தது.

அவளது கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது. அதை துடைக்க வேண்டும் என்று கூடத் தோன்றாமல் சிலையாய் அமர்ந்திருந்தாள்.

நரேந்திரன் மனதில் சிந்துவால் பல முட்கள் தைக்கப்பட்டு இருந்தன.

அவற்றில் ஒன்று தன் தாயின் மரணத்தை... அவரின் உயிர் தியாகத்தை சிந்து உதாசீனம் செய்து விட்டாள் என்பது.

ஆனால் அவளுக்கு விஷயமே தெரியவில்லை என்பதை உணர்ந்த அன்று அந்த வலி கொஞ்சம் மறைந்தது. இன்று அவளின் அதிர்ந்த நிலையும் அவளது கண்ணீரும் அவனுடைய மனவலியை முழுவதுமாக நீக்கின.

பத்து நிமிடங்கள் கடந்தும் அவள் அசைவின்றி இருக்கவும், ''சிந்து! இங்கே பாரு!'' என்று அவளை உலுக்கினான்.

அவனது உலுக்கலில் நிமிர்ந்தவள் சில நொடிகள் பேந்த பேந்த விழித்தாள். அதன் பின்பே அவன் சொன்ன விஷயம் அவளுக்கு நினைவு வந்தது.



''ஐயோ! இது எப்படி எனக்கு தெரியாமல் போச்சு?''

''உன்னை சுத்தி நடக்கிறதை நீ உணரும் நிலையிலே அன்னைக்கு இல்லையே! அதனால தான் நான் உன்னை பார்க்க வந்ததும் உன் அண்ணனும் அப்பாவும் என்னை விரட்டி விட்டதும் கூட உனக்கு தெரியலை.''

''அத்தையோட மரணத்தை பத்தி எங்க அப்பாவுக்கும் அண்ணனுக்கும் தெரியுமா?''

''உங்க அப்பாவுக்கு நல்லாவே தெரியும். உங்க அண்ணனுக்கு விஷயம் தெரியுமான்னு எனக்கு தெரியலை.''

''அவர் ஏன் என்கிட்ட சொல்லலை? அன்னைக்கு சொல்லி இருந்தால் என் மூளையிலே பதியாமல் போய் இருக்கலாம். அதுக்கு அப்புறமா இந்த ரெண்டு வருஷத்திலே ஒரு நாள் கூட சொல்லவே இல்லையே.''

''எங்க அம்மா இறந்த விஷயம் உனக்கு தெரியும் தானே!''

''அத்தை இறந்துட்டாங்கன்னு மட்டும் ஒரு நாள் எங்க அப்பா சொன்னார். ஆனா இந்த விபத்தில் இறந்தாங்கன்னு சொல்லவே இல்லை. ஏன் என்கிட்ட சொல்லாமல் மறைச்சார்?''

''இதை நீ அவர்கிட்ட தான் கேட்கணும். ஒரு பக்கம் அம்மாவோட காரியம். இன்னொரு பக்கம் மித்து. நான் பெங்களூருக்கும் சென்னைக்குமா அலைஞ்சேன். அன்னைக்கு விபத்து நடந்த போது என்னால உன்

பக்கத்துல இருந்து ஆறுதல் சொல்ல முடியாமல் போனதுக்கு இது தான் காரணம்.''

''அன்னைக்கு உங்க அப்பா கூட சண்டை போடுற தெம்பும் மனநிலையும் என்கிட்ட இல்ல. அம்மாவோட பாடியை பெங்களூருக்கு கொண்டு போக வேண்டி இருந்துச்சு.''

''சாரி நரேன். ஐயாம் ரியலி சாரி. என்னை விட நீங்க தானே மோசமான மனநிலையில் இருந்திருக்கீங்க. இது தெரியாமல் இத்தனை நாளும் நான் உங்களை கரிச்சு கொட்டிக்கிட்டு இருந்தேன்.''

அன்று இரவு படுக்கையில் படுத்தவளால் தூங்க முடியவில்லை. கண்களில் இருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

'அத்தை! சாரி அத்தை. நீங்க உயிரோட இருந்த வரைக்கும் உங்களுக்கும் எனக்கும் ஒத்து வந்ததே இல்லை. நரேன் யாருக்கு சொந்தம்னு நாம எப்பவுமே அடிச்சுக்கிட்டோம்.'

'நாமளும் நிம்மதியா இல்லாமல்... அவரையும் நிம் மதியா இருக்க விடாமல் என்னன்னவோ நடந்துடுச்சு.'

'உங்களால தான் நான் நரேனை பிரியுற முடிவை எடுத்தேன். என் வாழ்க்கையை கெடுக்க வந்த வில் லியா தான் உங்களை இத்தனை நாளா நினைச்சுக் கிட்டு இருந்தேன்.'

'ஆனா இன்னைக்கு தான் புரியுது. என் பெண்ணை... என் வாழ்க்கையை காப்பாத்தி குடுத்த தெய்வம் நீங்க!'



'நான் அன்னைக்கு போட்ட சண்டையை நினைச்சு பார்த்தால்... எவ்வளவு சின்னபிள்ளைத்தனமா நான் நடந்துக்கிட்டேன்னு இன்னைக்கு என்னால உணர முடியுது.'

'ஆனா அப்போ நான் கொஞ்சம் கூட அது மாதிரி உணரலை. சாரி அத்தை. நீங்க உயிரோடு இருந் தப்போ கேட்க முடியாத மன்னிப்பை இப்போ கேட் கிறேன். என்னை மன்னிச்சிடுங்க.'



## 13

மேலும் இரு நாட்கள் கடந்தன. அப்பாவும் மகளும் ஒன்றாக சேர்ந்து கும்மி அடித்தார்கள். அவர்கள் இருவரும் சிந்துவை கண்டு கொள்வதே இல்லை.

'எல்லா பிள்ளைகளும் எனக்கு அம்மா அப்பா ரெண்டு பேருமே வேணும்னு சொல்லும். ஆனா இந்த மித்து குட்டி அப்பா தன்னை மட்டும் கவனிச்சுக் கிட்டால் போதும்னு சுத்துறாள்.'

'அவர் தான் என்னை வெறுப்பேத்துறாருன்னு பார்த்தால் இவள் அதுக்கு மேல இருக்காள். எனக்குன்னு வந்து வாய்க்கிறாங்க பாரு! எல்லாம் என் நேரம்.'

'அத்தை! உங்க பேத்தி உயிரை காப்பாத்தின மாதிரி என் வாழ்க்கையும் காப்பாத்தி தாங்க! உங்க

பிள்ளையோட சேர்ந்து வாழ நீங்க தான் வழி செய்யணும்' என்று சிந்து தன் மாமியாரிடம் மானசீகமாக கோரிக்கை வைத்தாள்.

''அம்மா! எனக்கு டிரஸ் மாட்டி விடுங்க. நான் வெளியே போறேன்.''

''வெளியே போறியா? யார் கூட?''

''நானும் டாடியும் ஷாப்பிங் போறோம்.''

'அப்போ நான்? என்னை கூட்டிட்டு போக மாட்டாரா? என்னை சுத்தமாகவே தள்ளி வைக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டாரா?'

'அவர் என்ன கூப்பிடுறது. நானும் ரெடியாகி நின்னால் என்னை கூட்டிட்டு போய் தானே ஆகணும்' என நினைத்தவளாய் தானும் தயாரானாள்.

நரேந்திரன் வந்து வீட்டின் அழைப்பு மணியை அடிக்கவும், படுக்கை அறையில் இருந்து மிதுளா துள்ளிக் குதித்து ஓடி வந்தாள்.

சிந்து கதவைத் திறந்ததும் மிதுளா தாயிடம் கையாட்டி விடைபெற்று வெளியேறினாள்.

நரேந்திரன் குனிந்து தன் மகளை மட்டுமே பார்த்தான். அவளது கையை பற்றியவன் சிந்துவை நிமிர்ந்தும் பாராமல் சொல்லிக் கொள்ளாமல் கூட சென்று கொண்டே இருந்தான்.

'இவன் வேணும்னே என்னை வெறுப்பேத்துறான். போடா போ!'

'எப்போ எங்கே வெளியே போனாலும் எனக்காக ஏதாச்சும் வாங்கிட்டு வருவ இல்ல. இன்னைக்கு உன்



பொண்ணுகிட்ட குடுத்து அனுப்புவ இல்ல... அதை நான் திருப்பி உன்கிட்டயே குடுத்து உன்னை இன்சல்ட் பண்ணலை' என்று கறுவிக் கொண்டாள்.

'எங்கே வெளியே போனாலும் நரேந்திரன் எனக்கும் என் மாமியாருக்கும் எதையாவது வாங்கிட்டு தான் வருவார். அத்தையை விட எனக்கு தான் அதிகமா வாங்கிட்டு வருவார். ஆனால் ஒரு நாள் கூட அத்தை அதுக்காக என்கிட்ட சண்டை போட்டதில்லை!

'ஆனால் எப்பவாச்சும் எனக்கு குறைஞ்சால் நான் நரேனை உண்டு இல்லைன்னு பண்ணி இருக்கேன். எப்படி அப்படி ஒரு சீப் மென்ட்டாலிட்டி எனக்கு இருந்துச்சு?'

'அது தான் பக்குவப்படாத மனசுன்னு சொல்லுறதோ? இப்படி தான் அத்தைகிட்ட எல்லாத்துக்குமே நான் தகராறு பண்ணினேனோ?' என நினைத்த பொழுது அவளுக்கு தலை வலிக்க ஆரம்பித்தது.

அன்று வீடு திரும்பிய மிதுளா கையில் எதையுமே கொண்டு வரவில்லை என்றதும் சிந்து குழம்பினாள்.

''என்னடா மித்து குட்டி ஒண்ணுமே வாங்கலையா?''

''இல்லைம்மா. டாடி பெரிய டெடி வாங்கி தந்தாங்க. இவ்வளோ பெருசு'' என்று தன் கையை முடிந்த வரை உயர்த்திக் காட்டினாள்.

''அது எங்கே?''

''டாடி வீட்டிலே இருக்கு. அது உட்கார நாங்க ஒரு சேர் கூட வாங்கினோம் தெரியுமா?''

''வேற என்னவெல்லாம் வாங்கினீங்க?''

மகள் சொன்ன நீண்ட பட்டியலில் தனக்கான பொருள் எதுவும் இல்லை என்பதை கண்ட சிந்துவுக்கு ஏமாற்றமாக இருந்தது.

அடுத்த இரு தினங்கள் கழித்து மிதுளா மீண்டும் ஷாப்பிங் செல்வதாக சொன்னதும் சிந்துவிற்கு கடுப்பாக இருந்தது.

அவள் வெட்கத்தை விட்டு, ''மித்து குட்டி! அம்மாவுக்கு ஏதாச்சும் வாங்கிட்டு வரீங்களா?'' என்றாள்.

''என்ன வாங்கிட்டு வரணும்?''

''தலைக்கு வைக்கிற கிளிப், எழுதுறதுக்கு பென், இல்லைன்னா பர்ஸ் இப்படி ஏதாச்சும் ஒண்ணு.''

''ஓகேம்மா.'' என்று தலையாட்டி விட்டு மிதுளா சென்றாள்.

அன்று நரேந்திரன் மகளை மேக்ஸ் ஷோ ரூமிற்கு அழைத்துச் சென்றான். மிதுளாவின் விருப்பத்தை கேட்டு அறிந்து கொண்டு அவளுக்காக நிறைய ஆடைகள் வாங்கினான்.

பில் போட செல்லும் பொழுது அங்கே ஒரு ஷெல்ப் முழுவதும் பர்ஸ்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததை கண்ட மிதுளா சிந்து சொன்னதை நினைவில் வைத்து கொண்டு அதன் அருகே சென்றாள். அதில் இருந்து மிதுளா ஒன்றை தேர்ந்தெடுத்தாள்.

''இது பெரியவங்க பர்ஸ்டா பேபி. உனக்கு எதுக்கு?''



''எனக்கு இல்லைப்பா. அம்மாவுக்கு. அவங்க தான் பர்ஸ் வாங்கிட்டு வர சொன்னாங்க.'' என்றதும் நரேந்திரன் மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

''இப்போ உனக்கு வேண்டியதை யார் வாங்கி தராங்க?''

''எங்க அப்பா.''

''அதே மாதிரி உங்க அம்மாவுக்கு எது வேணும்னாலும் அவங்க அப்பா உங்க தாத்தா வாங்கி தருவார். நாம வாங்க வேண்டியதில்லை.'' என்றவன் அந்த பர்ஸை அங்கேயே வைத்துவிட்டு வந்துவிட்டான்.

வீட்டிற்கு கொண்டு வந்து விட்டவன் தன் கைகளில் இருந்த பைகளை அங்கே இருந்த மேஜை மேல் வைத்துவிட்டு மகளிடம் விடைபெற்று சென்று விட்டான்.

அந்தப் பைகளை எடுத்து ஆராய்ந்த சிந்து நொந்தே போனாள்.

அவள் ஒவ்வொரு ஆடையாக எடுத்து பார்ப்பதை கண்ட மிதுளா அவள் அருகே வந்து, ''இந்த டிரஸ் நல்லா இருக்காம்மா? நானே செலக்ட் பண்ணினேன்.'' என்று பெருமையுடன் சொன்னாள்.

''அம்மாக்கு ஒண்ணும் வாங்கலையாடா மித்து குட்டி?''

''நான் உங்களுக்கு ஒரு பர்ஸ் வாங்கினேன். ஆனா டாடி அதை வேணாம்னு வைக்க சொல்லிட்டாங்க. உங்களுக்கு வேண்டியதை தாத்தா வாங்கி தருவாங்களாம்.''

சிந்து ஒன்றுமே சொல்லாமல் படுக்கையில் சென்று படுத்துக் கொண்டாள்.

'எனக்கு வேண்டியதை எங்க அப்பா தான் வாங்கி தரணுமா? இவர் வாங்கி தர மாட்டாராமா? அப்புறமா இவருக்கு பொண்டாட்டின்னு நான் எதுக்கு இருக்கேன்?'

'மித்துவும் இவரும் என்னை சுத்தமா ஒதுக்கிடு வாங்களோ?' என நினைத்த போது அழுகை வந்தது.

''அம்மா! எனக்கு பசிக்குதும்மா.'' என்று மகள் அழைக்கும் குரல் கேட்டவுடன் கண்ணோரம் துளிர்த்த நீரை சுண்டி விட்டவள் எழுந்து சென்றாள்.



14

சிந்து மறுநாள் தன் தோழி சுமதியை ஹோட்டலில் வைத்து சந்தித்தாள்.

''என்னாச்சு சிந்து ரொம்ப டல்லா இருக்கே? நான் போன தடவை பார்க்கும் போது கூட நல்லா தானே இருந்தே!''

''ம்ம்ம் நரேன் வந்திருக்கார்.''

''எந்த நரேன்?'' என்றதும் தோழியை சிந்து முறைத்தாள்.



''சரி சரி... முறைக்காதே! எங்கே வந்திருக்கார்? சென்னைக்கா? நீ அவரை எங்கே வச்சு பார்த்தே?''

''மொத்தமா சென்னைக்கே வந்துட்டார். எங்க அபார்ட்மெண்ட்டில் குடி வந்திருக்கார்.'

''இன்ட்ரஸ்டிங். அவருக்கு வேற கல்யாணம் எதுவும் ஆகி இருக்கா?'' என்றதும் சிந்து திரும்பவும் முறைத்தாள்.

''இப்போ எதுக்கு என்னை முறைக்கிறே?''

''என் கழுத்திலே தொங்குதே தாலி. அதுக்கு என்ன அர்த்தம்?''

''அதை நீ தான் சொல்லணும். எதுக்கு அதை இன்னும் போட்டுக்கிட்டு இருக்கே? ஷோவுக்கா? இல்லை மத்த ஆண்கள்கிட்ட இருந்து உன்னை பாதுகாக்கும்னு நினைச்சு போட்டு இருக்கியா?''

''என்ன சுமதி நீ கூட இப்படி கேட்கிறே?''

''வேற எப்படி கேட்க சொல்லுறே? இந்த தாலி உன் கழுத்திலே தொங்கிறதால அவருக்கு ஏதாச்சும் நன்மை இருக்கா சொல்லு. நீ அவரை வேண்டாம்னு சொல்லிட்டு வந்து ரெண்டு வருஷம் ஆகப் போகுது. இந்த ரெண்டு வருஷத்திலே நீ அவரை போய் பார்க்கவே இல்லை. அப்படிப்பட்ட உனக்காக அவர் ஏன் வெயிட் பண்ணனும்? அவரும் அவர் வாழ்க்கையை வாழ வேண்டாமா?''

''நான் மட்டும் இங்கே சந்தோஷமா வாழ்ந்துகிட்டா இருக்கேன்?''

''கண்டிப்பா அவரை விட நீ எல்லா விதத்திலும் நல்ல விதமா தான் வாழ்ந்துகிட்டு இருக்கே சிந்து. உனக்கு துணையா உன் குடும்பம் இருக்கு. நரேந்திரனோட பிம்பமா உன் பொண்ணு இருக்காள். ஆனால் அவருக்கு யார் இருக்கா? அவர் ஏன் உன்னை நினைச்சுக்கிட்டு தன் வாழ்க்கையை வாழாமல் போகணும்?''

''நான் இல்லாமல் தனியா வாழ முடியலைன்னால் என்னை தேடி வர வேண்டியது தானே. அவங்க அம்மா இறந்து ஒன்றரை வருஷம் ஆகுதுல. எனக்கும் அவருக்குமா சண்டை. சண்டை எனக்கும் என் மாமியாருக்கும் தானே! அவங்க தான் உலகத்திலே இல்லைல. அப்போ இவர் என்னை தேடி வர வேண்டியது தானே!''

''உன் லாஜிக்படியே பார்த்தாலும் சண்டை உனக்கும் உன் மாமியாருக்கும்னா... நீ அவங்களை விட்டு மட்டும் தள்ளி இருந்திருக்கணும். எதுக்காக நரேந்திரனை பிரிஞ்சே?''

''அவர் தானே அவரோட அம்மாவை விட்டுட்டு வர மாட்டேன்னு சொன்னார்.''

''இது நல்ல கதையா இருக்கு சிந்து. அவங்க அம்மாவுக்கு நரேந்திரன் ஒரே பையன். அவரை விட்டால் அவங்களுக்கு வேற யார் ஆதரவு? அவங்களை தனியா விட்டுட்டு உன் பின்னாடியே அவர் எப்படி வர முடியும்?''

''சரி அன்னைக்கு வர வேண்டாம். அம்மா இறந்த பின்னாடி வர வேண்டியது தானே?''



''அந்த வீட்டை விட்டு வெளியேறும் போது சிந்து மேடம் என்ன சொல்லிட்டு வந்தீங்கன்னு ஞாபகம் இருக்கா?'' என்றதும் சிந்து அமைதியானாள்.

''நானே சொல்லட்டுமா? 'நரேன்! இனிமேல் நீங்களும் நானும் ஒண்ணா வாழுறது சாத்தியமில்லாதது. என்னால உங்க அம்மா கூட தினமும் மல்லுக்கட்ட முடியாது. ஒரே டார்ச்சரா இருக்கு. நான் என் வழியை பார்த்துக்கிட்டு போறேன். நீங்க உங்க வழியை பார்த்துக்கோங்க. என் பின்னாடியே வந்து நீங்களும் டார்ச்சர் பண்ணாதீங்க.'

'அப்புறமா நானும் உங்க பொண்ணும் காணாமல் போயிடுவோம். பார்த்துக்கோங்க. இனிமேலாச்சும் எங்களை நிம்மதியா வாழ விடுங்க.' என்ன டயலாக்கை சரியா சொன்னேனா?'' என்று சுமதி கேட்டதும் சிந்து தலை கவிழ்ந்தாள்.

''பேசுறதை எல்லாம் இவ பேசிட்டு வருவாளாம். அப்புறமா அவர் ஏன் என்னை தேடி வரலைன்னு கேட்டு வைப்பாளாம். அந்த மனுஷனை பார்த்தால் உனக்கு எப்படி தெரியுது? கேனையாவா?''

''ப்ச்... இப்போ இவ்வளவு பேசுற நீ அன்னைக்கு ஏன் சுமதி ஒண்ணும் சொல்லாமல் இருந்தே?''

''சொல்லலைன்னா நினைக்கிறே! நான் சொன்ன எதுவும் உன் மூளையிலே பதியலை. இந்த ரெண்டு வருஷ பிரிவு உன் மனசை கொஞ்சமா மாத்தி இருக்கு. அதான் இப்போ வந்து என்னை பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்கிறே!''

''உண்மையிலே உனக்கும் உன் மாமியாருக்கும் அப்படி என்ன தான் சண்டை. நான் முன்னாடி அவங்களை பத்தி பேச்சு எடுத்தாலே கடுப்பாவே! அதனால நானும் கேட்டதில்லை இப்பவாவது சொல்லு. நீ வசதி இல்லாத குடும்பத்தை சேர்ந்தவள்னு எதுவும் குத்தி காட்டி பேசுவாங்களா?''

''சே! சே! என் வசதி பத்தி எங்க அத்தை ஒரு நாளும் பேசினதில்லை. நானும் நரேனும் லவ் மேரேஜா பண்ணிக்கிட்டோம்? எங்க அத்தை பார்த்து தானே என்னை அவருக்கு கட்டி வச்சாங்க? அதனால எங்க ரெண்டு பேரோட ஸ்டேட்டஸ் டிபரன்ஸை எங்க அத்தை ஒரு நாளும் குத்தி காட்டி பேசினதில்லை.''

''வேற என்ன தான்டி பிரச்சனை?''

'' நரேன் மேல யாருக்கு அதிக உரிமை இருக்குன்னு சண்டை வரும். அது மட்டுமில்லாமல் அவங்க பழைய பஞ்சாங்கமா சில விஷயங்கள் சொல்லுவாங்க. அதை என்னால ஏத்துக்கிட்டு செய்ய முடியாது. அதுல சண்டை வரும். மித்து பிறந்த பின்னால குழந்தை வளர்ப்பில் ரெண்டு பேரும் முரண்பட்டோம்.''

''புரியலை... அப்படி உன்னை என்ன செய்ய சொன்னாங்க?''

''ம்ம்ம் என் விஷயத்துல எதுக்கெல்லாம் அடிச்சுக் கிட்டோம்னு கேட்டால் அது ஒரு பெரிய லிஸ்டே இருக்கும். மித்து விஷயத்துல ஒரு உதாரணம் சொல்லுறேன் கேளு.''



''மித்துக்கு நாப்கின் மாட்டிவிட்டால் அவங்களுக்கு பிடிக்காது. வெளியே போகும் போது மட்டும் மாட்டினால் பத்தாதா? வீட்டுல இருக்கும் போதும் மாட்டணுமா? அது சூடு. அதை மாட்டுறதால தான் குழந்தை நேரா நடக்க மாட்டேங்கிறாள். காலை எப்படியோ வச்சு நடக்குறாள்னு சொல்லுவாங்க.''

''அவங்க சொன்னதில் தப்பு ஒண்ணும் இலையே. நாப்கின் கெட்ட சூடு தானே! அதை மாட்டினால் சில குழந்தைகள் அன்ஈஸியா ஃபீல் பண்ணி வித்தி யாசமா தான் நடப்பாங்க. இது ஒரு குத்தமா?''

''ம்ம்ம் அவங்க சொன்னதில் உள்ள நியாயம் எனக்கு இப்போ புரியுது சுமதி. ஆனா அப்போ புரியலை. நான் நரேனை பிரிஞ்சு வந்ததும் மித்துக்கு நாப்கின் போடுறதை நிறுத்திட்டேன். என்னோட சம்பளத்தில் நாப்கின்காக அவ்வளவு செலவு பண்ண முடியாதுன்னு தான் நிறுத்தினேன்.''

''மித்துவுக்கு உட்காரும் இடத்தில் அடிக்கடி பொரி பொரியா வரும். நாப்கின் போடுறதை நிறுத்தின பின்னால அது வரவே இல்லை. அப்போ தான் எங்க அத்தை சொன்னதோடு உட்கருத்து எனக்கு புரிஞ்சது.''

''உங்க அத்தையை மாதிரி உங்க அம்மாவும் ஓல்ட் ஜெனரேஷன் தானே! அவங்க நீ மித்துக்கு நாப்கின் மாட்டி விடுறதை பார்த்து உன்னை திட்டலையா?''

''எங்க அம்மாவா? அவங்க என்ன தெரியுமா சொன் னாங்க? உங்க மாமியார் தன் பிள்ளை சம்பாதிப்பதை நீ கரைக்கிறேன்னு பொறாமையில் சொல்லுறாங்க.

உன் பொண்ணு மேல உள்ள அக்கறையில் ஒண்ணும் சொல்லலைன்னு சொன்னாங்க. நரேன் சம்பாத்தியம் உனக்கும் உன் பொண்ணுக்கும் தான். அதிலே அவங் களுக்கு எந்த உரிமையும் இல்லைன்னு சொன்னாங்க.''

''பொண்ணை பெத்த அம்மா இப்படி அறிவுரை சொன்னால் அந்த பொண்ணு வாழ்க்கை கோவிந்தா ஆகாமல் எப்படி இருக்கும்?'' என்று சுமதி முணு முணுத்தது சிந்துவின் காதில் விழவே செய்தது.

''உன் வாழ்க்கையை நீ பாதி கெடுத்தே! உனக்கு தப்பா அட்வைஸ் பண்ணி உங்க வீட்டுல உள்ளவங்க மீதியை கெடுத்துட்டாங்க. போனதை விடு. இப்போ இன்னொரு சான்ஸ் உனக்கு கிடைச்சு இருக்கு. இந்த தடவையாவது எந்த தப்பும் பண்ணாதே! உன்னோட அம்மாகிட்ட எந்த அட்வைஸும் கேட்காதே. உன் மனசுக்கு சரின்னு பட்டதை செய்.''

சுமதி சொன்னதைப் பற்றி சிந்து சிந்திக்க ஆரம்பித் தாள். சிறிது நேரம் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதும் பின் வெளியே வேடிக்கை பார்ப்பதுமாய் இருந்தனர்.

''சிந்து! இப்போ சொல்லு. நரேன் என்ன சொன்னார்.''

''ப்ச் ஒண்ணும் சொல்லலை. நான் தான் உன் அப்பான்னு கூட மித்துகிட்ட சொல்லலை. மூணாம் மனுஷன் மாதிரி பழகிக்கிட்டு இருந்தார். அப்புறமா இந்த பக்கத்து வீட்டு வசந்தா அக்கா...'' என்றவள் வசந்தா பேசியதை விளக்கினாள்.

''அப்படின்னா இப்போ அப்பாவும் பொண்ணும் ராசியாகிட்டாங்கன்னு சொல்லு.''



''ம்ம்ம்ம் என்னை கண்டுக்கவே மாட்டேங்கிறாங்க.''

''ஓ! அதான் விஷயமா? என்னடா திடீர்னு நரேந்திரன் மேல சிந்துவுக்கு பாசம் பொத்துக்கிட்டு வருதேன்னு பார்த்தேன்.''

''அவர் மேல எனக்கு எப்பவுமே பாசம் உண்டு.''

''அப்படியா? இது எத்தனை நாளா?''

''எனக்கு அவர் மேலே எந்த கோபமும் இல்லை.''

''அப்படியா? மித்துவை ஹாஸ்பிட்டலில் வந்து பார்க்கலைன்னு இத்தனை நாளா திட்டிக்கிட்டே இருந்தியே! அதுக்கு பேர் என்ன?''

''ப்ச் அவர் இங்கே தான் இருந்திருக்கார் தெரியுமா?'' என்றவள் அதையும் விளக்கினாள்.

''உண்மை தெரிஞ்சவுடனே அவர் மேல உள்ள கோபம் குறைஞ்சிடுச்சுன்னு சொல்லு. அதை விட் டுட்டு எனக்கு அவர் மேலே கோபமே வந்ததில் லைன்னு பொய் சொல்லாதே!''

''ம்ம்ம் நீ சொல்லுறது சரி தான். என்னோட கோபம் இப்போ போயிடுச்சு.''

''சரி அவர் மேல தப்பு இல்லைன்னா அவர் கூட போய் சேர்ந்து வாழுற வழியை பார்க்க வேண்டியது தானே!''

''ப்ச் எப்படி போகிறதுன்னு தெரியலை.''

''நடந்து தான் போகணும். இந்த வயசிலே தவழ்ந்து போனால் நல்லாவா இருக்கும்?''

''கிண்டல் பண்ணாதே சுமதி. அவர் என்னை வான்னு கூப்பிட்டால் நான் அடுத்த நொடியே போயிடுவேன். ஆனா அவர் திரும்ப திரும்ப நீ எனக்கு வேணாம். என் பொண்ணு மட்டும் போதும்னு சொல்லுறார். அப்புறம் எப்படி நான் போக முடியும்?''

''நீ இப்படியே பேசிக்கிட்டு இரு. நீயும் வாழாதே! அந்த மனுஷனையும் வாழ விடாதே!'' என்று திட்டி விட்டு சுமதி சென்றுவிட்டாள்.

'இவளுக்கென்ன ஈஸியா சொல்லிட்டு போயிட்டாள். அவர் என்னை வேண்டா வெறுப்பா பார்க்கிறார். நான் எப்படி அவர் முன்னாடி போய் நிக்கிறது?' என்று புலம்பிக் கொண்டே சிந்து வீட்டிற்குச் சென்றாள்.



15

அடுத்த நாள் மிதுளா சிறுவர் பூங்காவில் விளை யாடிக் கொண்டிருந்தாள். அவளைக் கண்காணித்த வாறு சிந்து ஒரு பெஞ்சில் அமர்ந்திருந்தாள்.

நரேந்திரன் அலுவலகப் பையுடன் அங்கே வந்தான். பையை சிந்துவின் அருகே வைத்துவிட்டு மகள் விளையாட உதவி செய்யச் சென்றான். சிறிது நேரத் திற்கு பின் அந்தப் பை அருகே வந்து அமர்ந்தான்.



''எனக்கு வேண்டியதை எல்லாம் எங்க அப்பா வாங்கி தருவார்னு மித்துகிட்ட சொன்னீங்களா?'' என்று சிந்து கேட்டாள்.

''ஆமா சொன்னேன். என் பொண்ணுக்கு தானே நான் வாங்கி தர முடியும். ஊரிலே உள்ள எல்லா பொண்ணுங்களுக்கும் நான் வாங்கி தர முடியுமா?''

''நான் ஊரான் வீட்டு பொண்ணாவே இருந்துட்டு போறேன். நீங்க ஒண்ணும் எனக்கு வாங்கி தர வேண்டாம். எங்க அப்பாவே எனக்கு வேண்டியதை வாங்கி தருவார்.''

''அதை தானே நானும் சொன்னேன். அப்புறம் எதுக்கு கோபிச்சுக்கிறே?''

''எங்கப்பா என்னைக்கும் தன் கடமையை மறந்தவ ரில்லை. ஆனா நீங்க ஒரு நல்ல அப்பாவா? உங்க பொண் ணுக்கு தேவையான எல்லாத்தையும் செஞ்சீங்களா?''

''கண்டிப்பா நான் நல்ல அப்பா தான். என் கடமையில் இருந்து இது வரை நான் தவறியதில்லை.''

''சும்மா பேசாதீங்க நரேன். நான் உங்களை விட்டு பிரியும் போது என்ன சொன்னீங்க?''

''எது விஷயமா?''

''என்னைக்கும் மித்துவோட செலவை நான் தான் செய்வேன்னு சொன்னீங்களா இல்லையா?''

''ஆமா சொன்னேன்.''

''சும்மா வாய் வார்த்தையா சொன்னால் போதுமா? அதுபடி செய்ய வேண்டாமா?''

''நான் என்ன செய்யலைன்னு சொல்ல வரே?''

''மித்து ஹாஸ்பிட்டல் பில் எவ்வளவு வந்துச்சுன்னு உங்களுக்கு தெரியுமா? அதை கட்ட நான் எப்படி கஷ்டப்பட்டேன்னு தெரியுமா?''

அவளை தீர்க்கமாக பார்த்துக் கொண்டே, ''எப்படி கட்டினே?'' என்று கேட்டான்.

''நீங்க எனக்கு வாங்கி தந்த நகையை வித்து கட்டினேன்.''

''சோ பணம் என்னோடது தானே!''

''எப்ப இருந்து நரேன் இப்படி மாத்தி மாத்தி பேச கத்துக்கிட்டீங்க?''

''நான் என்னைக்கும் ஒரே மாதிரி தான் இருக்கேன்.''

''உங்களை விட்டு பிரியும் போது நீங்க வாங்கி தந்த நகை எல்லாம் திருப்பி குடுத்ததுக்கு என்ன சொன்னீங்க? அது நான் உனக்கு தந்த பரிசு. இனி மேல் அதிலே நான் உரிமை கொண்டாட முடியாதுன்னு சொன்னீங்களா இல்லையா?''

''ஆமா. இப்பவும் அதே தான் சொல்லுறேன்.''

''அப்போ நகையை வித்து நான் பணம் கட்டினால்... அது எப்படி உங்க பணமாகும்?''

''ஓ! நீ அப்படி வரியா?'' என்றவன் தன் அருகே இருந்த மடிகணினியை இயக்கி எதையோ நோண்ட ஆரம்பித்தான்.

''நான் இங்கே எவ்வளவு சீரியஸா பேசிக்கிட்டு இருக்கேன். நீங்க என்னடான்னா கொஞ்சம் கூட அக்கறை இல்லாமல் இருக்கீங்க. ரொம்ப மாறிட்டீங்க நரேன்.''



அவன் அவளுக்கு பதில் அளிக்காமல் தன் மடிகணினியை அவள் பக்கம் திருப்பினான்.

''படிச்சு பாரு! இங்கிலீஷ் தெரியும் தானே!''

அவள் அவனை முறைத்துக் கொண்டே அது என்னவென்று ஆராய ஆரம்பித்தாள். மிதுளாவின் மருத்துவ செலவை கட்டியதற்கான பில் அது.

அவன் தன் கார்டு மூலம் பணம் செலுத்தியதாக பதிவு செய்யப்பட்டு இருந்தது. அதைக் கண்டவள் விழித்தாள்.

''தினமும் பெங்களூருக்கும் சென்னைக்கும் பிளைட்டில் பறந்து வரத் தெரிஞ்ச எனக்கு என் பொண்ணோட மெடிக்கல் பில்லை கட்ட தெரியாதா?''

''அச்சோ! நரேன் நான் பொய் சொல்லலை. நான் நகையை வித்து பணம் ரெடி பண்ணி கட்டினேன்.''

''கவுண்டரில் போய் கட்டினியா? இல்லை வேற யார்கிட்டயாச்சும் குடுத்து விட்டியா?''

தன் அப்பாவிடம் தான் அவள் அந்தப் பணத்தைக் கொடுத்தாள். அவர் பெயரை வெளியே சொல்ல முடியாமல் அமைதியானாள்.

''இந்த பில்லை நீங்க கட்டினதாவே இருக்கட்டும். அவளோட ஸ்கூல் பில்... நான் திரும்பவும் என்னோட நகையை வித்து தான் அதை கட்டினேன்.''

''உன்கிட்ட வேற பணமே இல்லையா? எதுக்கு ஒவ்வொரு நகையா விக்கிறே?''

''என்கிட்ட ஏது பணம்?''

''ஆபிஸ்ல சம்பளம் வாங்குறியா? இல்லை ஓசியா வேலை பார்த்து குடுக்கிறியா?''

''என் ஒரு ஆள் சம்பளத்தில் தானே நாலு ஜீவன்கள் வண்டி ஓடுது.''

''ஏன் உங்க அப்பாகிட்ட எந்த பணமும் இல்லையா?''

''அவர்கிட்ட ஏது பணம்? அவருக்கு பென்ஷனும் கிடையாது. இருந்த சேமிப்பெல்லாம் கரைச்சு தான் எங்களுக்கு கல்யாணம் பண்ணி வச்சார்.''

''உன் கல்யாணத்தில் அவர் என்ன செலவு செஞ்சார்?''

''என்ன இப்படி கேட்கிறீங்க? நம்ம கல்யாணத்தை அவர் தானே நடத்தி வச்சார்.''

''உன்கிட்ட அப்படியா சொன்னார்? எனக்கு தெரிஞ்சு அவர் ஒத்த ரூபா கூட கல்யாணத்துக்குன்னு என்கிட்டவோ என் அம்மாகிட்டவோ தரலை.''

'என்ன சொல்லுறார் இவர்? அப்பா கல்யாண செலவை ஏத்துக்கிட்டதா தானே சொன்னார்' என்று குழம்பினாள்.

''எனக்கு தெரிஞ்சு உங்க அண்ணன் கல்யாணத்துல கொஞ்ச பணத்தை வாரி விட்டார். உங்க அப்பாவுக்கு உன் அண்ணன் பணம் தர மாட்டானா?''

அண்ணன் பணம் எதுவும் தருகிறானா இல்லையா என்று அவளுக்குத் தெரியவில்லை. அதுபற்றி அவளது தந்தை அவளிடம் எதையும் தெரிவித்ததில்லை.



''அது போகட்டும் விடு. இந்த பில்லையும் பாரு!'' என்றவன் மீண்டும் மடிகணினியை அவள் புறம் திருப்பினான்.

அது பள்ளி கட்டணம் செலுத்திய ரசீது. செலுத்திய வரின் பெயரில் அவன் பெயர் தெளிவாய் எழுதப்பட்டு இருந்தது.

சிந்து தன் தலையை பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

'என்னை சுத்தி என்ன நடக்குது? இந்த பணத் தையும் நான் அப்பாகிட்ட தான் குடுத்தேன். பீஸ் ஏற்கனவே கட்டியாச்சுன்னா... அந்த பணத்தை அவர் என்கிட்டே திருப்பி தந்திருக்கணுமே!'

'திருப்பி தராட்டினாலும் ஒரு வார்த்தை சொல்லி இருக்க வேண்டாமா? ஏன் சொல்லலை? அவர் சொல்லாமல் மறைத்த விஷயங்களின் பட்டியல் பெரிதாகி கொண்டே இருக்கே! அவரைப் பத்தி எதுவுமே தெரியாத ஏமாளியா நான் இருக்கேனா?'

மனைவியின் வாடிய முகத்தை பார்த்தவன், ''சிந்து! பணம் தானே போகுது விடு. அதுக்கு ஏன் இவ்வளவு வருத்தப்படுறே?'' என்றான்.

''லட்ச கணக்கான பணம் நரேன்.''

''ம்ம்ம் தெரியுது. இனிமேல் கேர்புல்லா இருந் துக்கோ.''

அவள் மனது சமாதானம் அடைய மறுத்தது.

'நம்ம செல்வநிலைக்கு இது ஒண்ணுமே இல்லை. பணத்தை உன் வீட்டு மனுஷங்ககிட்ட தா

குடுத்து இருக்க. அதான் பேரை வெளியே சொல்ல மாட்டேங்கிறே! அவங்களை நம்பி ஏமாந்துட்டோம்னு பீல் பண்ணுறியா?' என்று தனக்கு தானே கேட்டுக் கொண்டு அவளையே பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தான்.

அவளை அப்படி பார்க்க அவனுக்கு கஷ்டமாக இருந்தது. அங்கிருந்து செல்ல எண்ணி எழுந்து நின்றான்.

''நான் கிளம்புறேன் சிந்து. அப்புறம் பார்க்கலாம். மித்து விளையாடிக்கிட்டு இருக்காள். அவளை பார்த்துக்கோ.''

சரி என்று தலையசைத்தவள், ''நரேன்! ஐயாம் சாரி. உண்மை தெரியாமல் பேசிட்டேன். சாரி.'' என்றாள்.

''இட்ஸ் ஓகே. விடு.'' என்றவன் தன் வீடு நோக்கிச் சென்றான்.



## 16

விளையாடி முடித்த மிதுளா வீட்டிற்கு வர மறுத்தாள். அப்பாவின் வீட்டிற்கு தான் செல்வேன் என்று அடம்பிடித்தாள். வேறு வழியின்று சிந்து மகளை அங்கே கொண்டு போய் விட்டாள்.



எப்படியும் இரவு உணவை அப்பா கையால் தான் சாப்பிடுவேன் என்று அடம் பிடிப்பாள் என நினைத்து அவள் அதை எடுத்துக் கொண்டு மேலே சென்றாள்.

வீட்டின் கதவு திறந்து தான் இருந்தது. அவள் உள்ளே நுழைந்த பொழுது மிதுளா 'த்தூ!' என்று நடுவீட்டில் துப்பிக் கொண்டிருந்தாள்.

''அடிக்கழுதை! இப்படியா நடு ஹாலில் துப்புவே!''

''நல்லாவே இல்லைம்மா. உவ்வே!''

''எதுவா இருந்தாலும் வாஷ் பேஸினில் போய் துப்ப வேண்டியது தானே? எதை சாப்பிட்டு இப்படி துப்பி வச்சே?''

''அப்பாவோட சாப்பாடு.''

''சாப்பாட்டையா துப்பின? உனக்கு கொழுப்பு கூடிடுச்சு.'' என்று அதட்டியவள் அதை துடைக்க ஆரம்பித்தாள்.

அந்த இடத்தை சுத்தம் செய்தவள் தன் கைகளை கழுவி விட்டு வந்தாள்.

''சாப்பிடுறியா? அம்மா ஊட்டவா?''

''நோ. அப்பா தான் ஊட்டணும்.''

மனைவியிடம் இருந்து உணவை வாங்கி கொண்ட நரேந்திரன் மகளுக்கு ஊட்ட ஆரம்பித்தான்.

''ரெண்டு பேரும் ரொம்ப ஓவரா தான் கொஞ்சிக்கிறாங்க'' என்று கிண்டல் செய்த சிந்து, தன் மகள் எதை சாப்பிட்டு துப்பி வைத்தாள் என்று ஆராய ஆரம்பித்தாள்.

உணவு மேஜை மேல் இருந்த உணவை சுவை பார்த்தாள். அவளது முகம் அஷ்ட கோணலாக மாறியது.

''நரேன்! இதையா சாப்பிடுறீங்க? இது என்னது? ஒரு ருசியும் இல்லை. எந்த கடையிலே வாங்கினீங்க?''

''கடையிலே வாங்கலை. நானே சமைச்சேன்.''

''ஏன் நீங்களே சமைச்சீங்க? உங்ககிட்ட பணமா இல்லை. கடையிலே நல்லதா வாங்கி சாப்பிட வேண்டியது தானே!''

''தினமும் வெளியே சாப்பிட எனக்கு வசதி இருக்கு தான். ஆனா அது என் வயித்துக்கு ஒத்துக்கலை. வயிற்று வலியால ரொம்ப கஷ்டப்பட்டேன். அதான் இப்பெல்லாம் செல்ஃப் குக்கிங் பண்ண ஆரம்பிச்சுட்டேன்.''

''தினமும் நீங்களே சமைக்கிறீங்களா? எப்படி? நீங்க கிட்சன் பக்கம் போனதே இல்லையே!''

''ம்ம்ம் எங்க அம்மா இருந்திருந்தால் எனக்கு சமைச்சு தந்திருப்பாங்க. அவங்க தான் இப்போ உயிரோட இல்லையே! அதான் வேற வழி இல்லாமல் பழகிக்கிட்டேன்.''

சிறிது நேர மௌனத்திற்கு பின், ''உங்க வீட்டோட வேலை செஞ்சாங்க இல்ல சரோஜாம்மா. அவங்க எங்கே போனாங்க?'' என்று கேட்டாள்.

''அம்மா இறந்த பின்னால அவங்க வேலைக்கு வரலை. அவங்களுக்கு ஒரு ஆபரேஷன் நடந்துச்சு. அதனால சில மாசம் வராமல் இருந்தாங்க. அப்புறமா அவங்க மகளுக்கு பிரசவம் வந்துச்சு. இப்படியும் அப்படியுமா அவங்க இப்போ வேலைக்கு வரலை.''



''ரெண்டு மாசத்துக்கு முன்னாடி வந்து நான் திரும்பவும் வேலைக்கு வரட்டுமான்னு கேட்டு வந்தாங்க. நான் சென்னை போகப் போறதா சொல்லி அவங்களை சென்னைக்கு கூப்பிட்டப்போ மகன் மகளை எல்லாம் விட்டுட்டு வெளியூருக்கு வர லைன்னு சொல்லிட்டாங்க.''

''ஓ! அவங்க இல்லைன்னா என்ன... இங்கே சென்னையிலே வேற ஆளை தேடி சமைக்க சொல்ல வேண்டியது தானே?'' என்று கேட்டாள்.

''ம்ம்ம் நான் எப்போ வெளியே போயிட்டு எப்போ வீட்டுக்கு வருவேன்னு எனக்கே தெரியாது. புது ஆளை வீட்டோட வேலைக்கு வச்சுக்கிறதும் எனக்கு பிடிக்கலை. அதான் அந்த ஆப்ஷனை டிரை பண்ணி பார்க்கலை.''

''எத்தனை சமையல் புக் வருது. புக் இல்லைன்னா யூ- டியூப்ல எத்தனை வீடியோ வருது. அதை பார்த்து சமைச்சிருந்தால் இவ்வளவு மோசமா இருக்காது தானே.''

''சாப்பாடு ருசியா இருக்கணும்னா அதை எல்லாம் பார்த்து சமைக்கலாம். நான் பசிக்கு தானே சாப்பிடுறேன். ருசிக்காக சாப்பிடுறதில்லை. அதனால எனக்கு இது பெரிய விஷயமா இல்லை.''

நரேந்திரனுக்கு ருசியாய் சாப்பிட அவ்வளவு பிடிக்கும். ஒவ்வொரு சாப்பாட்டையும் ரசித்து

ருசித்து சாப்பிடுவான். அதனால் அவனது விளக்கம் சிந்துவிற்கு ஆச்சரியத்தையும் கூடவே ஒரு வலியை யும் உண்டு பண்ணியது.

சிந்து நிமிர்ந்து நரேந்திரனைப் பார்த்தாள். அவன் தன் தோள்களை குலுக்கினான்.

அவனுடைய இன்றைய நிலைக்கு தானும் ஒரு காரணம் என்று சிந்துவிற்கு உறுத்தியது. அவள் அந்த குழம்பை ஒரு பாத்திரத்தில் ஊற்றி எடுத்துக் கொண்டு தன் வீடு நோக்கிச் சென்றாள்.

அந்தக் குழம்பை வேறு ஒரு பாத்திரத்தில் கொட்டி விட்டு வீட்டில் அவள் வைத்திருந்த சாம்பாரை அந்த கிண்ணத்தில் ஊற்றிக் கொண்டு வந்து உணவு மேஜையில் வைத்தாள்.

அவள் குழம்பை எடுத்து சென்றதையோ அதில் சாம்பாரை மாற்றி திரும்ப கொண்டு வந்ததையோ நரேந்திரன் கவனிக்கவில்லை. அவனும் மிதுளாவும் தங்களுடைய உலகத்தில் லயித்திருந்தனர்.

அவன் கதை என்ற பேரில் வாய்க்கு வந்ததை எல்லாம் சொல்லி மகளுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்தான்.

மிதுளா சாப்பிட்டு முடித்ததும், ''அப்பா! எனக்கு தூக்கம் வருது.'' என்று தன் இரு கைகளையும் விரித்து தன்னை தூக்குமாறு கூறினாள்.

அவன் அவளைத் தூக்கித் தன் தோளில் போட்டுக் கொண்டு தட்டிக் கொடுக்க ஆரம்பித்தான். மிதுளா அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.



அவன் குறுக்கும் நெடுக்குமாய் நடக்க ஆரம்பித் தான். சிந்து அவர்களை பார்த்துக் கொண்டு அமைதி யாய் நின்றிருந்தாள்.

''நீ போய் சாப்பிடு சிந்து. அவ தூங்கினதும் கொண்டு வந்து விடுறேன்.'' என்றதும் சிந்து வெளியேறினாள்.

மிதுளா உடனே தூங்கிவிட்டாள். நரேந்திரன் படுக்கையறையில் அவளை படுக்க வைத்தான். ஏசியை ஆன் செய்துவிட்டு வெளியே வந்தான்.

'இப்பவே கொண்டு போய் விட்டால் முழிச்சுட்டு அழுவாள். ஒரு மணி நேரம் கழிச்சு கொண்டு போய் விடலாம். முதல்ல நாம சாப்பிடுவோம்' என நினைத் தவன் உணவு மேஜைக்கு சென்றான்.

சில நாட்கள் அவன் இரவு வேளைகளில் சாதம் சாப்பிடுவது வழக்கம். இன்றும் அவன் சாதம் தான் சமைத்திருந்தான்.

தட்டில் சாதத்தை வைத்தவன் குழம்பை ஊற்றுவ தற்காக அதில் கரண்டியை போட்டு கலக்கியவன் குழம்பினான்.

''இது நான் வச்ச குழம்பு மாதிரி இல்லையே!'' என்று சொல்லிக் கொண்டே அதை ருசி பார்த்தான்.

'இது சாம்பார்! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மித்துகுட்டி சாப்பிட்ட சாம்பார்.' என்று அவனுக்கு புரிந்து போனது.

'இது எப்போ படி ஏறி மேலே வந்துச்சு? என் குழம்பு எங்கே?' என்று வீட்டில் தேடி பார்த்தான்.

'இவள் தான் அதை எடுத்துட்டு போய் சாம்பாரை மாத்தி வச்சு இருக்காளா? பெரிய தியாக செம்மல்!' என்று திட்டிக் கொண்டே அவளுக்கு போன் செய்தான்.



## 17

அலைபேசி அழைப்பு தன் கணவனிடம் இருந்து வருகிறது என்று பார்த்ததுமே சாம்பாரைப் பற்றிக் கேட்கத் தான் கூப்பிடுகிறான் என்று சிந்துவிற்கு தெரிந்து போயிற்று.

''சொல்லுங்க நரேன்.''

''மேலே என் வீட்டுக்கு வா.''

''நான் சாப்பிட்டு முடிச்சதும் வரேன் நரேன்.''

''உன் சாப்பாட்டை தூக்கிக்கிட்டு மேல வா.''

''இல்லை நரேன்...''

''வான்னு சொன்னால் கேட்க மாட்டியா?'' என்று கத்திவிட்டு அழைப்பை துண்டித்தான்.

''ஒரு நாள் நல்ல சாப்பாடு கிடைச்சால் சரின்னு சந்தோஷமா சாப்பிட வேண்டியது தானே! சும்மா கத்துறார்.'' என்று புலம்பினாலும்,

தன்னுடைய இட்லியையும் அவன் வைத்த குழம்பையும் எடுத்துக் கொண்டு மாடியேறி அவன் வீட்டு அழைப்பு மணியை அடிக்கவே செய்தாள்.



கதவை திறந்து விட்டவன் அவளை முறைக்கவும் ''இப்ப நான் என்ன பண்ணிட்டேன்னு முறைக்கிறீங்க?'' என்றாள்.

''என் குழம்பை தா. எதுக்கு எனக்கு தெரியாமல் அதை எடுத்துட்டு போனே?''

''ஆமா இவர் பெருசா பாய் வீட்டு பிரியாணி சமைச்சார். அதை சாப்பிட ஆசைப்பட்டு நான் தூக்கிட்டு போனேன்.''

''நான் வச்ச குழம்பு ருசியா இல்லைன்னு தெரியுதுல்ல... அப்புறம் எதுக்கு எடுத்துட்டு போனே? நீ பெரிய தியாகியோ?''

''ஒரு சின்ன சாம்பார் விஷயத்துக்கு எதுக்கு தியாகி பட்டத்தை எல்லாம் இழுக்குறீங்க?''

''உன் சாம்பாரை வச்சு நீ இட்லி சாப்பிடு. நான் என் குழம்பை வச்சு சாதம் சாப்பிடுறேன்.''

''ப்ச் நீங்க இதை சாப்பிட வேணாம்னு நினைச்சு தான் நான் அதை மாத்தி வச்சேன். நீங்க என்னடான்னா என் கண்ணு முன்னாடி உட்கார்ந்து அதை சாப்பிட போவதா சொல்லுறீங்க. வேணும்னா இப்படி பண்ணுவோம். ரெண்டு பேரும் ரெண்டு சாப்பாட்டையும் ஷேர் பண்ணிக்குவோமா?''

அவன் யோசனையாய் நின்றிருக்கவும், ''ப்ளீஸ் நரேன். ஓகேன்னு சொல்லுங்க.'' என்றதும் சம்மதித்தான்.

''சாதத்துக்கு குழம்பை ஊத்திக்க வேண்டாம். இன்னைக்கு ஈவினிங் தயிர் வாங்கிட்டு வந்தேன்.

அதை ஊத்திக்கலாம். தொட்டுக்க பொட்டேட்டோ சிப்ஸ் இருக்கு.''

இருவரும் அருகருகே அமர்ந்து தங்களுடைய சாப்பாட்டை பகிர்ந்து உண்ண ஆரம்பித்தார்கள். சில வருடங்களுக்கு பின் கணவனுடன் ஒன்றாய் அமர்ந்து உணவு அருந்துவதால் சிந்து மகிழ்வாக உணர்ந்தாள்.

வெகு நாட்களுக்கு பின் வீட்டு உணவின் சுவை அவன் நாவை சுண்டி இழுக்கவே செய்தது.

''வீட்டு சாப்பாடு வீட்டு சாப்பாடு தான்.'' என்று அவனை வாய்விட்டு சொல்லவும் வைத்தது.

''வீட்டு சாப்பாடை அவ்வளவு மிஸ் பண்ணுனீங் கன்னா... தினமும் சாப்பிட வேண்டியது தானே!''

''இந்த சாப்பாட்டுக்காகவே இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொல்லுறியா?'' என்று கேட்டதும்.

அவள் தன் பற்களை கடித்துக் கொண்டு இரு கைக ளையும் அவன் கழுத்தின் அருகே கொண்டு சென்று அவன் கழுத்தை நெறிப்பது போல் பாவனை செய்தாள்.

''கொன்னுடு. நானும் எங்க அம்மா கூட போய் சேர்ந்துடுறேன்.'' என்றதும் அவள் அமைதியானாள்.

'ஆஹா! இவளுக்கு அம்மா பேச்சை எடுத்தாலே பிடிக்காதே! இப்ப என்ன சொல்ல போறாள்னு தெரியலையே' என்று அவள் முகத்தையே பார்த்தான்.

அவள் தீவிர முகபாவத்தோடு, ''எல்லோரும் ஒரு நாள் அத்தைகிட்ட போகத் தான் வேணும். இப்பவே நாம மேல போகிறதுக்காகவா அத்தை தன் உயிரை



குடுத்து நம்ம மித்துவை காப்பாத்தி இருக்காங்க?'' என்று ஆழ்ந்த குரலில் கேட்டவளை நம்ப முடியாத அதிசயத்தோடு நரேன் பார்த்தான்.

அவள் சூனியத்தை வெறித்துக் கொண்டே, ''உங் களுக்கு ஒரு விஷயம் ஞாபகம் இருக்கா? அத்தை என்னைக்குமே என்னை ஸ்கின் கலர் லெக்கின்ஸ் போட விட மாட்டாங்க.''

''லெக்கின்ஸ் போட்டாலே திட்டுவாங்க. அதுலயும் ஸ்கின் கலர் போட்டால்... அன்னைக்கு பயங்கர சண்டையே நடக்கும்.''

''சண்டை போட்டாலும் நான் அவங்க பேச்சை மீறி அதை போட்டுக்கிட்டு வெளியே போனதில்லை. ஆனா வீட்டுக்குள்ளே போட்டு வெறுப்பேத்தி இருக்கேன்.''

''கொஞ்ச நாள் முன்னாடி ரோட்டில் ஒரு பொண்ணு ஷார்ட் டாப்ஸும் ஸ்கின் கலர் லெக்கின்ஸும் போட்டுட்டு வந்தாள். தூரத்தில் இருந்து பார்க்கும் போது கீழே எதுவுமே போடாமல் இருக்கிற மாதிரியே இருந்துச்சு.''

''அதை பார்த்ததும் எனக்கு பக்குன்னு ஆகிடுச்சு. என் பக்கத்துல இருந்து வந்த கமெண்ட்டை என்னால காது குடுத்து கேட்க முடியலை. நான் போட்டுட்டு போய் இருந்தாலும் என்னை பத்தி நாலு பேர் இப்படி தானே கேவலமா கமெண்ட் பண்ணி இருப்பாங் கன்னு அன்னைக்கு தோணுச்சு.''

''அன்னைக்கு நான் அத்தைக்கு மனசுக்குள்ளே தாங்க்ஸ் கூட சொன்னேன். லெக்கின்ஸ்

போடுவதால் நம்ம கால் தசைகள் பாதிக்கப்படுதுன்னு ஒரு மருத்துவ கட்டுரை படிச்சேன். அதுக்கு அப்புறமா தான் லெக்கின்ஸ் போடுவதை நிறுத்தினேன்.''

''நான் ஜீன்ஸ், ஃபுல் ஸ்கர்ட் போடுறதுக்கு அத்தை தடை சொன்னதில்லை. அப்போ இதுக்கு மட்டும் ஏன் சொல்லுறாங்க? நம்மளோட நல்லதுக்கு தான் சொல்லுறாங்கன்னு அன்னைக்கு என்னால புரிஞ்சுக்க முடியலை.''

''என் டிரஸ் விஷயத்துல தலையிட இவங்களுக்கு என்ன உரிமை இருக்குன்னு மட்டும் தான் யோசிச்சேன். சண்டை போட்டேன்.''

''அதெல்லாம் எவ்வளவு சில்லியான விஷயம்னு இப்போ தோணுது. இதே மாதிரி இன்னும் சில விஷயங்கள் கூட இருக்கு.''

''இருபது வயசிலே சரியா தெரியுற விஷயங்கள் முப்பது வயசிலே தப்புன்னு தோணும்னு நான் கேள்விப்பட்டு இருக்கேன். அது ரொம்பவே கரெக்ட்.''

''இருபத்தியொரு வயசுல... காலேஜ் முடிஞ்ச உடனே நான் கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்புன்னு நினைக்கிறேன். உலக அனுபவம் அவ்வளவா இல்லாத வயசு அது!''

''ரெண்டு வருஷம் வேலைக்கு போய் அங்கே பல தரப்பட்ட மக்களை சந்திச்சு அவங்களோட ஒத்து போவதற்கு என்னை நானே கொஞ்சம் மாத்திக்க பழகி இருந்தால் இந்த மாதிரி அத்தை கூட சின்ன சின்ன விஷயங்களுக்கு சண்டை வந்திருக்கா தோன்னு இப்போ தோணுது.''



''சில பேர் சீக்கிரமா பக்குவப்படுறாங்க. எனக்கு பக்குவம் லேட்டா தான் வந்துச்சு. நான் கொஞ்சம் மக்கு தான் போல.''

அவள் பாட்டுக்கு மடை திறந்த வெள்ளமாக பேசிக் கொண்டே போனாள்.

'பேசுவது தன் மனைவி தானா?' என்று நரேன் ஆச்சரியம் அடைந்தான்.

'அம்மா! உங்க மருமகள் பேசினதை கேட்டீங்களா? அவளோட மனமாற்றத்தை பார்க்க நீங்க இல்லாமல் போயிட்டீங்களேம்மா.'

'என் வாழ்க்கை என்னாகுமோன்னு தான் பயந்து புலம்பிக்கிட்டு இருந்தீங்க. எனக்கென்னவோ இவள் தான் அனுப்பின டைவர்ஸ் நோட்டீஸை மறந்துட்டு என் கூட வாழ வந்துடுவாள்னு தான் தோணுது' என்று மனதோடு பேசிக் கொண்டான்.

அவர்கள் சாப்பிட்டு முடித்ததும் சிந்து அந்த குழம்பை கொட்ட சென்றாள்.

''ஹேய்! அதை ஏன் கீழே கொட்ட போறே? அதை வச்சுடு. நான் நாளைக்கு சாப்பிட்டுக்குவேன்.''

''இதையா? நான் இன்னைக்கே வேணாம்னு சொல்லிக்கிட்டு இருக்கேன். இதுல நீங்க இதை பிரிஜ்ஜில் வச்சு நாளைக்கு சாப்பிட போறதா சொல்லுறீங்க.''

''நாளைக்கு நான் புதுசா வச்சால் மட்டும் அது சூப்பர் டேஸ்ட்டிலா வந்துடப் போகுது. இதே மாதிரி தானே அதுவும் இருக்கும். அப்புறம் எதுக்கு இதை வேஸ்ட்டா கொட்டணும்?''

''பேசாமல் மூணு வேளையும் என் வீட்டுல வந்து சாப்பிடுறீங்களா?''

'இவள் இங்கே வர மாட்டாளாம். நான் சாப்பாட் டுக்காக இவள் வீட்டுக்கு போகணுமா? முடியாது போடி!' என மனதிற்குள் நினைத்தவன், ''அதெல்லாம் சரியா வராது. நான் வர மாட்டேன்.'' என்று மறுத்தான்.

''பிடிவாதம். பிடிச்சா உடும்பு பிடி.'' என்று திட்டிக் கொண்டே அவள் சமையல் அறையை ஆராய ஆரம்பித்தாள்.

''என்ன பண்ண போறே?''

''ம்ம்ம் இதை சாப்பிடுற லெவலுக்கு மாத்தியாச்சும் வச்சுட்டு போறேன்.'' என்றவள் சமையலில் இறங்கினாள்.

நரேந்திரன் தன் மடிகணினியோடு சென்று மகள் அருகே அமர்ந்து கொண்டு வேலையில் மூழ்கினான்.

பிரிஜ்ஜில் மாவு பாக்கெட் இருப்பதை கண்டவள் அந்தக் குழம்பை சரி பண்ணிக் கொண்டே இந்தப் பக்கம் கொஞ்சம் சாம்பாரும் வைத்தாள்.

'நாளைக்கு தோசை சுட்டு சாப்பிடும் போது சாம்பாரை ஊற்றிக் கொள்ளட்டும்' என நினைத்தாள்.

அவள் வேலையை முடித்ததும் படுக்கை அறை யில் எட்டிப் பார்த்தாள். அவன் தன் மடிகணினியை மூடி வைத்துவிட்டு வெளியே வந்தான்.

''இவ்வளவு நேரமா என்ன பண்ணினே? நான் அந்தக் குழம்பை வைக்க கூட இவ்வளவு நேரம் செலவு பண்ணலை.'' என்றதும் முறைத்தாள்.



அவன் உணவு மேஜையில் உள்ள குழம்பை ருசி பார்த்தான்.

''நாட் பேட். என்ன இருந்தாலும் என் குழம்பு டேஸ்ட்டுக்கு பக்கத்துல கூட வரலை.'' என்றதும் அவன் முதுகில் ஒரு போடு போட்டாள்.

''கொஞ்சம் சாம்பாரும் பண்ணி வச்சிருக்கேன். சூடு ஆறினதும் ரெண்டையும் பிரிஜ்ஜில் வச்சுடுங்க.''

''சாம்பாரா? ஒண்ணு வாங்கினால் ஒண்ணு இலவசம்கிற கதையா இருக்கு.''

''பிரிஜ்ஜில் தோசை மாவை பார்த்தேன். அதான் கொஞ்சம் சாம்பார் வச்சேன்.''

''இன்னைக்கு காலையிலே யார் முகத்திலே முழிச்சேன்? வீட்டு சாப்பாடு சாப்பிடுற யோகம் அமைஞ்சிருக்கு.''

அவன் என்னவோ அதை விளையாட்டாய், சந்தோஷமாய் தான் சொன்னான். ஆனால் கேட்டுக் கொண்டிருந்த அவளுக்கு தான் மனம் பாரமாகியது.

'ஒண்ணு நான் வீட்டோட இருந்து இவரையும் மித்துவையும் பார்த்துக்கலாம். இல்லைன்னா நரேன் ஆபிசில் நான் இஷ்டப்பட்ட டைம்க்கு வேலைக்கு போய் வீடு திரும்பலாம்.'

'அவருக்கும் பிரச்சனை இருக்காது. மித்துவுக்கும் பிரச்சனை இருக்காது. ஆனால் இப்போ அவரும் சாப்பாட்டுக்கு கஷ்டப்படுறார்.'

'நானும் மித்துவை பார்க்க ஆளை ஏற்பாடு பண் ணிக்கிட்டு அவங்க குழந்தையை சரியா

பார்த்துக்குவாங்களா மாட்டாங்களான்னு அல்லாடுறேன்.'

'இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இருக்க போறோம்?'

'அப்பாவும் அம்மாவும் டூரில் இருந்து திரும்பியதும் என் பிரச்சனை சரியாகிடும். மித்துவை அவங்க பார்த்துக்குவாங்க. ஆனால் இவர் பிரச்சனை எப்போ தீரும்?' என்ற யோசனையில் மூழ்கினாள்.

தூங்கும் குழந்தையை தோளில் சாய்த்து கொண்டு நரேந்திரன் அவளிடம் வந்து, ''போலாமா சிந்து?'' என்றான்.

தன் யோசனையில் இருந்து மீண்டவள் அவனுடன் தன் வீடு நோக்கிச் செல்லத் தொடங்கினாள்.



18

நரேந்திரனுக்கும் சிந்துவுக்கும் உள்ள உறவு அங்குள்ள அனைவருக்கும் தெரிந்து விட்டதால் சிந்து அவன் வீட்டிற்கு எந்த நேரம் வேண்டுமானாலும் சென்று வந்தாள்.

தனித்தனி வீட்டில் வசித்து கொண்டு அவரவர் வீட்டில் குளித்து சாப்பிட்டு தூங்கி எழுந்தாலும்



மூவரும் ஒரே குடும்பமாய் மனதளவில் வாழ ஆரம்பித்திருந்தார்கள்.

சில தினங்கள் கடந்தன. ஒரு நாள் சிந்து மேலே ஏறி வந்து பார்த்த பொழுது நரேந்திரன் ராக்கிங் சேரில் அமர்ந்திருந்தான்.

மிதுளா அவன் மார்பு மீது படுத்துக் கொண்டு தன் தந்தையுடன் கதை பேசிக் கொண்டிருந்தாள்.

''அப்பா! ஆட்டுங்கப்பா!'' என்று அதிகாரம் வேறு செய்து கொண்டிருந்தாள்.

நரேந்திரன் அந்த நாற்காலியை மெல்ல ஆட்டிக் கொண்டே அவள் கேட்டதற்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

''தரையிலே, சோபாவிலே எல்லாம் உட்காரும் பழக்கம் உனக்கு இல்லையா மித்து?'' என்று சிந்து பொறாமையில் பொங்கினாள்.

அவள் சொல்ல வருவது புரியாமல் மிதுளா விழிக்கவும், ''கீழே இறங்கு. ரெண்டு பேரும் சோபாவில் போய் உட்கார்ந்து பேசுங்க.'' என்றாள்.

''நான் அப்பா மேல படுத்துக்கிட்டு தான் பேசுவேன். எங்க டாடி.'' என்றவள் நிமிர்ந்து அவனது தாடையில் முத்தம் பதித்தாள்.

அவனும் தன் மகளது உச்சியில் ஒரு முத்தம் பதிக்கவும் சிந்துவிற்கு ஏக்கமும் பொறாமையும் சம அளவில் தோன்றி அவளை அலைக்கழித்தது.

''அவரை இருபத்தி ஏழு வருஷம் வளர்த்த என் மாமியாருக்கே விட்டு கொடுக்காத ஆள் நான்! நீ

நேத்து பிறந்த சில்வண்டு! உனக்கு விட்டு குடுத்திடுவேனா?''

மனைவியின் பேச்சை கேட்ட நரேந்திரனுக்கு சிரிப்பு வந்தாலும் அவன் அதை வெளியே காட்டாமல் முகத்தை சாதாரணமாய் வைத்து கொண்டான்.

''இன்னைக்கு வேணா மகள் பெருசா தெரியலாம். ஆனா என்னைக்கு இருந்தாலும் என்கிட்ட தான் வந்தாகணும். அதை ஞாபகம் வச்சுக்கோங்க.''

மிதுளா நிமிர்ந்து அவன் மார்பின் மீது தவழ்ந்து போய் தன் தந்தையின் காதருகே சென்று, ''அம்மா என்னப்பா சொல்லுறாங்க?'' என்று கேட்டாள்.

''அம்மா என்னை திட்டுறாள்டா பேபி.''

''இன்னும் உங்க சண்டை முடியலையா?''

அவன் இல்லை என்னும் விதமாய் உதட்டை பிதுக்கவும் அவள் தன் தந்தையிடம் இருந்து இறங்கி தாயின் முன் சென்று நின்றாள்.

''அம்மா! நாங்க எங்க ஸ்கூலில் யார் கூடயாச்சும் சண்டை போடணும்னா உன் பேச்சு கா சொல்லிட்டு இப்படி செய்வோம்.'' என்று தன் வலது கட்டை விரலை உயர்த்தி தன் உதடுகள் அருகே வைத்து எதிரே இருப்பவரின் முன் நீட்டி காட்டினாள்.

''அதுக்கு அப்புறமா திட்டவும் மாட்டோம். பேசவும் மாட்டோம். நீங்களும் அப்பாகிட்ட அப்படி சொல்லிட்டு வீட்டுக்கு போங்க.''

''அடிப்பாவி! என்னையும் அவரையும் நீயே பிரிச்சுடுவ போல!'' என்று மனதிற்குள் சிந்து ஜெர்க்கானாள்.



''இப்படியா மித்து குட்டி செய்யணும்?'' என்று கேட்டு, கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஒரு பறக்கும் முத்தத்தை தன் கணவனை நோக்கி அனுப்பி வைத்தாள்.

''அம்மா! இது ஃபிளையிங் கிஸ். இது கூட தெரியாதா?'' என்று தன் கால்களை உதைத்துக் கொண்டு சொன்ன மிதுளா,

''சண்டை போடுறவங்களுக்கு அதை குடுக்க கூடாது.'' என்று கூறி தன் தலையில் அடித்துக் கொண்டாள்.

நரேந்திரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவன் அடக்கமாட்டாமல் சிரிப்பதைக் கண்டு சிந்து அவனை முறைத்தாள்.

''ஹேய்! நான் என்ன செஞ்சேன்? என்னை எதுக்கு முறைக்கிறே? அம்மாவும் பொண்ணும் பேசிக்கிட்டீங்க. முறைப்பு மட்டும் எனக்கா?'' என்றான்.

''முறைப்புக்கு முன்னாடி கூட தான் ஒண்ணு குடுத்தேன். அதெல்லாம் உங்க கண்ணுக்கு தெரியாதே!''

''அதான் என் பொண்ணு ஜட்ஜா மாறி தீர்ப்பு சொல்லிட்டாள் இல்ல. அதெல்லாம் செல்லாது செல்லாது.''

அவர்கள் இருவரின் பேச்சை இடையிட்ட மிதுளா, ''அப்பா! எனக்கு ஐஸ் க்ரீம் வேணும்.'' என்றாள்.

அவன் எழுந்து போய் அவளுக்காக வாங்கி வைத்திருந்ததை சமையலறையில் உள்ள பிரிஜ்ஜில் இருந்து எடுத்து வந்தான்.

அங்கே சிந்து மகளை மிரட்டிக் கொண்டிருந் தாள்.

''உனக்கு எதுக்கு இப்போ ஐஸ் க்ரீம்? நீ பண்ணி வச்ச காரியத்துக்கு உனக்கு உங்க அப்பா ஐஸ் க்ரீம் குடுத்து பாராட்டுவாரா?'' என்று கிண்டல் பண்ணிக் கொண்டிருக்கும் பொழுது அவன் ஐஸ் க்ரீமோடு சென்று நின்றான்.

'ஆஹா! இதை இப்போ கொடுக்கலாமா? வேண் டாமா?' என ஒரு நொடி யோசித்தவன், மனைவியின் முறைப்பையும் மீறி மகளிடம் அதை கொடுத் தான்.

''தாங்க்ஸ் பா!'' என்று சொல்லி வாங்கி கொண்ட மிதுளா தொலைக்காட்சி முன் சென்று அமர்ந்து பொம்மை படம் பார்க்க ஆரம்பித்தாள்.

மகள் அகன்றதும் சிந்துவிற்கு வேறொரு நினைவு வந்து அவளை அலைக்கழிக்க ஆரம்பித்தது. கவலை அப்பிய முகத்தோடு அமர்ந்திருந்தாள்.

'மித்து பண்ணின கலாட்டாவுக்கா இவள் இவ் வளவு சீரியஸ் ஆகிறாள்?' என நினைத்த நரேந்திரன் குழம்பினான்.

அவளருகே சென்று, ''சிந்து! அவள் குழந்தை. அவள் பேச்சை பெருசா எடுத்துக்கிட்டு எதுக்கு இவ்வளவு வருத்தப்படுறே?'' என்று கேட்டான்.

''மித்து பேசினதை பத்தி நான் யோசிக்கலை நரேன்.''



''வேற எதை பத்தி இவ்வளவு கவலையா யோசிச்சுக் கிட்டு இருக்கே?''

''நாளைக்கு டூர் முடிஞ்சு எங்க அம்மாவும் அப்பாவும் வராங்க.''

''ம்ம்ம் எனக்கு தெரியும்.''

''தெரியுமா? உங்களுக்கு யார் சொன்னாங்க? நான் மித்துகிட்ட கூட சொல்லலை.''

''ம்ம்ம் டூருக்கான டிக்கெட் வாங்கி குடுத்து அவங்களை அனுப்பி வச்சதே நான் தானே!''

''அப்போ அந்த ஓசி டிக்கெட் எடுத்து கொடுத்தது நீங்க தானா?''

''ஆமா. உங்க அப்பாவோட போன் நம்பர் லக்கி டிரால வின் பண்ணியதா சொல்லி டிக்கெட் எடுத்து கொடுத்தது நான் தான். பிளான் என்னோடது. வேற ஆளுங்களை வச்சு நடத்தி காட்டினேன்.''

''அவரை எதுக்கு ஓசியா டூர் அனுப்பி வச்சீங்க? மாமனார் மேல அவ்வளவு பாசமா?''

''அவர் இங்கே இல்லைன்னா தானே என் பொண்ணு பக்கத்துல என்னால நெருங்க முடியும். அதான். பாசம் என் மாமனார் மேல இல்லை. என் மித்து மேல.''

'அப்போ கூட என் பேரை சொல்லுறாரா பாரு!' என்று அவள் கடுப்பானாள்.

''அவர் வந்தால் உனக்கு என்ன? அதுக்கு எதுக்கு இவ்வளவு சோகம்?''

தந்தை தன்னிடம் பண விஷயத்தில் செய்த மோசடியை வெளியே சொல்ல முடியாத சிந்து அமைதியானாள்.

மனதை உறுத்தும் விஷயங்களை தெளிவுப்படுத்தாமல் அவளால் அவர் கண் முன் இயல்பாக நடமாட முடியாது என்பதால் பண விஷயத்தை பற்றி தன் தந்தையிடம் விசாரித்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்திருந்தாள்.

அப்படி விசாரிக்கும் பொழுது தனக்கும் தன் தந்தைக்கும் இடையில் பெரிதாக சண்டை வரும் என்றே அவளுக்குத் தோன்றியது.

''என்ன ஆச்சு? சைலன்ட் ஆகிட்டே?''

''ஒண்ணுமில்லை நரேன்.''

''ஒண்ணுமில்லாததுக்கு எதுக்கு இவ்வளவு கவலை, வருத்தம்...?''

''சரியா சொல்ல தெரியலை நரேன். என்னமோ மனசு பாரமாவே இருக்கு.''

''ப்ச். தேவை இல்லாமல் எதுக்கு உன்னை நீயே குழப்பிக்கிறே! வர போறவங்க உன்னோட அம்மா அப்பா தானே. எதிரிங்க இல்லையே.''

'எதிரியா மாறிடுவாங்களோ என்ற பயம் தான் என் கலக்கத்திற்கே காரணம்.'

மனதில் நினைத்ததை அவனிடம் சொல்ல முடியாமல் தன் தலையை மட்டும் ஆட்டினாள். கஷ்டப்பட்டு ஒரு முறுவலை வெளியிட்டாள்.






சிந்துவின் தந்தையான வேலுச்சாமியும் அவர் மனைவியும் பக்தி சுற்றுலாவை முடித்துக் கொண்டு சென்னை திரும்பினார்கள்.

அவர்கள் இருவரும் உற்சாகமாய் இருந்தார்கள். அவர்களைப் பார்த்த சிந்து தான் கொஞ்சம் பதட்டமானாள்.

'நரேன் இங்கே வந்ததை பத்தி இத்தனை நாளும் நான் அப்பாகிட்ட சொல்லலையே! அப்பா என்ன சொல்லுவாருன்னு தெரியலையே!'

'எதுக்கு சிந்து நீ பயப்படுறே! நீ ஒரு தப்பும் செய்யலை' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

அன்று இரவு நரேந்திரன் தன் மகளை காண வந்தான். அழைப்பு மணியை அடித்து விட்டு அவன் வாயிலில் காத்திருந்தான்.

கதவை திறந்தது சிந்துவின் தாய்.

அவர் நரேந்திரனை கண்டதும், 'இவனா? இவன் எதுக்கு இங்கே வந்திருக்கான்?' என்று பதட்டமானார்.

நரேந்திரன் அவர்களை எதிர்பார்த்தே இருந்ததால் பதட்டப்படாமல் அவரை தைரியமாக எதிர்

கொண்டான். ஆனால் அவரிடம் ஒன்றும் பேசாமல் மீண்டும் அழைப்பு மணியை ஒலிக்க விட்டான்.

அவனது வருகையை தன் கணவனிடம் சொல்வ தற்காக அந்த வீட்டில் இருக்கும் இரண்டாவது படுக்கை அறையை நோக்கி சிந்துவின் தாய் விரைந்தார்.

அழைப்பு மணி ஓசையை கேட்டு சிந்துவும் மிதுளாவும் வரவேற்பறைக்கு வந்தனர். அப்பொழுது தான் வேலுச்சாமியும் தன் மனைவி பின் தொடர அங்கே வந்தார்.

''கதவு திறந்திருந்தா யார் வேணா உள்ளே வந்துட லாமா? யாரை கேட்டு உள்ளே வந்தே?'' என்று வேலுச்சாமி எடுத்த எடுப்பிலேயே ஒருமைக்கு தாவி மருமகனை அதட்ட ஆரம்பித்தார்.

''நான் தான் அன்னைக்கே உன்னை வரக் கூடாதுன்னு சொன்னேன்ல. உங்க அம்மா செத்துட்டால் மட்டும் நடந்த எல்லாத்தையும் மறந்துட்டு என் மகள் உன் கூட குடும்பம் நடத்த வந்துடுவாளா?'' என்று ஆங்காரமாய் கேட்டார்.

'என்னது உங்க பொண்ணு என் கூட வாழ வர மாட்டாளா? அட போய்யா! ஒரு மாசமா நானும் உங்க பொண்ணும் வாழாமல் வாழுறது இந்த ஊருக்கே தெரியும். உங்களுக்கு தான் தெரியலை.'

'அவ மேல எனக்கு இன்னும் கொஞ்சம் கோபம் பாக்கி இருக்கு. இல்லைன்னா நீங்க வரதுக்கு முன்னாடி மித்துவுக்கு ஒரு தம்பி பிறக்கிறதுக்கே நான் ஏற்பாடு பண்ணி இருப்பேன்.' என்று உள்ளுக்குள் கிண்டல் செய்து கொண்டான்.



அவருக்கு எந்த ஒரு பதிலையும் சொல்லாத நரேந்திரன் மனைவியின் மனநிலையை அறிவதற் காக சிந்துவை திரும்பிப் பார்த்தான்.

அவள் நம்ப முடியாத அதிர்ச்சியுடன் தன் தந்தையை தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இது எதையும் புரிந்து கொள்ளத் தெரியாத மிதுளா தந்தை தன்னை அழைத்து செல்ல வந்துவிட்டதாக எண்ணி நரேந்திரன் அருகே வந்து அவன் கையை பற்றினாள்.

'என் பெண்ணை கூப்பிட தான் வந்தேன். நான் வந்த வேலை முடிஞ்சது' என நினைத்த நரேந்திரனும் மகளை அழைத்துக் கொண்டு வெளியே செல்ல திரும்பினான்.

''என் பேத்தியை எங்கேடா கூட்டிட்டு போறே?''

சிந்துவை பற்றி அவ்வளவு நேரம் வேலுச்சாமி பேசிய போது, 'சரி அவர் பொண்ணு விஷயத்துல அவர் தலையிடுறார்' என்று ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்த நரேந்திரன்,

தன் மகளை பற்றி அவர் பேச ஆரம்பிக்கவும், இனி சும்மா இருந்தால் சரியா வராது. இவருக்கு இவர் பாஷையிலே சொன்னால் தான் புரியும் என நினைத்துக் கொண்டு அவருக்கு பதிலளித்தான்.

''என் பொண்ணை நான் எங்கே வேணா கூட்டிட்டு போவேன். அதை தடுக்க உங்களுக்கு எந்த ரைட்ஸும் இல்லை. ரொம்ப பேசினீங்கன்னா கோர்ட்டில் கேஸ் போடுவேன். என் பொண்ணு என் கூட தான்

இருப்பாள்னு தீர்ப்பு சொல்ல வைப்பேன். உங்க பொண்ணை நீங்க வச்சுக்கோங்க. என் பொண்ணை என்கிட்ட விட்டுடுங்க.''

''வாடா பேபி போகலாம்.'' என்றதும் மிதுளா அங்கிருந்த அனைவருக்கும் டாட்டா காட்டிவிட்டு அவனுடன் சென்றாள்.

''இவன் எப்போம்மா வந்தான்? என்ன தெனாவட்டா பேசுறான் பாரு. ஒரு மாசம் நான் ஊரிலே இல்லாத விஷயம் தெரிஞ்சுக்கிட்டு இங்கே வந்து உன்கிட்ட வாலாட்டினானா?''

''அப்பா! அவரை வாடா போடான்னு சொல்லுற உரிமையை உங்களுக்கு யார் குடுத்தா?''

''இல்லைம்மா. அவன் எப்படி நம்ம மித்து குட்டியை கூட்டிட்டு போகலாம்?''

''மித்து அவர் பொண்ணுப்பா.''

''என்னம்மா இப்படி சொல்லுறே?''

''வேற எப்படி சொல்லணும்? என்னைக்கிருந்தாலும் அவளோட அப்பாவை நான் அவளுக்கு காட்டி தானே ஆகணும்? இன்னும் எத்தனை நாளைக்கு தான் அவளோட அப்பா ஃபாரினில் வேலை செய்யுறதா சொல்ல முடியும்.''

''முடிஞ்ச வரைக்கும் சொல்லலாம்னு நினைச்சேன்.''

''நாளைக்கே அவள் தன் அப்பா கூட பேசியே ஆகணும்னு அடம் பிடிச்சாள்னா என்ன செய்யுறது?''

''உங்க அண்ணனை விட்டு போன் பண்ண சொல்லி இருக்கலாம்.''



''ம்ம்ம் இப்போ வேணா அதை நம்புவாள். டெக்னாலஜி எவ்வளவோ வளர்ந்துடுச்சு. அதனால அவளுக்கு ஸ்கைப்பை பத்தியோ வீடியோ கால் பத்தியோ தெரிய வரும் போது... அதுல அவளோட அப்பாவை பார்த்துக்கிட்டே பேசணும்னு சொல்லு வாள். அப்ப என்ன செய்வீங்க?''

''அதுக்கெல்லாம் அவசியம் இல்லாமல் நீ தான் அவனை அப்பான்னு அடையாளம் காட்டிட்டியே!''

''திரும்பவும் அவன்னு சொல்லுறீங்க. ஏன்பா?''

''பொண்டாட்டியை கூட வச்சு வாழ துப்பில்லாத ஒருத்தனுக்கு மரியாதை என்ன வேண்டி கிடக்கு?''

''அவரை விட்டு பிரியுற முடிவை நான் தானேப்பா எடுத்தேன்.''

''அந்த முடிவுக்கு உன்னை அவன் தானே தள்ளினான்.''

'இவர் கூட இதுக்கு மேல என்னால பேச முடியாது' என நினைத்தவள் தன் அறைக்குள் சென்று அடைந்து கொண்டாள்.

அன்று இரவு வீடு திரும்பிய மிதுளாவிடம் வேலுச் சாமி, ''மித்து குட்டி! இனிமேல் நீ உங்க அப்பா கூட போகக் கூடாது.'' என்றார்.

''ஏன் போகக் கூடாது?''

''அவர் பேட் அப்பா.''

''இல்ல. எங்க டாடி குட் டாடி.''

''இல்லைடா மித்து. அவர் பேட் தான். உன்னை அடிக்க கூட செய்வார்.''

''அவர் என்னை அடிச்சதே இல்லை.''

''தாத்தா சொன்னால் கேட்கணும்.''

''கேட்க மாட்டேன்.'' என்று அழுத்தமாய் உரைத் தவள் தங்கள் அறைக்குள் ஓடி மறைந்தாள்.



## 20

மறுநாள் இரவு ஏழு மணிக்கு வீடு திரும்பிய சிந்து தன் வீட்டிற்கு கூட செல்லாமல் நேராக நரேந்திரன் வீட் டிற்கு சென்றாள். அவன் வீட்டில் தான் இருந்தான்.

கதவை திறந்தவன், ''மித்து எங்கே?'' என்று கேட்டான்.

அவளது தோளில் தொங்கிய கைப்பை மற்றும் கையில் பிடித்திருந்த சாப்பாட்டு பையை பார்த்து விட்டு, ''இப்போ தான் ஆபிஸில் இருந்து வரியா?'' என்றான்.

''ம்ம்ம் வீட்டுக்கு கூட போகாமல் நேரா இங்கே தான் வரேன்.''

''காபி இல்லைன்னா ஜூஸ் குடிக்கிறியா?''

அவள் எதுவும் வேண்டாம் என்று தலை அசைத் தாலும் ஒரு டம்ளரில் பழச்சாற்றை ஊற்றிக் கொண்டு வந்து கொடுத்தான். மறுப்பு சொல்லாமல் வாங்கிப் பருகினாள்.



அவள் ஏதாவது சொல்வாள் என்று அவன் அவள் முகத்தையே பார்த்திருக்க... அவளோ அமைதியாக இருந்தாள்.

''என்ன ஆச்சு சிந்து? ஆபிஸில் ஏதாச்சும் பிரச்சனையா?''

''ஆபிஸில் எந்த பிரச்சனையும் இல்லை நரேன்.''

''அப்புறம் ஏன் கவலையா, அமைதியா இருக்கே?''

''நான் எதிர்பார்க்கலை நரேன். அப்பா உங்களை அப்படி ரிஸீவ் பண்ணுவாருன்னு கொஞ்சம் கூட நினைச்சு பார்க்கலை. ஐயாம் சாரி.''

''ஊப்! இது தான் விஷயமா? உன் முகத்தை பார்த்து நான் என்னமோ ஏதோன்னு பயந்தே போயிட்டேன்.''

''எனக்கு மனசுக்கு ரொம்ப கஷ்டமா போயிடுச்சு.''

''அவர் எப்போ என்னை பார்த்தாலும் இப்படி தான் பேசி வைக்கிறார். அதனால எனக்கு பழகி போயிடுச்சு. நீயும் ப்ரீயா விடு.''

அவள் பேசாமல் அமைதியாக இருக்கவும், ''நாமளும் அவர் பக்கம் உள்ள நியாயத்தை புரிஞ்சுக் கணும்ல. டைவர்ஸ் பண்ணப் போகிற மாப்பிள்ளைக்கு யார் தான் மரியாதை குடுப்பாங்க சொல்லு?'' என்றான்.

''என்னது டைவர்ஸா? திரும்பவும் ஆரம்பிக்கிறீங் களா? ரெண்டாவது கல்யாணம்... டைவர்ஸ்... என்ன நரேன் இதெல்லாம்? விளையாட்டு பேச்சுக்கு கூட இது மாதிரி வார்த்தைகளை சொல்லாதீங்க. அது என்னை ரொம்ப ஹார்ட் பண்ணுது.''

அவள் கூறியதை கேட்டு அவளை ஒரு மாதிரியாக பார்த்தவன் எழுந்து படுக்கை அறைக்குள் சென்றான்.

திரும்பி வந்தவனின் கையில் ஒரு கடித உறை இருந்தது. அதில் இருந்த காகிதத்தை வெளியே இழுத்து அவளிடம் நீட்டினான்.

''இதுக்கு என்ன அர்த்தம் சிந்து?''

'என்னத்தை நீட்டுறார்?' என்று யோசித்துக் கொண்டே அவள் தன் கை நீட்டி அதை வாங்கி அந்த காகிதத்தில் தன் பார்வையை ஓட்டினாள்.

வக்கீல் ஒருவர் சிந்துவின் சார்பாக நரேந்திரனுக்கு விவாகரத்து விண்ணப்பம் அனுப்பி வைத்திருந்தார். அதில் சிந்துவின் கையொப்பமும் இருந்தது.

அதைக் கண்ட சிந்து, 'டைவர்ஸா?! நானா?! நரேனையா?!' என்று அதிர்ச்சி அடைந்தாள்.

''என்ன நரேன் இது?''

''அதை தான் நான் உன்கிட்ட கேட்கிறேன். இதை எதுக்கு அனுப்பினே?''

''இல்ல நரேன். சத்தியமா இதை நான் அனுப்பலை. எனக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் எப்படி நரேன் உங்களை டைவர்ஸ் பண்ணுவேன்?''

''இத்தனை நாளும் நான் உங்களை பிரிஞ்சு விலகி இருந்தேன் தான். ஆனால் என்னோட நினைப்பில் இருந்து உங்களை நான் ஒரு நாளும் விலக்கி வைக்கலை. உங்களை நினைக்காமல் நான் ஒரு நாள் கூட இருந்ததில்லை.''



''எது நடந்தாலும்... அது கெட்டதா இருந்தாலும் சரி நல்லதா இருந்தாலும் சரி... நரேன் இன்னைக்கு என்ன தெரியுமா நடந்துச்சுன்னு எல்லா விஷயத்தையும் உங்ககிட்ட மனசுக்குள்ள சொல்லிக்கிட்டே தான் இருந்தேன்.''

''அத்தைக்கும் எனக்கும் சண்டை. அதனால பிரிஞ்சு வந்தேன். அப்படின்னா அத்தை இறந்த விஷயம் தெரிஞ்ச பின்னால நான் உங்க கூட சேர்ந்து வாழ வந்திருக்கணும். ஆனா நான் வரலை.''

''அதுக்கு காரணம் அத்தை இறந்த உடனே உங்க கூட வந்து ஒட்டிக்க என் மனசாட்சி இடம் தரலை. அப்படி நான் உங்களோட வாழ வந்திருந்தால்... என்னவோ நான் அத்தை எப்போ சாவாங்கன்னு காத்திருந்த மாதிரி தானே ஆகி இருக்கும்.''

''அதனால தான் நான் உங்களை தேடி வராமல் தனியாவே இருந்தேன். ஆனா ஒரு நாளும் உங்களை நிரந்தரமா பிரிய நான் நினைச்சதில்லை நரேன். இது யாரோ நமக்கு வேண்டாதவங்க செஞ்ச வேலை. நான் இதை அனுப்பலை. டிரஸ்ட் மீ.'' என்று கூறி கண்ணீர் விட்டாள்.

''ப்ச் இப்போ எதுக்கு அழறே? நான் உன்னை நம்ப மாட்டேன்னு ஏதாச்சும் சொன்னேனா? கண்ணை துடை. நான் உன்னை நம்புறேன். ஓகேவா.''

கணவன் தன்னை நம்புறேன் என்று சொன்னதும் அவளது கண்ணீர் மட்டுப்பட்டது. தன் துப்பட்டாவால் முகத்தை துடைத்துக் கொண்டாள்.

அந்த விவாகரத்து விண்ணப்பத்திற்கு பின் என்னவெல்லாம் நடந்தது என்பதை தெரிந்து கொள்ள நினைத்தாள். அதனால் நரேனிடம் அது பற்றி விசாரிக்க ஆரம்பித்தாள்.

''இது எப்போ வந்துச்சு?''

''நீ என்னை விட்டுட்டு போன மூணாவது மாசம் வந்துச்சு. இது விஷயமா பேச தான் எங்க அம்மா உன்னை பார்க்க சென்னை வந்தாங்க. அப்போ தான் அந்த ஆக்ஸிடெண்ட் நடந்து அம்மா இறந்து போனாங்க.'' என்றவன் சில நொடிகள் அமைதியானான்.

''அம்மா என்னையும் உன்னையும் தனிக்குடித்தனம் கூட போக சொன்னாங்க. உன்கிட்ட பேசி உன்னை சம்மதிக்க வச்சு கேஸை வாபஸ் வாங்க வைக்கணும்னு புலம்பிகிட்டே இருந்தாங்க.''

அவன் அந்தக் கவரை அங்கே இருந்த டீப்பாயில் போட்டான். அனுப்புனர் இடத்தில் வக்கீலின் பெயரும் முகவரியும் இருந்ததைக் கண்டவள் அதை கையில் எடுத்துப் பார்த்தாள்.

'யாருடா நீ கனகாரியமா எங்க ரெண்டு பேருக்கும் டைவர்ஸ் வாங்கி குடுக்க பார்த்திருக்க?' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே அந்தப் பெயரையும் முகவரியையும் படித்துப் பார்த்தாள்.

அவள் இதுவரை கேள்விப்படாத நபர் என்றதும் உதட்டைப் பிதுக்கிக் கொண்டாள்.

அடுத்ததாக அவள் பார்வை பெறுநர் முகவரியின் மேல் சென்றது. அது கையால் எழுதப்பட்டிருந்தது.



அந்தக் கையெழுத்தை கண்டவள் தீச் சுட்டார் போல அந்த உறையை உதறி எறிந்தாள்.

தன் கண்களை மூடியவள், 'ஏன்பா? ஏன் இப்படி செஞ்சீங்க? எனக்கே தெரியாமல் என் கையெழுத்தை நீங்க தான் வாங்கினீங்களா? இல்லை நீங்களே போட்டுக்கிட்டீங்களா? நான் நரேனோட வாழ கூடாதுன்னு நீங்க ஆசைப்பட்டீங்களா? ஏன்?' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

ஆம்! அது வேலுச்சாமியால் நரேந்திரனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட விவாகரத்து விண்ணப்பமே!

அவள் அழ ஆரம்பிக்கவும் நரேந்திரன் அவள் அருகே சென்று அமர்ந்து, ''சிந்து! இப்ப என்ன ஆச்சு? திரும்பவும் எதுக்கு அழறே?'' என்று கேட்டான்.

கண்களை திறந்து அவனது முகம் பார்த்தவளுக்கு வார்த்தை வரவில்லை. கண்ணீர் தான் அருவியாக வழிந்தது.

''ப்ச் சொன்னால் கேட்க மாட்டியா? இப்போ எதுக்கு இப்படி ஒரு அழுகை?'' என்று அவளை அதட்டிக் கொண்டே தனது கைக்குட்டையால் அவளது முகத்தை துடைத்து விட்டான்.

''அப்பா... நரேன்.'' என்று அவள் திக்கித் தடுமாறி கூற,

அவள் சொல்ல வருவது புரியாமல், ''உங்க அப்பாவுக்கு என்ன?'' என்று கேட்டான்.

''இதை அனுப்பியது அப்பா.'' என்றதும் அவனுமே அதிர்ந்தான்.

''ஆர் யூ சுயர்?''

''ம்ம்ம் அவரோட ஹாண்ட் ரைட்டிங் தான்.'' என்றவளின் அழுகை கூடவே செய்தது.

அவன் அவளை தோளோடு அணைத்து ஆறுதல் அளிக்க முயன்றான். அவன் மேல் சாய்ந்து கொண்டவளின் அழுகை அதிகரிக்கவே செய்தது.

அவளுடைய அதிர்ச்சியின் அளவை அவனால் உணர முடிந்தது. ஆனால் எப்படி அவளுக்கு ஆறுதல் சொல்வதென்று புரியாமல் விழித்தான்.

அன்று பணம் பறிபோனது என்று அவள் வருத்தப் பட்ட பொழுது போனால் போகட்டும் விடு என்று ஆறுதல் சொன்னவனால் இன்று அது போல் சொல்ல முடியவில்லை.

பணமும் வாழ்க்கையும் ஒன்றாகி விட முடியுமா?

தங்களுடைய வாழ்க்கையை கெடுக்க நினைத்தது வேற ஒருவராய் இருந்தால் சிந்துவிற்கு எளிதாக அவனால் ஆறுதல் சொல்ல முடியும்.

ஆனால் இங்கே இவர்கள் வாழ்க்கையோடு விளையாடியவர் சிந்துவை பெற்ற தகப்பன் எனும் போது என்ன சொல்லி அவளை சமாதானம் செய்வது என்று அவனுக்குப் புரியவில்லை.

என்ன வார்த்தை சொல்லி அவளை தேற்றுவது என்ற யோசனையில் ஆழ்ந்தான். தனது தொடுகை அவளுக்கான ஆறுதலை அளிக்கும் என்ற நம்பிக் கையில் அவனது கை அவளது முதுகை விடாமல் வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தது.



ஐந்து நிமிடங்கள் கடந்தும் அவளது அழுகை நிற்கவில்லை என்றதும், ''போதும்டா. நடந்து முடிஞ் சதை விடு. அதான் நான் இதை கண்டுக்காமல் தூக்கி போட்டுட்டேன்ல. அவரும் பேசாமல் ஒதுங்கிட்டார் தானே!

''அதுக்கு அப்புறமா திரும்பவும் எனக்கு நோட்டீஸ் அனுப்பலை இல்லையா? கோர்ட் வரைக்கும் போய் அவமானப்படலை இல்லையா? அப்புறம் என்ன?''

''முடிஞ்சு போனதை நினைச்சு வருத்தப்படுறதை விட நம்ம சண்டை ஒரு முடிவுக்கு வந்ததை நினைச்சு சந்தோஷப்படு.''

''அழாமல் வீட்டுக்கு போ. மித்து உனக்காக காத்துக் கிட்டு இருப்பாள். நானும் இப்போ தான் வந்தேன். அதனால நானும் அவளை போய் பார்க்கலை. நீயும் வீட்டுக்கு போக லேட்டானால் அவள் தேடுவாள். நீ போய் முதல்ல அவளை கவனி.''

மகளது நினைவு வந்ததும் அவள் தன்னை தானே சமாதானம் செய்து கொண்டு கிளம்புவதற்காக எழுந்து நின்றாள்.

''சிந்து! நான் இன்னைக்கு மித்துவை பார்க்க அங்கே வரலை. எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு.''

''உங்களை பார்க்கணும்னு அவள் அடம்பிடிப்பாளே.''

''எப்படியாச்சும் சமாளி. இல்லைன்னா வீடியோ கால் போடு. நான் அவளை சமாளிக்கிறேன்.''

''சரி'' என்று தலையாட்டியவள் அந்த விவாகரத்து விண்ணப்பத்தையும் கடித உறையையும் தன் கைப்பையில் பத்திரப்படுத்தினாள்.

''சாரி நரேன். நீங்க திரும்பி வந்ததில் இருந்து அல்மோஸ்ட் நான் தினமும் உங்களை பார்த்து சாரி கேட்கிறேன்ல. 'சாரி' என்ற ஒத்த வார்த்தையிலே நடந்த எதுவும் மறைஞ்சிடாது. ஆனா அதை சொல்லுறதை தவிர என்னால வேற என்ன செய்ய முடியும்?'' என்ற போது அவளது கண்ணோரம் திரும்பவும் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

''நோ சிந்து. நோ மோர் அழுகை.'' என்றதும் தலையாட்டி அவனிடம் விடைபெற்று வீட்டிற்கு சென்றாள்.



## 21

வீட்டு வாசல் திறந்திருந்தது. அவளது அம்மா தொலைக்காட்சியில் ஏதோ ஒரு சீரியலை பார்த்துக் கொண்டிருந்தார்.

அவரிடம் நின்று பேசாமல் அவள் நேராக தன்னறைக்கு சென்று முகம் கழுவி தன் கண்ணீர் கறைகளை அழித்தாள்.

''அம்மா! டாடி வரவே இல்லை. ஏன்?'' என்ற கேள்வியோடு மிதுளா அவளிடம் வந்து நின்றாள்.

''டாடிக்கு வேலை இருந்திருக்கும். அதான் உன்னை பார்க்க வந்திருக்க மாட்டார்.''



மகளது முகவாட்டத்தை பார்த்தவள், ''டாடிகிட்ட பேசுறியா?'' என்று கேட்டு கணவனுக்கு வீடியோ கால் செய்தாள்.

மகளை மடியில் அமர்த்திக் கொண்டாள்.

திரையில் நரேந்திரனின் முகத்தைப் பார்த்த மிதுளா, ''டாடி! நான் உங்க பேச்சு கா.'' என்றாள்.

''என் செல்ல பேபிக்கு என் மேல என்ன கோபம்? டாடி என்ன தப்பு பண்ணினேன்?''

''நீங்க ஏன் இன்னைக்கு என்னை பார்க்க வரலை?''

''அப்பாக்கு நிறைய வேலை இருந்துச்சுடா. அதான் வரலை.''

''இனிமேல் நீங்க வரவே மாட்டீங்கன்னு தாத்தா சொன்னாங்க. நீங்க பேட் அப்பான்னும் சொன்னாங்க. இல்லை எங்க டாடி குட் டாடின்னு நான் சொன்னேன்.''

சிந்து தன் கண்களை மூடி அமைதியானாள்.

மனைவியின் முகத்தைப் பார்த்த நரேன், ''சிந்து! நோ வொரீஸ். ஐ வில் டேக் கேர் ஆஃப் எவ்ரிதிங். டிரஸ்ட் மீ.'' என்று அதட்டினான்.

அவள் தன் தலையை ஆட்டிக் கொண்டே கண்களை திறந்து அவனைப் பார்த்து முறுவலிக்க முயன்றாள்.

''மித்து பேபி! டாடி உங்களுக்கு ஒரு சீக்ரெட் சொல்லட்டுமா?''

''ம்ம்ம் சொல்லுங்கப்பா'' என்று அவள் மெது குரலுக்கு மாறவும், கணவன் மனைவி இருவருக்குமே அவளது பாவனை ஒரு முறுவலை தோற்றுவித்தது.

''இனிமேல் டாடி டெய்லி மித்து பேபியை பார்க்க வருவேன். டெய்லி உன்னை ஊஞ்சல் ஆட்டுவேன். உனக்கு சாப்பாடு ஊட்டுவேன். என் மேல படுக்க வச்சுக்குவேன். இந்த சீக்ரெட் தாத்தாக்கும் பாட்டிக்கும் தெரியாது. உனக்கும் அம்மாவுக்கும் மட்டும் தான் தெரியும். நீ யார்கிட்டயும் சொல்லாதே!'' என்றதும் அவள் குஷியானாள்.

''ஓகேப்பா. நான் யாருகிட்டயும் சொல்ல மாட்டேன்.''

''லவ் யூடா பேபி. அப்பா வச்சுடட்டுமா?''

''ஓகேப்பா. நான் போய் சாப்பிடுறேன்.'' என்று சொல்லி அவள் சிந்துவின் மடியில் இருந்து இறங்கி ஓடினாள்.

மனைவி தனக்கு விவாகரத்து நோட்டீஸ் அனுப்பி னாள் என்று இத்தனை நாளும் வெறுப்பில் இருந்தவ னின் கடுப்பு அடியோடு மறைந்ததால் அவனுக்கு அவளை சீண்டிப் பார்க்கும் எண்ணம் வந்தது.

''அப்புறம் சொல்லு சிந்து.''

''என்ன சொல்லணும்?''

''என் பொண்ணு சமாதானம் ஆகி போயிட்டாள். வாட் அபௌட் மை பொண்டாட்டி?'' என்று அவன் கண் சிமிட்டிக் கொண்டு கேட்டான்.

''பாருடா! இன்னைக்கு என்ன புதுசா பொண்டாட்டி மேல அக்கறை பொங்கி வழியுது.''

''என்னைக்கும் இருக்கிறது தான்.''



''ஆமா நேத்து டிவி நியூஸ்ல கூட சொன்னாங்க.''

''அக்கறை இருக்க போய் தான் பெங்களூரில் இருந்து இங்கே வந்து டென்ட் அடிச்சு இருக்கேன். அதை இல்லைன்னு உன்னால மறுக்க முடியுமா?''

''ஆமா போன வாரம் கூட பொண்ணை கொஞ்சு றேன்னு என்னை வெறுப்பேத்தினது யாராம்?''

''அது போன வாரம். நான் சொல்லுறது இன்னைக்கு.'' என்றவன் தன் உதடுகளை குவித்து முத்தமிட்டான்.

''ஒண்ணும் வேணாம். நான் போன வாரம் ஃபிளை யிங் கிஸ் குடுத்தப்போ அதை கண்டும் காணாமலும் இருந்தீங்க தானே!''

''ஹே! நான் உனக்கு கிஸ் குடுத்தேன்னு நினைச் சியா? அது உனக்கு இல்லை. என் பொண்ணுக்கு. நான் அவளுக்கு கிஸ் குடுக்கும் முன்னாடி அவள் எழுந்து ஓடிட்டாள். இதை நீ அவளுக்கு பாஸ் பண்ணிடு.'' என்றதும் முறைத்தாள்.

''இப்போ எதுக்கு முறைக்கிறே? நீ தானே வேணாம்னு சொன்னே.''

''ஓவரா லொள்ளு பண்ணீங்க. கடிச்சு வச்சுடுவேன்.'' என்று அவள் பல்லைக் கடிக்க,

''இந்தா கடிச்சுக்கோ!'' என்று அவன் தன் கன்னத்தை திருப்பிக் காட்டினான்.

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் மேல உங்க வீட்டுக்கு வந்த போது கன்னத்தை காட்டி இருக்க வேண்டியது தானே. நானும் நல்லா கடிச்சு

வச்சிருப்பேன்ல. அப்புறமா அந்த காயத்துக்கு உங்க முதல் பொண்டாட்டிகிட்ட போய் மருந்து போட்டுட்டு வந்திருக்கலாமில்ல.''

''அடச்சே! நல்ல சான்ஸை மிஸ் பண்ணிட்டேனே!''

''என்ன சான்ஸ்?''

''நான் என் கன்னத்தை என் வைஃப்கிட்ட காட்டி... அவளும் கடிச்சு வச்சு எனக்கு பெருசா காயம் ஏற்பட்டு இருந்தால்... அவ இன்னைக்கு போடுற மருந்தே வேறயா இல்ல இருந்திருக்கும்.'' என்றவன் தன் உதடுகளை குவித்து தொடர் முத்தங்களை இடவும் அவள் வெட்கத்துடன் முறுவலித்தாள்.

மனைவியின் முகம் ஓரளவு தெளிவடைந்ததை கண்ட நிம்மதியுடன், ''ஓகே பைடா சிந்து. நாளைக்கு பார்ப்போம்.'' என்றான்.

அவளும் சந்தோஷத்தோடு, ''பை நரேன்.'' என்று கூறி அந்த அழைப்பை துண்டித்தாள்.

அறையை விட்டு வெளியே வந்தவள் தன் தந்தையிடம் சென்று, ''அப்பா! உங்க செல்போனோட போஸ்ட் பெயிட் பில் எல்லாம் வச்சு இருக்கீங்களா?'' என்று கேட்டாள்.

''எதுக்கும்மா கேட்கிறே?''

''அந்த செல்போன் கம்பெனியில் இருந்து ஒரு ஆஃபர் அறிவிச்சு இருக்காங்க. தொடர்ந்து அஞ்சு வருஷம் அவங்களோட கஸ்டமரா இருக்கிறவங்களுக்கு சிறப்பு சலுகை தராங்களாம்.



''ஆனா அஞ்சு வருஷத்துக்கு முந்தின பில் வேணுமாம். ஒண்ணு குடுத்தாலும் போதுமாம். கடைக்காரர்கிட்ட பில் இருக்காதுன்னு சொல்லிட்டு வந்துட்டேன். அது உங்ககிட்ட இருக்கா என்ன?''

''எல்லா பில்லையும் நான் பத்திரமா தான் வச்சிருக்கேன். நான் எடுத்துட்டு வந்து தரேன்.''

''அஞ்சு வருஷ பில்லை எல்லாம் எப்படிப்பா வச்சு இருக்கீங்க?''

''பில் எல்லாம் தூக்கி போடக் கூடாதும்மா. இது மாதிரி என்னைக்காவது நமக்கு உதவும். அதான் எல்லா பில்லையும் பைல் பண்ணி வச்சுடுவேன்.''

''சூப்பர்பா.'' என்றவள் சமையலறைக்கு சென்று தன் தாயுடன் சேர்ந்து சமையல் வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள்.



## 22

இரவு மிதுளாவை தூங்க வைத்தவள் தன் தந்தையிடம் பேசுவதற்காக வரவேற்பறைக்கு சென்றாள்.

''மித்து தூங்கிட்டாளா சிந்து? நான் உன்கிட்ட பேசணும்னு தான்மா காத்திருக்கேன்.''

''என்ன விஷயம்பா சொல்லுங்க.''

''வேற என்ன விஷயமா பேசப் போறேன். எல்லாம் நரேந்திரன் விஷயமா தான். அவன் எப்போ உன்னை பார்க்க வந்தான்? மித்து குட்டி சொல்லுறதை பார்த்தால் நிறையா நாள் அவளை வந்து பார்த்திருப்பான் போல! பார்க்கில் அவ கூட விளையாடுவான்னு சொன்னாள்.''

நரேந்திரன் மாடியில் குடியிருப்பது தன் தந்தைக்கு தெரியவில்லை என்பதை சிந்து புரிந்து கொண்டாள்.

''ம்ம்ம் ஆமாம்பா கொஞ்ச நாள் முன்னாடி வந்தார். நான் ஒண்ணும் உன்னை பார்க்க வரலை. என் பொண்ணை பார்க்க வந்தேன்னு சொன்னார். என்னால எதுவும் சொல்ல முடியலை.''

''என்ன நோக்கத்துல வந்திருக்கான்னு கண்டுபிடிப் போம். மித்து குட்டி மனசை கலைச்சிடுவானோன்னு தான் யோசனையா இருக்கு. எப்படியும் அவனால ரொம்ப நாள் சென்னையிலே இருக்க முடியாது. வேலையை பார்க்க பெங்களூரு போய் தானே ஆகணும்.''

''அவரை விட்டு ஒதுங்கி வாழுறது தான் எனக்கும் என் பொண்ணுக்கும் நல்லது. நம்ம மித்து அடிபட்ட போது நான் எவ்வளவு கஷ்டப்பட்டு அந்த மெடிக்கல் பில்லை கட்டினேன். ஆனா அந்த பில்லை அவர் கட்டினதா வாய் கூசாமல் சொல்லுறார்பா.''

''எவ்வளவு நெஞ்சழுத்தம் பாரும்மா. எப்படி பொய் புளுகுறான்.''

''அவர் என்கிட்ட எப்படி தெரியுமா கத்தினார். அந்த பில்லை கொண்டு வாங்கப்பா. அவர் முகத்திலே விட்டெறிஞ்சு அவரை நாலு வார்த்தை நறுக்குன்னு நான் கேட்கிறேன்.'' என்றதும் வேலுச்சாமி விழித்தார்.



''மெடிக்கல் பில்லா? அது எங்கே வச்சேனோ?''

''அது மட்டும் இல்லைப்பா. மித்துவோட ஸ்கூல் பீஸ் கூட அவர் தான் கட்டினாராம். பொய் சொல்லுற துக்கு அவர் கொஞ்சம் கூட கூச்சப்படவே இல்லைப்பா. அந்த பில்லையும் தாங்கப்பா. அந்த பில்லை எல்லாம் காட்டி அவரை நிக்க வச்சு கேள்வி கேட்டால் தான் என் ஆத்திரம் அடங்கும்.''

வேலுச்சாமி தன் மனதிற்குள், 'ஆஹா! வந்தவன் எனக்கு ஆப்பு அடிச்சுட்டானா? நான் கட்டாத பணத் துக்கு எவன் எனக்கு பில் தருவான்? இல்லாத பில்லை கொண்டு வான்னு இவள் சொல்லுறாளே! நான் என்ன செய்வேன்?' என்று புலம்பிய வண்ணம் அமர்ந் திருந்தார்.

''என்னப்பா பேசாமல் இருக்கீங்க. போய் அந்த பில் ரெண்டையும் எடுத்துட்டு வாங்க.''

''மித்துவுக்கு அடிபட்டு கிட்டத்தட்ட ரெண்டு வருஷம் ஆக போகுது. அந்த பில்லை இப்போ கேட்டால் அதுக்கு நான் எங்கேம்மா போவேன்?''

''சரிப்பா ஸ்கூல் பில்லாச்சும் குடுங்க. அதை கட்டி வெறும் ஆறு மாசம் தானே ஆகுது.''

''ஸ்கூலில் பில் எல்லாம் குடுக்கலைம்மா.''

''இது என்னப்பா புதுசா சொல்லுறீங்க. அப்புறம் நாம பணம் கட்டினதுக்கு ஆதாரம் வேண்டாமா?'' நான் போய் நாளைக்கு ஸ்கூலில் விசாரிக்கிறேன்.

''சிந்து! அவங்க பில் தந்திருப்பாங்களா இருக்கும். நான் தான் வாங்க மறந்திருப்பேன். இதுக்காக நீ ஏன் ஸ்கூல் வரைக்கும் போகணும்?''

''சே! என்னப்பா அவரை கார்னர் பண்ண முடியாமல் போகுதே!''

''அவனை மடக்க நமக்கு வேற சான்ஸ் கிடைக்காமலா போகும். விடும்மா.''

''அவரோட பொய்யோட பட்டியல் இதோட முடியலைப்பா.'' என்றவள் விவாகரத்து விண்ணப்பத்தை எடுத்து அவரிடம் கொடுத்தாள்.

'அடப் படுபாவி! இதையும் போட்டு குடுத்துட்டானா? ஆனா என் பொண்ணு தான் அவனை நம்பலையே' என ஆசுவாசப்பட்டார்.

''எதுக்கும்மா இப்படி ஒரு பொய் சொல்லுறான்? ஒருவேளை வேற யாராவது பொண்ணு பார்த்து வச்சு இருக்கானா? அவளை கல்யாணம் பண்ண நினைக்கிறானா?''

'இன்னும் எத்தனை பொய் தான்பா சொல்லுவீங்க? சொல்ல உங்களுக்கு கூச்சம் இல்லாமல் இருக்கலாம். ஆனா கேட்க எனக்கு கஷ்டமா இருக்குப்பா' என நினைத்தவள், ''எதுக்குப்பா இவ்வளவு பொய் சொல்லுறீங்க?'' என்று மட்டும் கேட்டாள்.

''பொய்யா? நானா?! என்னை சந்தேகப்படுறியாம்மா?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் டெலிபோன் பில் வேணும்னு கேட்டப்போ அஞ்சு வருஷ பில் உங்க கிட்ட பத்திரமா இருக்குன்னு சொன்னீங்க தானே.''

''உண்மையிலே எந்த ஆஃபரும் கிடையாது. நான் சும்மா உங்களை டெஸ்ட் பண்ண தான் அப்படி ஒரு



கேள்வி கேட்டேன். அஞ்ச வருஷ பில் பத்திரமா இருக்கு... ஆனா ஆறு மாசம் முன்னாடி கட்டின பில் மட்டும் உங்ககிட்ட இல்லை. அப்படி தானே?''

அதுவரைக்கும் தகப்பனுக்கும் மகளுக்கும் குறுக்கே வராமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அவளின் அம்மா, ''நீ சொல்லுறதை பார்த்தால் பணத்தை நாங்க சுருட்டிட்டோம்னு சொல்லுறியா?'' என்று கோபமாக கேட்டார்.

''அதை நான் என் வாயால சொல்ல மாட்டேன்மா. ஆனா நடக்கிறதை எல்லாம் பார்த்தால் அப்படி தான் நடந்திருக்கணும்னு தோணுது.'' என்று தன் தாயிடம் கூறியவள் மீண்டும் தன் தந்தையின் புறம் திரும்பி பேச ஆரம்பித்தாள்.

''நரேன் மெடிக்கல் பில்லை கட்டினேன்னு சும்மா சொல்லலைப்பா. பில்லை காண்பிச்சார். அதுல அவர் பெயர் எழுதி இருந்துச்சு.''

''மித்துவோட அப்பா பேரை கேட்டாங்க. நான் சொன்னேன். அதை பில்லில் போட்டு இருப்பாங்க. உடனே அவன் தான் பில் கட்டினான்னு ஆகிடுமா என்ன?''

''நீங்க கட்டின பில் அவர்கிட்ட எப்படி போச்சு?''

''நான் பில்லை தவற விட்டிருக்கலாம். அவன் அதை எடுத்து வச்சுக்கிட்டு நாடகம் ஆடுறான் போல!''

''ஓஹோ! ஆனால் பில்லை அவர் தன் கார்டு மூலமா கட்டினதா தான் அதுல குறிப்பிட்டு இருந்துச்சு. நீங்க

எப்போ இருந்து அவரோட கார்டை உபயோகிக்க ஆரம்பிச்சீங்க?''

'இதற்கு என்ன சொல்லி சமாளிக்க' என்று தெரியாது அவர் விழித்தார்.

''அந்த பில் மட்டும் இல்லை. ஸ்கூல் பில்லும் கட்டினத்துக்கான ரெசிப்ட் அவர்கிட்ட இருக்கு.''

''உங்க அம்மா சொல்லுற மாதிரி உன் பணத்தை நாங்க மோசடி பண்ணிட்டோம்னு சொல்லுறியா?''

''எதுக்கு மோசடின்னு பெரிய வார்த்தை எல்லாம் சொல்லுறீங்க. சரி பணத்தை விடுங்க. இந்த டிவோர்ஸ் நோட்டீஸை எதுக்கு நரேனுக்கு அனுப்பினீங்க?''

''நான் அனுப்பினேன்னு அவன் சொன்னானா? உடனே நீயும் அதை உண்மைன்னு நம்பிட்டு என்னை வந்து கேள்வி கேட்டுடுவியா?'' என்று அவள் அப்பாவும்,

''எங்கேயாச்சும் பெத்த பொண்ணு வாழ்க்கையை அப்பா அம்மா கெடுப்பங்களா?'' என்று அவள் அம்மாவும் கேட்டனர்.

''அதையே தான் நானும் கேட்கிறேன்? நிஜமாவே நான் உங்க பொண்ணு தானா? எதுக்கு என் வாழ்க்கையோட இப்படி விளையாட நினைக்கிறீங்க? வாயில் இருந்து வருவதெல்லாம் பொய்.''

''இதை நீங்க தான் அனுப்பினீங்கன்னு நரேன் ஒண்ணும் சொல்லலை. கவரில் இருக்கிற உங்க கையெழுத்து சொல்லுது. கவர் ஏதோ ஒரு கவர் இல்லை. சம்பந்தப்பட்ட வக்கீல் பேர் பிரிண்ட் பண்ணப்பட்ட கவர்.''



மகளிடம் வகையாக மாட்டிக் கொண்டவரால் மறுத்து எதுவும் சொல்ல முடியவில்லை.



## 23

தந்தை ஏதேனும் சொல்லுவார் என்று காத்திருந்தவள் அவர் வாயைத் திறக்காமல் இருக்கவும் தன்னுடைய பொருமலை தொடர்ந்தாள்.

''அத்தை தன்னோட உயிரை பலி குடுத்து மித்துவை காப்பாத்தின விஷயத்தையும் என்கிட்ட இருந்து மறைச்சுட்டீங்க. அடுக்கடுக்கா எத்தனை பொய்? எதுக்கு இதெல்லாம்?''

''அந்த நல்ல மனுஷியை புரிஞ்சுக்காமல் நான் அவங்களுக்கு குடுத்த தொல்லை ஏராளம். ஆனா அவங்க என் பெண்ணுக்காக தன் உயிரையும் விட்டு என் மனசிலே ஆறாத ரணத்தை ஏற்படுத்திட்டு போயிட்டாங்க.''

''என்னால அவங்களுக்கு திருப்பி ஏதாச்சும் செய்ய முடியுமா? என் பிள்ளையை காப்பாத்தி குடுத்தவங்களோட பிள்ளையை நான் நல்லா கவனிச்சு வாழ

வைக்கிறதை தவிர என்னால வேற என்ன செய்ய முடியும்? அதை கூட என்னை செய்ய விடாமல் தடுத்துட்டீங்களேப்பா.''

''நிறுத்து! நிறுத்து! என்னவோ நான் தான் உன்னை நரேன் கூட வாழ விடாமல் பிரிச்சு வெளியே கூட்டிட்டு வந்த மாதிரி பேசுறே!''

''நான் ஒத்துக்கிறேன்பா. நான் தான் வெளியே வந்தேன். ஆனா அதுக்கு என்ன காரணம்?''

''என் கல்யாணத்துக்கு நீங்க ஒத்த பைசா கூட செலவு செய்யலை. ஆனா என்கிட்ட என்ன சொன் னீங்க? 'முதல்ல நரேனோட அம்மா எதுவுமே வேணாம்னு சொல்லிட்டு கடைசியில் எனக்கு நல்லா செலவு இழுத்து வச்சு என்னை ஓட்டாண்டியா ஆக்கிட்டாங் கன்னு' என்கிட்ட நீலிக் கண்ணீர் வடிச்சீங்க.''

''நானும் அதை உண்மைன்னு நம்பி அவங்க மேல ஒரு கோபத்தோடு தான் அந்த வீட்டுக்குள்ள அடி யெடுத்து வச்சேன். அவங்க செஞ்ச நல்லது கூட எனக்கு தப்பா தான் தோணுச்சு.''

''சும்மாவா சொன்னாங்க... first impression is the best impression என்று. ஏன்பா அவங்க மேல அப்படி ஒரு அபாண்ட பழியை சுமத்தினீங்க?''

''நம்ம கல்யாணத்துக்காக அப்பா எதுவும் செய்ய லைன்னு நீ நினைக்க கூடாதேன்னு தான் அப்படி சொன்னேன்.''

''உங்களை உயர்த்திக்க அவங்க மேல பழியை போட் டீங்களா? சூப்பர்பா. கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு.'' என நக்கல் செய்தவள்,



''அதை விடுங்க. எதுக்காக நரேனுக்கு டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பினீங்க?'' என்று கேட்டாள்.

''நீ அவனை விட்டு பிரிஞ்சு வந்துட்டே! நீ வாழுறதுக்கு உனக்கு பணம் வேண்டாமா? வீட்டு வாடகை, சாப்பாடுன்னு எவ்வளவு செலவு இருக்கு? அதெல்லாத்தையும் எப்படி சமாளிக்கிறது?''

''அதுக்கு தான் அவன்கிட்ட ஜீவனாம்சமா அவனோட சொத்தில் பாதியை எழுதி வாங்கலாம்னு நினைச்சேன். ஆனா அந்த பயல் என் பொண்ணுக்கு தான் என்னோட சொத்து சேரும். அதுவும் அவள் மேஜ ரான பின்னால தான் அவ கைக்கு கிடைக்கும்னு அவனோட வக்கீலை விட்டு என் வக்கீல்கிட்ட சொல்லிட்டான்.''

''சரின்னு நானும் விட்டுட்டேன். அதுக்காக அவனை அப்படியே விட்டுட முடியுமா? ஒரு மாசம் கழிச்சு நானே அவனுக்கு போன் பண்ணி மித்துவை வளர்க் கிறதுக்கு மாசம் பிறந்தால் ஒரு தொகை தரணும்னு கேட்டேன். அதுக்கு ஒத்துக்கிட்டு பணம் அனுப்புறான்.''

''இது வேறயா? இதை நரேன் என்கிட்ட சொல் லவே இல்லையே! அவர்கிட்ட எதுக்குப்பா பணம் வாங்கினீங்க?''

'ஆஹா! இதை அவன் சொல்லலையா? நானா தான் உளறிட்டேனா?' என திருதிருத்தார்.

''அவன் பொண்ணுக்கு தானே அவன் பணம் அனுப்புறான். என்னமோ எனக்கு அனுப்பின மாதிரி சொல்லுறே?'' என்று கேட்டார்.

''அந்த பணத்தை நீங்க தானே செலவு செய்யுறீங்க?''

''நான் எனக்கா செலவு செஞ்சேன். உன் பொண்ணுக்கு தான் அவள் கேட்டப்போ பொம்மை வாங்கி குடுத்தேன். டிரஸ் வாங்கி குடுத்தேன்.''

''நம்ம வீட்டுல மித்துவோட பொம்மை மொத்தம் எத்தனை இருக்குன்னு சொல்லுங்க? ஒரு நாலு இல்லைன்னா அஞ்சு இருக்குமா? இந்த அஞ்சு பொம்மையும் வாங்கினப்போ என்கிட்ட வேற தனியா நீங்க பணம் வாங்கிட்டு போனதை நீங்க மறந்திருக்கலாம். ஆனா நான் மறக்கலை.''

''இப்ப என்ன சொல்ல வரே நீ? உன் புருஷன் பணத்தை நான் தனியா ஒதுக்கிட்டேன்னா?''

''அது தானே உண்மை!''

அவள் அம்மா இடைபுகுந்து, ''நீ பாட்டுக்கு ஆபிஸ் போயிடுறே! உன் பொண்ணு ஸ்கூலில் இருந்து வந்ததும் அவளை பத்திரமா நாங்க தானே பார்த்துக்கிறோம். அதுக்கு எங்களுக்கு நீ சம்பளம் போட்டு குடுத்தால் கூட அந்த பணமெல்லாம் சரியா போயிடும்.'' என்றார்.

''நீங்க ஊரிலே இல்லாத இந்த ஒரு மாசம் நான் மித்துவை பார்த்துக்க ஆயாம்மாவை தான் ஏற்பாடு பண்ணினேன். அவங்களுக்கு நான் குடுத்த சம்பளம் எவ்வளவு தெரியுமா? ஆனா நீங்க எடுத்திருக்கிற தொகை எவ்வளவு தெரியுமா?''

இப்பொழுது விழித்துக் கொண்டு நிற்பது அவளது அம்மாவின் முறையாயிற்று.



''நல்ல வேளை இது வரைக்கும் நீங்க எனக்காக எந்த வேலையும் செஞ்சு தரலை. இன்னைக்கு வரைக்கும் துணி துவைச்சு போடுற வேலைக்காரிக்கு நான் தான் சம்பளம் தரேன்.''

''சமையலில் மட்டும் தான் பாதி வேலை செஞ்சீங்க. இல்லைன்னா வீட்டு வேலை செஞ்சதுக்குன்னு ஒரு தொகை வேணும்னு சொல்லி இருப்பீங்க போல!''

''இந்த வீட்டு வாடகை, கரண்ட் பில், மளிகை ஜாமான்னு இப்படி இந்த வீட்டுக்கு தேவையான அத்தனையும் நான் என் பணத்தில் தானே வாங்கி போடுறேன். நீங்க இந்த வீட்டுக்காக என்ன செலவு செஞ்சீங்க?'' என்று கேட்டாள்.

''நாங்க எதுக்கு செலவு செய்யணும்? பெத்தவங்களுக்கு செலவு செய்ய வேண்டியது பிள்ளைகளோடு கடமை இல்லையா?'' என்று அவள் அப்பாவும்,

''எங்கயாச்சும் அம்மா அப்பாவுக்கு செலவு செஞ்சதுக்கு எல்லாம் பணம் கேட்பாங்களா?'' என்று அவள் அம்மாவும் கேட்டனர்.

''சொந்த பேத்தியை சில மணி நேரங்கள் பார்த்துக்க சம்பளம் எதிர்பார்க்கிறவங்களுக்கு நான் மட்டும் ஏன் செலவு பண்ணணும்?''

''நீ ரொம்ப பேசுற சிந்து.''

''நீங்க தான் என்னை பேச வைக்கிறீங்க.'' என்றவள் அதற்கு மேல் அவர்களிடம் சண்டை போட விரும்பாதவளாய் தன் அறைக்குள் சென்று அடைந்து கொண்டாள்.

வேலுச்சாமியும் அவர் மனைவியும் தங்கள் அறைக்கு சென்று மெதுவான குரலில் பேச ஆரம்பித்தார்கள்.

''என்னங்க என்னன்னவோ சொல்லுறாள்! நம்ம கையை விட்டுப் போயிடுவாளோ?''

''அதெல்லாம் ஒண்ணும் நடக்காது. நீ கவலைப் படாதே!''

''எப்படி அவ்வளவு உறுதியா சொல்லுறீங்க.''

''நேத்து அந்த நரேந்திரன் சொன்னதை நீ கவனிச் சியா? என் பொண்ணை என்கிட்ட விட்டுடுங்க. உங்க பொண்ணை நீங்க வச்சுக்கோங்கன்னு சொன்னான். அவன் இவளை கண்டிப்பா ஏத்துக்க மாட்டான்.''

''அப்படியா சொல்லுறீங்க?''

''அவனுக்கு அவனோட அம்மான்னா உசிரு. இவள் என்னைக்காவது அவங்களை மதிச்சு இருக்காளா? அதனால கண்டிப்பா சிந்துவை ஏத்துக்க மாட்டான்.''

''ஒருவேளை அவங்க அம்மா இறந்து போயிட்டதால சிந்துவை மன்னிக்க முடிவு பண்ணி இருந்தான்னா...?''

''மன்னிச்சு ஏத்துக்கிறதா இருந்தால் அவன் என் னைக்கோ இவளை தேடி வந்திருக்க மாட்டானா?''

''ம்ம்ம் நாம பெத்த ரெண்டுமே ஏன் இப்படி பணத்து மேல ஆசையே இல்லாமல் இருக்குதுங்க.''

''அதை சொல்லு. நம்ம குணம் இந்த ரெண்டுக்கும் கொஞ்சம் கூட வரலையே!''

''ஆமாங்க. ரெண்டும் நமக்கு தப்பி பிறந்திருச்சுங்க. பணக்கார வீட்டுல வாழ போனாங்களே அங்கே



கொஞ்சம் பணத்தை சுருட்டி அப்பாவுக்கும் அம்மா வுக்கும் ஒரு வீடு வாங்கி கொடுப்போம், கார் வாங்கி கொடுப்போம், பேங்கில் அவங்க பேரிலே லட்சக் கணக்கிலே பணம் போடுவோம் இப்படி ஏதாச்சும் ஒண்ணு தோணுச்சா?''

''சரியா சொன்னே. இதுல எதுவுமே நடக்கலை. சில லட்சங்களை மட்டும் தான் நம்மால சேர்க்க முடிஞ்சது. அதுவும் திருட்டுத்தனமா.''

''இதுகளை பெத்து வளர்த்ததுக்கு அது தான் மிச்சம்.'' என்று புலம்பிக் கொண்டார்கள்.

தன் அறைக்குள் நுழைந்த சிந்து மகள் அருகே படுத்துக் கொண்டாள். மகளது தலையை மென்மை யாய் வருடிக் கொடுத்தாள்.

'உன்னை பார்த்துக்க சம்பளம் வேணும்னு கேட்டுட் டாங்களே குட்டிம்மா. நீ அவங்களோட மூத்த பேத்தி. உன் மேல அவங்களுக்கு பாசமே இருந்ததில்லையா?'

'உன்னை பணக்கார நரேந்திரனோட வாரிசா மட் டும் தான் பார்த்தாங்களா? நீ பொன் முட்டை போடும் வாத்தா அவங்க கண்ணுக்கு தெரிஞ்சதுனால தான் உன்னை இத்தனை நாளும் கவனிச்சுக்கிட்டாங்களா?'

அவர்களின் சுயரூபம் வெளிப்பட்டதில் அவள் மனம் காயப்பட்டது.

'இவ்வளவு பணத்தாசை கொண்டவர்களா என் பெற்றோர்கள்? சொந்த பெண்ணிடம் இருந்தே இந்த அளவிற்கு பணத்தை அமுக்க நினைக்கிறார்கள் என்றால்... அடுத்தவர்களிடம் எப்படி நடந்து கொள்வார்கள்?'

'பணத்திற்காக எந்த அளவிற்கும் இறங்கி பொய் சொல்லுவார்களா? நியாயம் தர்மம் பற்றியெல்லாம் நினைத்து பார்க்க மாட்டார்களா?' என நினைத்த போது அவளுக்கு மனம் கூசியது.

அவளுக்கு இரவு முழுவதும் தூக்கம் வருவேனா என்றது. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியே மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது.



## 24

அங்கே சிந்து அழுது கொண்டிருக்க அதற்கு நேர்மாறாக நரேந்திரன் தன் மனைவியை பற்றிய இன்பக் கனவில் மூழ்கி இருந்தான்.

திருமணமான புதிதில் அவர்களது வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை அவன் நினைத்துப் பார்க்க ஆரம்பித்தான்.

அலுவலகத்தில் இருந்து வீடு வந்த நரேந்திரனிடம், ''நான் உங்க ஆபிஸில் வேலைக்கு வரட்டுமா?'' என்று சிந்து கேட்டாள்.

''வேலைக்கு வர போறியா? ஏன் வீட்டுல இருக்க ரொம்ப போர் அடிக்குதா?''

''ம்ம்ம் போர் அடிக்குது. அதான் வரலாம்னு பார்க்கிறேன். ஆனா நீங்க எனக்கு சம்பளம் தரணும்.''



''என்ன சிந்து காமெடி பண்ணுறே!''

''ஏன் சம்பளம் தர மாட்டீங்களா?''

''அப்படி இல்லை. உனக்கு பணம் வேணும்னா என்கிட்ட கேளு. நான் தரேன். அதுக்கு எதுக்கு வேலை... அதுக்கு சம்பளம் வேணும்னு கேட்டுக் கிட்டு இருக்கே!''

''அப்படி இல்லை. நான் சம்பாதிக்கணும்.''

''சரி உன்னோட இஷ்டம்.''

''எனக்கு என்ன வேலை தருவீங்க? நான் அங்கே வந்து என்ன செய்யணும்?''

''அது உன்னோட ஆபிஸ். அங்கே வந்து என்ன செய்யணுமோ செய். எவ்வளவு சம்பளம் வேணுமோ அதை எடுத்துக்கோ.''

அவள் யோசனையாய் அமர்ந்திருப்பதைக் கண்டவன் சிரித்துக் கொண்டே, ''நீ வேலை தான் பார்க்க ணும்னு இல்ல சிந்து. சும்மா என்னை சைட் அடிச்சுக் கிட்டு கூட பொழுதை போக்கிட்டு சம்பளம் வாங்கிக் கலாம்.'' என்றான்.

''உங்க ஆபிஸில் உள்ளவங்க எல்லோரும் அப்படி தான் சம்பளம் வாங்குறாங்களா?''

''சில பேர் அப்படி தான்.'' என்று அவன் சொல்லவும் அவள் யோசனையில் ஆழ்ந்தாள்.

''உங்க ஆபிஸில் மொத்தம் எத்தனை பேர் வேலை பார்க்கிறாங்க? அதுல எத்தனை பேர் லேடீஸ்?''

அவள் அப்படிக் கேட்டதும் அவளை சீண்டும் எண்ணம் அவனுக்கு வந்தது.

''மொத்தம் பதினைஞ்சு பேர். யாரெல்லாம் லேடீஸ்னா...'' என்றவன் தனது அலுவலகத்தில் வேலை செய்யும் ஐந்து பெண்களின் பெயரை கூறியவன் அதன் பின், ''சீதா, மனோகரி, குமாரி...'' என்று அடுக்கினான்.

சீதாபதியை சீதா என்றும், மனோகரனை மனோகரி என்றும், குமாரை குமாரி என்றும் அவன் மாற்றி கூறினான்.

'ஆஹா! இவர் ஆபிஸில் கோபியர்களுக்கு நடுவே தான் இருக்காரா? அது தப்பாச்சே!' என அவள் நினைத்தாள்.

''சீதா, மனோகரி, குமாரி இவங்க மூணு பேரும் எனக்கு ரொம்ப பிடிச்ச வொர்க்கர்ஸ். சீதா தான் என்னோட பி.ஏ. என்னோட பெர்சனல் அசிஸ்டெண்ட்ன்னு சொல்லுறதை விட என்னோட இடது கை வலது கை எல்லாமே சீதா தான்.'' என்றான்.

''உங்க ரெண்டு கையையும் சீதாகிட்ட குடுத்துட்டு நீங்க எந்த கையோட உலவிக்கிட்டு இருக்கீங்க?''

''ஹய்யோ! இந்த மாதிரி ஒரு மொக்கை ஜோக்கை நான் இது வரைக்கும் கேட்டதே இல்லை.'' என்று அவன் அவளை வாரினான்.

பத்து நிமிடங்கள் கழித்து, ''அந்த சீதா ரொம்ப அழகா இருப்பாளா?'' என்று கேட்டாள்.

''என் ஆபிஸில் இருக்கிற எல்லா லேடீஸுமே சீதா அழகுன்னு ஒத்துக்குவாங்கன்னா பார்த்துக்கோ.''



''அவங்களை விடுங்க. நீங்க சொல்லுங்க.''

தனக்கு வந்த சிரிப்பை அடக்கி கொண்டு. ''என் கண்ணுக்கும் சீதா அழகு தான்.'' என்றான்.

சில நிமிடங்களுக்கு பின், ''சீதாக்கு என்ன வயசு?'' என்றாள்.

''இருபத்தி நாலு வயசு தான் ஆகுது. சின்ன வயசுக்கே உரிய சுறுசுறுப்பு தான் சீதாவோட ப்ளஸ். சீதா சுறுசுறுப்பை பார்க்கும் போது நமக்கும் ஒரு உற்சாகம் தொத்திக்கும். சோர்வே இல்லாமல் வேலை செய்யலாம்.''

அன்று இரவு தூங்கும் பொழுது அவள் தன் கணவனை ஒட்டி ஒட்டி வந்து படுத்தாள். அதன் காரணத்தை அறிந்தவன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

அவளது இடையில் கை போட்டு தன்னோடு இழுத்து அணைத்துக் கொண்டான்.

மறுநாள் காலை அவளை அழைத்துக் கொண்டு அலுவலகத்திற்கு வந்தான். அலுவலகத்தை சுற்றிக் காட்டிவிட்டு தன் அறைக்கு கூட்டிச் சென்றான்.

''மேடம்! எந்த இடத்துல உட்கார்ந்து என்ன வேலை செய்யணும்னு முடிவு பண்ணிட்டீங்களா?''

''ம்ம்ம் இப்போ சுத்தி பார்த்த வரைக்கும் இருக்கிறதிலே உங்க சேர் தான் ரொம்ப சூப்பரா இருக்கு. நான் அங்கேயே உட்கார்ந்துக்கிறேன்.''

''அடிப்பாவி! உனக்கு அதே மாதிரி சேர் வேணா வாங்கி தரேன். அதுக்கு எதுக்கு என் போஸ்ட்ல

உட்கார நினைக்கிறே! என்னை வெளியே துரத்திட்டு நீ என்ன வேலை செய்வே? அப்புறமா சாப்பாட்டுக்கு நாம என்ன செய்யுறது?''

''அந்த ஒரே ரீசனுக்காக தான் வேற ஏதாச்சும் ஒரு இடத்துல போய் உட்காரலாம்னு முடிவு பண்ணி இருக்கேன்னு சொல்ல வந்தேன். அதுக்குள்ளே நீங்க அவசரப்படுறீங்க.''

''இன்னைக்கு முழுசும் இங்கேயே உட்கார்ந்து யோசி. அப்புறமா என்ன வேலை செய்யலாம்னு முடிவு பண்ணு. நான் இதோ வரேன்.'' என்று சொல்லி வெளியேறினான்.

அவன் வெளியேறியதும் ஒருத்தன் உள்ளே வந்து தண்ணீரை மாற்றி வைத்து விட்டு சென்றான். சிந்துவிற்கு அந்த சீதாவை பார்க்கும் ஆவல் அதிகமாக இருந்தது.

அவள் அந்த ஆளிடம், ''நீங்க போய் சாரோட பி.ஏவை வர சொல்லுங்க.'' என்றாள்.

அவன், ''சரிங்க மேடம்.'' என்று சொல்லி சென்ற இரு நிமிடங்களில் கதவை தட்டிக் கொண்டு சீதாபதி அவள் முன் வந்து நின்றான்.

அவனை யாரென்று தெரியாத சிந்து, ''உங்களுக்கு என்ன வேணும்?'' என்று கேட்டு வைத்தாள்.

'என்னடா இவங்க இப்படி கேட்கிறாங்க? நம்மளை இவங்க தானே வர சொன்னாங்க!' என்று குழம்பிய சீதாபதி, ''எனக்கு ஒண்ணும் வேண்டாம் மேடம்.'' என்றான்.



''நீங்க தானே என்னை கூப்பிட்டீங்களாம்'' என்று அவன் சொல்லி இருந்தால் நொடியில் நரேந்திரனின் விளையாட்டு வெளிப்பட்டு இருக்கும்.

ஆனால் சீதாபதி வேறு ஒன்றை சொன்னதால் சிந்துவால் கண்டுபிடிக்க முடியவில்லை.

'ஒண்ணும் வேணாம்னா இங்கே எதுக்கு வந்தான்? அவரை பார்க்க வந்திருப்பானோ?' என குழம்பிய சிந்து, ''சார் வெளியே போய் இருக்கார். நீங்க அப்புறமா வந்து அவரை பாருங்க.'' என்று சொல்லி வெளியே அனுப்பினாள்.

'இவங்க என்ன லூசா? வான்னு வரச் சொல்லிட்டு சாரை பார்க்க அப்புறமா வான்னு திருப்பி அனுப்புறாங்க.' என்று குழம்பி கொண்டு நடந்து வந்தவனை நரேந்திரன் வழிமறித்தான்.

''என்ன சீதா? எந்த கனவு லோகத்தில் இருக்கே? கனவிலே எந்த ஹீரோயினோட டூயட் பாடுறே?''

''அடப் போங்க பாஸ்! நைட் தூக்கத்திலே கூட எந்த ஹீரோயினும் வர மாட்டேங்கிறாங்க. இதுல ஆபிஸ் அவர்ஸ்ல தான் வராங்களாக்கும்.''

''இப்படி ஒரு அழகு பையன் கனவிலே வர முடியாத அளவுக்கு எல்லா ஹீரோயினும் ஷூட்டிங்கில பிஸியா இருக்காங்களா என்ன? அது தப்பாச்சே!''

''என் அழகை பத்தி எல்லாம் ஓவரா வர்ணிக்கிறீங்க. இன்னைக்கு உங்ககிட்ட சிக்க போறது நான் தானா?''

''என்ன சீதா இப்படி சொல்லிட்டே! நான் நேத்து என் வைஃப்கிட்ட என்ன தெரியுமா சொன்னேன்

எங்க ஆபிஸ்ல உள்ள மொத்த பொண்ணுங்களும் சீதா அழகுன்னு சொல்லுவாங்கன்னு சொன்னேன்.''

''அப்போ இன்னைக்கு என்னை தான் பலி குடுக்குறதுன்னு நேத்தே முடிவு பண்ணிட்டீங்களா? என்னோட அழகை பத்தின பேச்சு எதுக்கு பாஸ் வந்துச்சு?''

''நம்ம ஆபிஸ்ல எத்தனை லேடிஸ் வொர்க் பண்ணுறாங்கன்னு என் வைஃப் கேட்டாளா... அப்போ உன் பேரை சொன்னேனா...''

''என்னது என்னை லேடி ஸ்டாப்னு சொன்னீங்களா?!'' என்று அவன் அலறினான்.

''இப்போ எதுக்கு சீதா இவ்வளவு ஜெர்க் ஆகிறே? நான் என்னவோ உன்னை மந்திரம் பண்ணி பொண்ணா மாத்தின ரேஞ்சுக்கு இல்ல ஃபீல் பண்ணுறே!''

''நல்லவேளை பாஸ் உங்களுக்கு மாய மந்திரம் எதுவும் தெரியலை. இல்லைன்னா இந்த ஆபிஸ் தினமும் கதிகலங்கி போகும்.'' என்று சீதாபதி பெருமூச்சுவிட்டான்.

''உன்னை பார்க்க தான் என் வைஃப் ரொம்ப ஆர்வமா இருக்காள். உன்னை கூப்பிட்டு அனுப்பினால் நீ அவ முன்னாடி போகாதே! இன்னைக்கு ஈவினிங் வரைக்கும் அவளை கலாய்ச்சுக்கிறேன். இன்னைக்கு முழுசும் நீ என் ரூம் பக்கமே வரக் கூடாது சொல்லிட்டேன். எதுவா இருந்தாலும் போனில் பேசு.''

''அடக்கடவுளே! இது நீங்க பண்ணி வச்ச கூத்து தானா? நான் மேடமை தப்பா நினைச்சேனே!'' என்றவன் சற்று முன் நடந்ததை தெரிவித்தான்.



''ஹா ஹா! நீயும் உன் பங்குங்கு பல்பை குடுத்துட்டு வந்துட்டியா?'' என்று நரேந்திரன் சிரித்தான்.

''சீதா! நீ அழகுன்னு மட்டும் சொல்லலை... இன்னும் உன்னை பத்தி நாலு பிட் எக்ஸ்ட்ராவா போட்டேன்.''

''அப்போ மேடம் என்னை அர்ச்சனை பண்ணிக்கிட்டு இருக்காங்களா? பாஸ் சேதாரம் ஜாஸ்தியாகாமல் பார்த்துக்கோங்க.''

''சேதாரம் கம்மியா வேணுமா? நான் என்ன நகை கடையா நடத்துறேன்? போய் வேலையை பாரு மேன்.'' என்று நக்கல் அடித்துக் கொண்டு நகல்பவனை சீதாபதி முறுவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அலுவலகத்தில் யாரேனும் தப்பு செய்தால் மட்டுமே நரேந்திரன் முதலாளியாய் நடந்து கொள்வான். மற்ற நேரங்களில் அவன் தன் அலுவலகத்தாரிடம் உற்ற நண்பனாய் தான் பழகுவான்.

யாராவது ஒருவரை கேலி செய்து அன்றையப் பொழுதை ஓட்டுவான். அவனுடைய கேலி ரசிக்கத் தக்க வகையில் இருக்குமே ஒழிய வரம்பு மீறினதாய் இருக்காது. அதனால் அலுவலகத்தினர் அவனது கிண்டலை ரசிக்கவே செய்வர்.

தன் அறைக்குத் திரும்பியவன் மனைவியிடம், ''என்ன சிந்து வீட்டை விட இங்கே போர் அடிக்குதா?'' என்றான்.

''அப்படி எல்லாம் இல்லை. வேலையை பார்க்க ஆரம்பிச்சால் நேரம் ஓடிடும்.''

''இந்தா! இதை எல்லாம் படிச்சு பாரு!'' என்று அவன் பைல்களை நீட்டவும். அதை வாங்கி வாசிக்க ஆரம்பித்தாள்.

பத்து நிமிடங்கள் கழித்து சீதாபதி செல்போனில் அழைக்கவும் நரேந்திரன் அதை எடுத்து இயக்கி, ''சொல்லு சீதா.'' என்றான்.

''பாஸ்! நான் என்னோட நார்மல் வாய்ஸ்ல பேச லாமா? இல்லை பொண்ணு குரலில் பேசணுமா?''

''நீ எப்படி பேசினாலும் எனக்கு உன் குரல் குயில் போல தான் இருக்கும் சீதா.''

''பாஸ்! இதை மட்டும் குயில் இனம் கேட்டுச்சு... அதுக மொத்தமும் தூக்கு போட்டுட்டு செத்துடும். ஏற்கனவே செல்போன் டவரால சிட்டுக்குருவி இனம் அழிஞ்சது பத்தாதா?''

''அந்த ஆராய்ச்சியை நாம அப்புறமா பார்ப்போம். இப்போ உனக்கு என்ன வேணும்?'' என்றதும் அவர்கள் இருவரும் தொழில் பேச்சுக்களை பேச ஆரம்பித்தனர்.

அரை மணி நேரம் கழித்து சிந்து கையில் உள்ள பைல்களை ஓரமாய் வைத்துவிட்டு அறையை விட்டு வெளியே வந்தாள்.

அங்கே இருந்த பெண்களை எண்ணியவள் 'அஞ்சு பேர் தான் இருக்காங்க. நேத்து எட்டு பேர் சொன்னாரே!' எனக் குழம்பியவாறு அந்தப் பெண் களிடம் சென்று பேச்சுக் கொடுத்தாள்.



''இன்னைக்கு லேடி ஸ்டாப் யாராச்சும் ஆபிஸ்க்கு வரலையா?''

''இல்லையே மேடம் எல்லோருமே வந்திருக்கோம்.'' என்றவர்கள் தங்கள் பெயரை சொல்லி தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

கணவன் தனக்கு பிடித்ததாக சொன்ன மூன்று பெண்களும் அங்கே இல்லை என்பதை அவள் மனம் கணக்கிட்டது.

''மனோகரி வரலையா?''

''அப்படி யாரும் எங்க ஆபிஸில் இல்லையே. மனோகர் சார் தான் இருக்கார்.''

சிந்து குழம்பியவாறு, ''குமாரி வரலையா?'' என்று இழுத்தாள்.

''மேடம்! நான் தான் குமார். குமாரின்னு யாரும் இல்லை.'' என்று அருகில் இருந்தவன் பதிலளித்தான்.

'என்னை கலாய்க்க பொய் சொல்லி இருக்கார்' என மனதிற்குள் கணவனை வறுத்தெடுத்தவள், ''ஓ! சாரி.'' என்று அவர்களிடம் மன்னிப்புக் கேட்டாள்.

கடைசியும், முக்கிய பேருமான சீதாவை பற்றி அவள் கேட்டதும், ''சீதா ஹேஸ் கான் அவுட்.'' என்ற பதில் கிடைத்தது.

'அப்போ அது மட்டும் உண்மையா? அவள் குரலை கூட அப்படி ரசிக்கிறார். அவளை பார்த்தே ஆகணுமே!' என்று பொறாமையில் பொங்கியவாறு திரும்பவும் கணவனின் அறைக்குச் சென்றாள்.

அவள் உள்ளே சென்று மறையவும் சீதாபதி அலுவலகத்திற்குள் நுழைந்தான்.

''சீதா! வா வா! மேடம் வந்தாங்க...'' என்று அங்கிருந்தவர்கள் நடந்ததை விளக்கினர்.

அவர்களிடம் சீதாபதி நரேந்திரன் சொன்னதை சொல்லவும் அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

மதிய இடைவேளையின் போது யாரும் சாப்பிட கூட செல்லாமல் மொத்தமாக நரேந்திரனின் அறைக்குள் வந்து நின்றனர்.

''என்னாச்சு! எல்லோரும் ஒரே நேரத்திலே ஒண்ணா வந்து நிக்குறீங்க? எல்லோரும் ஒண்ணா சேர்ந்து எனக்கு வாழ்த்து சொல்லுற மாதிரி இன்னைக்கு ஒரு விசேஷமும் இல்லையே!''

''சார்! நாங்களும் எவ்வளவு நாளைக்கு தான் நீங்க சமைக்கிற பிரியாணிக்கு பலி ஆடா இருக்கிறது.''

''அட்லீஸ்ட் இன்னைக்கு மேடம் புண்ணியத்துல உயிர் உள்ள ஆடா மேன்னு கத்துறோமே.'' என்று நரேந்திரனை பார்த்து சொன்னவர்கள்,

சிந்துவிடம் திரும்பி நடந்ததை விளக்க சிந்து கணவனை முறைக்க அவன் தன் தோள்களை குலுக்கி கொண்டு சிரிக்க அந்த இடமே கலகலப்பாக மாறியது.

அன்று வீடு வந்ததும் கேலியும், கிண்டலும், கெஞ்சலும், கொஞ்சலும் அரங்கேறின.

நரேந்திரனின் அலுவலக சூழல் பிடித்து போய் மறுநாளில் இருந்து சிந்து வேலைக்கு செல்ல ஆரம்பித்தாள்.



அதில் கிடைக்கும் பணத்தை தன் தந்தையை பார்க்கும் போதெல்லாம் கொடுத்து வந்தாள். தன் சம்பாத்தியம் முழுவதையும் அவள் அவருக்கே கொடுத்தாள்.

நரேந்திரன் சிந்துவின் பெயரில் வங்கிக் கணக்கு ஆரம்பித்து லட்ச கணக்கில் பணம் போட்டு வைத்திருந்தான் தான். ஆனால் அந்தப் பணத்தை எடுத்து தன் தந்தைக்கு கொடுக்க அவள் என்றுமே நினைக்கவில்லை.

அவனை விட்டுப் பிரிந்து வந்த பின்பே அந்தப் பணத்தை தன் தேவைகளுக்காக அவள் பயன்படுத்த ஆரம்பித்தாள்.

அந்தப் பணத்தை வைத்து தான் இப்பொழுது தங்கி இருக்கும் வீட்டிற்கு அட்வான்ஸ் கொடுத்தாள். தன் சம்பள பணம் தீர்ந்து போய் வீட்டு செலவை சமாளிக்க முடியாத பொழுதெல்லாம் அந்தக் கணக்கில் இருந்து எடுத்து செலவு செய்தாள்.

நரேந்திரன் அன்று தங்களுக்கு இடையே நடந்தவற்றை நினைத்துப் பார்த்து ஒரு முறுவலோடு தூங்கச் சென்றான். அங்கே அவன் மனைவியோ தூக்கம் வராமல் துக்கத்தில் உழன்றாள்.



## 25

காலையில் எழுந்த சிந்து யாரிடமும் எதுவும் பேசாமல் மகளையும் கிளப்பி தானும் கிளம்ப ஆரம்

பித்தாள். மகளை பள்ளி செல்லும் வேனில் ஏற்றி யவள் தன் அலுவலகம் நோக்கிச் சென்றாள்.

அன்று மதிய இடைவெளியில் அந்த புட் கோர்ட்டில் அமர்ந்து தன் அண்ணனுக்காக காத்திருக்க ஆரம் பித்தாள். காலையிலே அவனுக்கு போன் செய்து தன்னை சந்திக்க வருமாறு அவனை அழைத்திருந் தாள்.

அவளை அதிக நேரம் காக்க வைக்காமல் அவன் அங்கே வந்து சேர்ந்தான்.

''ஹாய் சிந்து! எப்படி இருக்கே?''

''ம்மா நல்லா இருக்கேண்ணா. நீங்க, அண்ணி, குட்டி பையன் எல்லோரும் எப்படி இருக்கீங்க?''

''எல்லோரும் நல்லா இருக்கோம்.''

''சாரிண்ணா! உன்னை வேலைக்கு நடுவே டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?''

''இட்ஸ் ஓகே. முக்கியமில்லாத விஷயத்துக்கு நீ என்னை வர சொல்ல மாட்டேன்னு எனக்கு தெரி யாதா? சொல்லு சிந்து என்ன விஷயம்?''

''நரேன் என்னை தேடி வந்திருக்கார்.''

''எதுக்கு? சேர்ந்து வாழுற ஐடியாவில் வந்திருக் காரா? இல்லைன்னா...''

''சேர்ந்து வாழுற ஐடியாவில் தான் வந்திருக்கார்.''

''உன்னோட விருப்பம் என்ன? உனக்கு அவர் கூட போகிறதில் இஷ்டமா?''



''நான் என்ன செய்யணும்னு நீ நினைக்கிறே அண்ணா!''

''இதுல நான் நினைக்கிறதுக்கு என்ன இருக்கு சிந்து? உன்னோட சந்தோஷமும் நிம்மதியும் தான் எனக்கு வேணும். அன்னைக்கு நீ பிரியுறப்போ எடுத்த முடிவே எனக்கு பிடிக்கலை தான்.''

''ஆனா நரேன் உன்னை ரொம்ப கொடுமை படுத்தினதா அப்பா சொன்னப்போ அவனெல்லாம் ஒரு மனுஷ ஜென்மமா... அவன் கூட சேர்ந்து வாழுறதுக்கு பதிலா நீ வாழாமல் இருக்கலாம்னு நான் நினைச்சேன். இப்போ அவன் திருந்தி வந்திருக் கலாம். நீயும் அவனை மன்னிக்க தயாரா இருந்தால்... ஜஸ்ட் கோ அஹெட்.''

''அண்ணா! உனக்கு ஒரு விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புறேன். என்னை நரேன் என் னைக்குமே கடுமையா ஒரு வார்த்தை கூட பேசிய தில்லை.''

''பிரச்சனை எனக்கும் எங்க அத்தைக்கும் தான். அவங்க சொன்ன சில நல்ல விஷயங்கள் என் மனசிலே ஏறலை.''

''அது மட்டுமில்லை... அவங்க தன் மகனை தனியாவே வளர்த்து ஆளாக்கினதால அவங்களால என்கிட்ட நரேனை முழுசா விட்டுக் கொடுக்க முடி யலை.''

''எனக்கு அப்புறமா வந்தவள் நீ... அதனால நரேன் எனக்கு தான் சொந்தம்னு அவங்க சொல்லுவாங்க.

அவர் என் ஹஸ்பண்டு. எனக்கு தான் அவர் சொந்தம்னு நான் சொல்லுவேன்.''

''எங்க அத்தையும் எனக்காக விட்டுக் குடுக்கலை. நானும் கொஞ்ச நாள் பொறுமையா காத்திருப் போம்னு இறங்கி போக விரும்பலை.''

''எங்க ரெண்டு பேருக்கு இடையிலே நரேன் மாட்டிக்கிட்டு முழிச்சாருன்னு தான் சொல்லணும். ஆனா அப்ப கூட எங்க ரெண்டு பேரையும் பார்த்து அவர் ஒரு நாளும் கத்தினது கூட கிடையாது.''

''எங்களுக்கு எவ்வளவோ எடுத்து சொல்லிகிட்டே இருப்பார். ஒரு கட்டத்துல நான் நரேன்கிட்ட உங் களுக்கு நான் வேணுமா இல்லை உங்க அம்மா வேணுமான்னு கேட்டேன்.''

''அவரால அந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியலை. எங்க அம்மாவை விட்டுடுறேன்னு அவர் சொல்லலை. அதனால நான் தான் விலகி வந்தேன்.'' என்ற நீண்ட விளக்கம் அளித்தாள்.

அவளது விளக்கத்தை அவள் அண்ணன் நம்ப முடியாத ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந் தான்.

''அடிப்பாவி! லூசா நீ? இதெல்லாம் ஒரு பிரச்ச னையா? நரேன் அப்பா அவரோட ஆறாவது வய சிலே இறந்துட்டதால அத்தை தான் தனி மனுஷியா அவரை வளர்த்து ஆளாக்கி இருக்காங்க.''

''அதனால அவங்க நரேனை முழுக்க முழுக்க சார்ந்து இருப்பது இயற்கையான விஷயம் தானே!



மருமகள் தன் மகனை தன்கிட்ட இருந்து பிரிச்சிடு வாளோன்னு பயந்து போய் இருப்பாங்க.''

''நான் அப்படி கிடையாது. உங்களையும் உங்க மகனையும் நான் நல்லா பார்த்துக்குவேன்னு நீ அவங்களுக்கு புரிய வச்சிருக்க வேண்டாமா?'' என்று கேட்டான்.

''ம்ம்ம் நான் அத்தையை மதிச்சு ஒரு நாளும் பேசியதில்லை. அப்புறம் எப்படி அவங்களுக்கு என் மேல நம்பிக்கை வரும்? என் கல்யாணத்துக்குன்னு அவங்க நிறைய பணம் கேட்டு நம்ம அப்பாவை தொல்லை குடுத்துட்டாங்களேன்னு எனக்கு அவங்க மேல ஒரு கோபம்.''

''ஸ்டாப்! ஸ்டாப்! அப்பா உன் கல்யாணத்துக்கு பணம் செலவு செஞ்சாரா? இது யாரு சொன்ன கதை?''

''அப்பா தான் சொன்னார்.''

''அவர் தானே... பண விஷயத்துல நல்லாவே பொய் சொல்லுவார். அவர் பேச்சை நீ உண்மைன்னு நம்பினியாக்கும்?'' என்றதும் அவள் தன் அண் ணனை ஆச்சரியமாய் ஏறிட்டாள்.

''என்ன அப்படி பார்க்கிறே சிந்து?''

''அப்பா பொய் சொல்லுவாருங்கிற விஷயமே இப்போ தான் எனக்கு தெரிஞ்சது.''

''நம்ம அப்பாக்கும் அம்மாவுக்கும் பணம் தான் என்னைக்குமே பெருசு. அதுக்காக அவங்க என்ன வேணா செய்வாங்க.''

''என்ன அண்ணா இப்படி சொல்லுறே?''

''வேற எப்படி சொல்ல சொல்லுறே? பணத்துக்கு ஆசைப்பட்டு தானே பெத்த பிள்ளையான என்னை பணக்கார வீட்டுல அடமானம் வச்சாங்க.''

''உன்னை வசதியா வாழ வச்சு பார்க்க ஆசைப் பட்டதிலே என்ன தப்பு சொல்ல முடியும்? எல்லா அம்மா அப்பாவும் தன் பிள்ளைகள் வசதியா வாழணும்னு தானே நினைப்பாங்க.''

''ம்ம்ம் பிள்ளைகள் வசதியா வாழணும்னா ஒண்ணு அவங்க சம்பாதிச்சு சொத்து சேர்த்து வைக்கணும். இல்லை பிள்ளை சம்பாதிக்க நல்ல கல்வியை குடுக் கணும். இப்படி பிள்ளையை ஒரு வீட்டுல அடமானம் வச்சுட்டு பின்னாடியே வந்து ஒட்டிக்க நினைக்கிற பணத்தாசை பிடிச்ச பிரகஸ்பதிகளா இருக்க கூடாது.''

''இவ்வளவு கடுமையான வார்த்தைகளை நீ யூஸ் பண்ணுவேன்னு நான் நினைச்சு பார்க்கலை அண்ணா. அப்பா பண விஷயத்துல என்கிட்ட நிறைய பொய் சொல்லி இருக்காருங்கிற விஷயமே எனக்கு இப்போ தான் தெரிஞ்சது. ஆனா நீ என்னன்னவோ சொல்லி அவரை திட்டுறே!''

''அம்மா அப்பாவோட உண்மை சுயரூபம் தெரி யாதுன்னா நீ சொல்லுறே? sorry to say like this... அவ்வளவு வடிகட்டின முட்டாளா நீ? மனுஷங்களை எடை போட தெரியலைன்னா நீ வாழ்க்கையிலே எப்படி முன்னேறுவ?''



''அதான் வாழ்க்கையை தொலைச்சுட்டு நிக்கி றேனே... அப்பா என்னெல்லாம் தெரியுமா செஞ்சிருக் கார்?'' என்றவள் அவனிடம் அனைத்து கதை களையும் தெரிவித்தாள்.

'இத்தனை நாளும் அப்பா என் வாழ்க்கையை தான் கெடுத்தாருன்னு நினைச்சேன். ஆனா இவளோட வாழ்க்கையிலயும் விளையாடி இருக்காரா? கஷ்டமோ நஷ்டமோ நானாவது மனைவி பிள்ளையோட சேர்ந்து வாழ்ந்துக்கிட்டு இருக்கேன்.'

'ஆனா இவள்...? அப்பா எங்கேன்னு கேட்கிற மித்துவை சமாளிக்க முடியாமல் எப்படி எல்லாம் திணறி இருப்பாள். ஒரு நல்ல அப்பாவா நியாயம் தெரிஞ்ச மனுஷனா மகளை கொண்டு போய் நரேந்திரனோட வாழ வச்சிருக்க வேண்டாமா?'

'நாங்க ரெண்டு பேரும் வேற யார் வீட்டிலாவது பிறந்திருக்கலாம்.' என்று அவள் அண்ணன் நினைத் தான்.

''என்ன அண்ணா யோசிக்கிறே?''

''அப்பா பத்தி யோசிச்சுக்கிட்டு இருந்தேன். அவர் பண விஷயத்திலே நிறைய தில்லாலங்கடி பண்ணு வாருன்னு எனக்கு தெரியும். ஆனா இப்படி நரேன் மேல தான் தப்புன்னு என்னை எதுக்கு நம்ப வச்சாருன்னு தெரியலை.''

''அப்போ தானே நீ நரேனை சந்திச்சு சமரசம் பேச போக மாட்டேன்னு நினைச்சு இருக்கலாம்.''

‘‘நீ சொல்லுற மாதிரி இருக்க சான்ஸ் அதிகம் சிந்து. உன்னையும் நரேனையும் வெட்டி விட்டுட்டால் கிடைக்கிற சொத்தில் அவர் செட்டில் ஆகிடலாம்னு பிளான் பண்ணி இருந்திருப்பார்.

‘‘எனக்கு தெரிஞ்சு உங்க அத்தைக்கு நம்ம அப்பா அம்மாவை சுத்தமா பிடிக்காது. தன்னோட வீட்டுல இவங்க ரெண்டு பேரையும் அவங்க தங்க விட்டதே இல்லை.’’

‘‘ம்ம்ம் எனக்கு அந்த கடுப்பும் எங்க அத்தை மேல இருந்துச்சு. இவங்க குணம் தெரிஞ்சதால தான் அவங்க உள்ளே விட்டிருக்க மாட்டாங்கன்னு இப்ப தானே புரியுது.’’

‘‘நீ நரேன் கூட வசதியா வாழ்ந்தாலும் அதனால தனக்கு ஒரு பிரயோஜனம் இல்லைன்னு அப்பா நினைச்சிருப்பார். சொத்தோட நீ வெளியே வந்துட்டால் உன்னோட ஒட்டிக்கலாம்னு நினைச்சிருப்பார்.

‘‘இருக்கலாம் அண்ணா.’’ என்று ஆமோதித்தாள்.



## 26

இருவருமே நடந்ததை அசைபோட்டவாறு சில நொடிகள் அமைதியாகினர். அவள் அண்ணன் தன் கதையை அவளிடம் தெரிவிக்க விரும்பினான்.



‘‘சிந்து! உனக்கு நான் சில விஷயங்களை சொல்லுறேன். அப்பா உன்கிட்ட கண்டிப்பா சொல்லி இருக்க மாட்டார். உன் கல்யாணம் முடிஞ்ச பின்னால அப்பா என் கல்யாணத்தையும் முடிச்சு வச்ச விஷயம் மட்டும் தான் உனக்கு தெரியும்.’’

‘‘நான் ஒரு பெண்ணை ஒன் சைடா லவ் பண்ணினேன். அவள் ரொம்ப அமைதியானவள். என் கூட தான் வேலை செஞ்சாள். நான் அவளை கல்யாணம் பண்ண ஆசைப்பட்டேன். ஆனா பொண்ணு மிடில் க்ளாஸ்னு சொல்லி அப்பா மறுத்துட்டார்.’’

‘‘வீட்டோட மாப்பிள்ளையா அனுப்ப சம்மதிச்சு உங்க அண்ணியை எனக்கு கட்டி வச்சார். என் மாமனார் வீட்டு வசதி எப்படின்னு உனக்கே தெரியும்.’’

‘‘நாங்களும் வசதியானவங்கன்னு காட்டிக்க சில லட்சங்களை செலவு செஞ்சு தான் அப்பா என்னோட கல்யாணத்தை நடத்தினார். நம்ம அப்பாவோட கணக்கு என்ன தெரியுமா.’’

‘‘பையனை மிக பெரிய இடத்திலே கட்டி குடுத்துட்டு சில மாசங்கள் கழிச்சு நாமளும் அவன் கூடவே செட்டில் ஆகிடலாம்னு எண்ணம். அதனால நல்ல விதமா உங்க அண்ணி கிட்டயும் அவளோட அம்மா அப்பாகிட்டயும் படம் போட்டுக்கிட்டு இருந்தார்.’’

‘‘மித்துவுக்கு அந்த விபத்து நடந்த பிறகு தான் உங்க* அண்ணிக்கு வளைகாப்பு நடந்துச்சு. நீ

மித்துவை பார்த்துக்கணும்னு சொல்லி அந்த பங்ஷனுக்கு வரலை. அப்பா தன் மருமகளுக்கு என்ன தெரியுமா பிரசண்ட் பண்ணினார்?''

''வெள்ளியில் ஏதாச்சும் பொருள் வாங்கி கொடுத்தாரா?''

''அதான் இல்லை. வைரத்தில் வளையல் போட்டார்.''

''என்னது வைர வளையலா?! அவ்வளவு பணம் வச்சிருந்தாரா?''

''நானும் ஆச்சரியப்பட்டேன். அவ்வளவு பணம் இன்னும் இவர் வச்சிருக்காரான்னு? இப்போ நீ சொல்லி தானே தெரியுது. அது மித்துவோட மெடிக்கல் பில் கட்ட நீ குடுத்த பணம்னு.''

அவள் தன் வாயில் கை வைத்துக் கொண்டு, ''அந்த பணத்தை நான் நரேன் எனக்கு வாங்கி குடுத்த நகையை வித்து புரட்டினேன் தெரியுமா? அப்பா போட்ட நகையை தான் நான் முதல்ல விக்கிறதா இருந்தேன். ஆனா அவர் 'தான்... நரேன் பொண்ணோட மெடிக்கல் பில்லை நரேன் நகையை வித்து கட்டுன்னு சொன்னார்.'' என்றாள்.

''அப்போ தானே திரும்ப அவருக்கு என்னைக் காவது பணம் தேவைப்படும் போது நான் போட்ட நகை தானேம்மா இது... அதை தா அப்படின்னு உன்கிட்ட கேட்டு வாங்க முடியும்?''

''எனக்கு ஆச்சரியமா இருக்குண்ணா.''



''இன்னும் நான் கதையை முழுசா சொல்லி முடிக்கலை. வைர வளையலை போட்டவங்க உங்க அண்ணியோட பிரசவம் வரைக்கும் கூடவே இருந்து அவளை பார்த்துக்கிறதா சொல்லி பெட்டி படுக்கையோடு வந்து டேரா போட்டாங்க.''

''என்னையே எங்க மாமனார் அவ்வளவு மதிப்பா நடத்த மாட்டார். நம்ம அப்பா பண்ணுற அலும்பை எல்லாம் பார்த்தவருக்கு அவரை பிடிக்குமா சொல்லு. ரெண்டே நாள் தான். 'அப்புறம் உங்க வீட்டுக்கு எப்போ கிளம்பி போகப் போறீங்கன்னு' எங்க மாமனார் கேட்டார்.''

''மருமகளுக்கு பிரசவம் முடிய வேண்டாமான்னு அம்மா சொன்னாங்க. 'என் மகளை பார்த்துக்க அவளோட அம்மா இருக்காள். அவளுக்கு வேலை செஞ்சு குடுக்க பத்து வேலைக்காரங்க இருக்காங்க. நீங்க தேவை இல்லை. நீங்க கிளம்புங்கன்னு' முகத்துக்கு நேரா சொல்லிட்டார்.''

''என்னங்க ஒரு சம்பந்தின்னு கூட பார்க்காமல் இப்படி பேசுறீங்கன்னு அப்பா குதிச்சார். 'நாங்க வீட்டோட மாப்பிள்ளை தான் வேணும்னு கேட்டோம். வீட்டோட சம்பந்திகள் வேணும்னு கேட்கலை. உங்களுக்கு எல்லாம் இந்த வீட்டுல இடம் இல்லைன்னு' எங்க மாமியார் சொன்னாங்க.''

''எனக்கு உடம்பெல்லாம் கூசிப் போச்சு. ஆனா அப்பா ரோஷப்பட்டு கிளம்பலை. எங்க மாமனாரை பார்த்து கேட்டாரு பாரு ஒரு கேள்வி...''

''அப்படி என்ன கேள்வி கேட்டார்?''

''இதுக்கா நாங்க அவ்வளவு செலவு செஞ்சு வைர வளையல் எல்லாம் போட்டோம்? அந்த பணத்தை திருப்பி குடுங்கன்னு கேட்டார்.''

''அடக்கடவுளே! இப்படியா கேட்டார்?''

''ஆமா சிந்து என்னை அசிங்கப்படுத்திட்டார். அப்பா அப்படிக் கேட்டதும் எங்க மாமனார் வளைய லுக்கான பணத்தை குடுத்து வெளியே அனுப்பிட் டார்.''

''அந்த வீட்டுல என்னால யார் முகத்திலாச்சும் முழிக்க முடியுமா சொல்லு? அவமானத்துல பூமிக்குள்ள புதைஞ்சிட மாட்டோமான்னு எனக்கு தோணுச்சு.''

''இனிமேல் வீட்டு பக்கம் வரவே கூடாதுன்னு எங்க மாமனார் ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா சொல்லிட்டார். அதுக்குப்பறம் அவங்களும் வரலை.''

''என்ன அண்ணா இப்படி சொல்லுறே! அப் பப்போ உன்னையும் உன் மகனையும் பார்க்க போகிறதா சொல்லிட்டு கிளம்பி போவாங்களே!''

''அதெல்லாம் பொய். அவர் அந்த வீட்டு பக்கம் வந்து பல மாசம் ஆகுது. நான் தான் அப்பப்போ நம்ம வீட்டுக்கு வந்து ஒரு பத்து நிமிஷம் உங்களை எல்லாம் எட்டி பார்த்துட்டு போறேன்.''

''நான் நரேன் கூட வாழலைன்னு தான் உன் மாமனார் வீட்டு பக்கம் எட்டிப் பார்க்காமலே



இருந்தேன். அப்பாவும் அம்மாவும் இவ்வளவு குழப்பம் பண்ணி வச்சிருப்பாங்கன்னு நான் நினைக்கவே இல்லை.''

''அப்பா நரேன்கிட்டயே ஒரு தொகை மாசாமாசம் வாங்கி இருக்கார். உன்னை எப்படி சும்மா விட் டார்?''

''மாசம் பிறந்தால் அவர் அக்கவுண்டில் நான் கரெக்ட்டா பணம் போட்டுடுவேன். ஒரு நாள் லேட் டானால் கூட 'நான் சாப்பிடாமல் பட்டினி கிடந்து சாகணும்னு ஆசைப்படுறியான்னு' கேட்டு போன் போட்டு திட்டுவார்.''

''எல்லா பணத்தையும் வச்சு என்ன அண்ணா செய்யுறார்?''

''நாம அவரை பார்த்துக்க மாட்டோம்னு நினைச்சு பத்திரமா சேர்த்து வைக்கிறாரா இருக்கும். இவர் நல்லபடியா இருந்தால் பிள்ளைகளும் இவரை நல்ல படியா பார்த்துக்குவாங்க என்கிற சிம்பிள் லாஜிக் தெரியாமல் இருக்கார்.''

''அம்மா அப்பா ரெண்டு பேருமே எப்படி இப்படி இருக்காங்க? யாராச்சும் ஒருத்தராச்சும் நல்லவங்களா இருந்திருக்கலாம்ல.''

''அவங்க ரெண்டு பேரும் பக்கத்து பக்கத்து வீட்டுக்காரங்க தானே சிந்து. இந்த குணம் ஒத்து போனதால தான் கல்யாணமே பண்ணி இருப்பாங் களா இருக்கும். ஆனா கடவுள் பணத்து மேல பற்று

இல்லாத ரெண்டு குழந்தைகளை குடுத்து அவங்க ஆசைக்கு ஆப்பு அடிச்சுட்டார்.''

''உன்கிட்ட ஒரு விஷயம் கேட்கட்டுமா?''

''கேளு சிந்து.''

''உன் மாமனார் வீட்டுல நீ ரொம்ப கஷ்டப் படுறியா?''

''ம்ம்ம் கஷ்டம்... அதை எப்படி சொல்லுறது? திரும்பின பக்கமெல்லாம் பணத்தோட பங்களிப்பு இருக்கும். அவங்க வீடு, கார், கம்பெனின்னு எல் லாமே ரொம்ப பெருசா, பகட்டா இருக்கும்.''

''ஆனா அதுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லைங்கிற போது ஒரு ஒட்டாத தன்மை வந்துடும்ல. அதுவும் நான் மிடில் க்ளாஸ் என்பதால அவங்களும் என்னை பெருசா மதிக்க மாட்டாங்க.''

''இதுக்கு நடுவிலே நம்ம அப்பா பண்ணின அலும்பு வேற... ஆனா முன்னாடிக்கு இப்போ பரவா யில்லை. நான் அப்பா மாதிரி இல்லை. பணம் என்னை மயக்கலைன்னு புரிஞ்சுக்கிட்டதால என்னை கொஞ்சம் மதிப்பா பார்க்கிறாங்க.''

''நம்மளோட நடத்தை தான் நமக்கான மரியா தையை என்னைக்குமே சம்பாதிச்சு குடுக்கும். நீ உன் மாமியார் கூட தான் சண்டை போட்டு பிரிஞ்சு வந்தேன்னு தெரிஞ்சிருந்தால் அன்னைக்கே உனக்கு அட்வைஸ் பண்ணி உன்னை கொண்டு போய் அங்கே விட்டுட்டு வந்திருப்பேன்.''



''கல்யாணத்துக்கு அப்புறம் உனக்கும் எனக்கும் ஒரு இடைவெளி வந்துடுச்சு இல்லண்ணா.''

''என் லவ்வை புரிஞ்சுக்காமல் இப்படி ஒரு பணக்கார இடத்திலே என்னை கொண்டு போய் தள்ளி தினம் தினம் என்னை சங்கடப்பட வச்சுட் டாரேன்னு அப்பா மேல எனக்கு செம கோபம். அத னால என்னோட பிறந்த வீட்டு உறவுகளோடு எனக்கிருந்த ஒரு நெருக்கம் என் கல்யாணத்துக்கு அப்புறமா இல்லாமலே போயிடுச்சு.''

''நான் உன்கிட்ட பேசி இருந்தால் எனக்கும் நரே னுக்கு இந்த இடைவெளி வந்திருக்காதோ?''

''ம்ம்ம் அப்படியும் சொல்ல முடியாது சிந்து. என் வாழ்க்கையே அங்கே தள்ளாடுச்சா... அதுல நான் நீந்தி கரை சேர்வேனா இல்லை விட்டு விலகி வரு வேனான்னு தெரியாத நிலையில் உனக்கு எப்படி அட்வைஸ் பண்ணி இருப்பேன்?''

''உண்மை தெரிஞ்சாலும் அட்வைஸ் பண்ணி இருப்பேனாங்கிறது டவுட் தான். A pot must not call the kettle black இல்லையா? நான் யோக்கியமா இருந்தால் தானே அடுத்தவங்களுக்கு அட்வைஸ் பண்ண முடியும்.''

''நமக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு அம்மா அப்பா? நம்மளை விடவா அவங்களுக்கு பணம் பெருசா தெரியுது?''

''வாழ்க்கையிலே ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு லட்சியம். நம்ம அப்பாக்கு லட்சங்களை ஆள்வது

தான் லட்சியமே!'' என்று விரக்தியாக முறுவலித்தான்.

''போனதை விடு. இனிமேலாச்சும் உன் வாழ்க்கையை பாரு. சின்ன சின்ன மனஸ்தாபம் இல்லாத குடும்ப வாழ்க்கை யாருக்குமே அமையாது.''

''மாசாமாசம் நான் அப்பாவுக்கு பணம் அனுப்ப தான் போறேன். நான் அவர் பக்கத்திலே இருந்து பார்த்துக்கிற பாக்கியம் அவருக்கு என்னைக்குமே கிடைக்க போறதில்லை. இது அவரா தேடிக்கிட்டது தான். நான் ஒண்ணும் செய்ய முடியாது.''

''நானும் அவங்களை விட்டுட்டு போயிட்டால் அவங்க தனியா என்ன செய்வாங்க அண்ணா?''

''ஒருத்தன் பணக்கார வீட்டுல பிறக்கலை என்றாலும் பணக்காரனா மாற ஆசைப்படுறதிலே தப்பில்லை. அதுக்கு அவன் சின்சியரா உழைக்கணும்.''

''அதை விட்டுட்டு குறுக்கு வழியிலே உள்ளே நுழைஞ்சு அடுத்தவன் காசிலே வாழ ஆசைப்படக்கூடாது. நம்ம அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அந்த ஆசை தான்.''

''உன்னை ஒரு கல்யாணத்துல பார்த்து நரேந்திரனுக்கு பிடிச்சு இருந்துச்சுன்னு உங்க அத்தை எதுவுமே டிமாண்ட் பண்ணாமல் உன்னை ஏத்துக்கிட்டாங்க.''

''எந்த செலவும் பண்ணாமல் பொண்ணை நல்ல இடத்திலே கட்டி குடுத்துட்டோமேன்னு நம்ம



அம்மாவும் அப்பாவும் சந்தோஷப்பட்டு இருக்கணும். ஒதுங்கி நின்னு வேடிக்கை பார்த்திருக்கணும். ஆனா அவங்க அதை செய்யலை.''

''என் விஷயத்திலேயும் உல்டாவா தான் நடந்துச்சு. எனக்கு ஏத்த பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணி வச்சுட்டு கடைசி வரைக்கும் என் கூடவே சேர்ந்து வாழ்ந்து காலத்தை கழிச்சு இருக்கலாம். ஆனா அவங்க அதையும் செய்யலை.''

''இப்படி அவங்க வாழ்க்கையை அவங்களே கெடுத்துக்கிட்டாங்க. அதுக்கு நாம என்ன செய்ய முடியும்?''

''நீ அவங்களை பத்தி எல்லாம் யோசிக்காமல் நரேன் கூட கிளம்பி போ. ஆல் த பெஸ்ட் ஃபார் யுவர் ஃபியூச்சர்.'' என்றவன் தங்கையின் தலையில் கை வைத்து அழுத்திவிட்டு விடைபெற்றுச் சென்றான்.



## 27

மதியத்துக்கு மேல் அவளால் அலுவலகத்தில் வேலை செய்ய முடியவில்லை. வேலையில் கவனம் செல்லவில்லை. அதனால் விடுப்பு சொல்லிவிட்டு வீட்டிற்கு கிளம்பினாள்.

வழக்கத்திற்கு மாறாக சீக்கிரம் வீடு திரும்பிய மகளிடம் ஏன் எதற்கு என்று அவளுடைய பெற்றோர் காரணம் கேட்கவில்லை. மிதுளா வந்ததும் அவளுக்கு உடை மாற்றி விட்டாள்.

''அம்மா! பார்க்கில் விளையாட போகலாம். வாங் கம்மா.'' என்று மிதுளா அழைத்ததும் தன் கைப் பையை மட்டும் எடுத்துக் கொண்டு அவளுடன் சென்றாள்.

சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்த சிந்து முதல் நாள் இரவு நடந்ததையும், மதியம் தன் அண்ணன் தன்னிடம் கூறிய விஷயங்களை பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

நரேந்திரன் அவர்கள் இருவரையும் தேடிக் கொண்டு அங்கே வந்தான். தன் மனைவியைப் பார்த்தவன் வெகு நாட்களுக்கு பின் கையாட்டிச் சிரித்தான்.

ஆனால் அவளோ ஒரே இடத்தில் தன் பார்வையை செலுத்தி வேறு லோகத்தில் இருந்ததால் அவள் கண்களுக்கு அவன் புலப்படவே இல்லை.

அவள் அருகே அமர்ந்த நரேந்திரன் அவள் தன்னை திரும்பி பார்ப்பாள் என்று காத்திருந்தான். அவள் இவன் புறம் திரும்பவே இல்லை.

''ஹாய்! எப்போ வந்தீங்க?'' என்று கேட்டும் அவளிடம் அசைவுமில்லை. எந்தப் பதிலும் இல்லை என்றதும் அவள் தோள் தொட்டு உலுக்கினான்.



அவனது உலுக்கலில் தன் யோசனையில் இருந்து மீண்டவள் கணவனை கண்டதும், ''எப்போ வந்தீங்க நரேன்?'' என்றாள்.

அவன் பதில் ஒன்றும் சொல்லாமல் அவளை தீர்க்கமாக பார்க்கவும், ''என்ன ஆச்சு நரேன்?'' என்றாள்.

''நானும் அதையே தான் கேட்கிறேன் உனக்கு என்ன ஆச்சு? உன்னை பார்த்து கையாட்டுறேன். சிரிக்கிறேன். பக்கத்துல உட்கார்ந்து பேசுறேன். எதுவுமே உன் மூளையை எட்டலை. அப்படி என்ன நடந்துச்சு?'' என்றதும் அவளது கண்களில் கண்ணீர் அரும்ப ஆரம்பித்தது.

முதல் நாள் இரவு தன் தந்தை ஏற்றிய மன பாரத்தை சிந்து தன் அண்ணனிடம் சிறிது இறக்கி வைத்தாள். ஆனால் அவனோ மேலும் சில உண்மை களைச் சொல்லி அந்த பாரத்தின் அளவை ஏற்றி விட்டு சென்று விட்டான்.

இப்பொழுது தன்னுடையவனைக் கண்டதும் அந்தப் பாரத்தை இறக்கி விடத் துடித்தாள். அது வார்த்தைகளாய் வெளிப்படாமல் கண்ணீராய் வெளிப்பட்டது.

மனைவியிடம் ஒன்றும் சொல்லாமல் தன் மகள் புறம் திரும்பிய நரேந்திரன், ''மித்து பேபி!'' என்று அழைத்தான்.

தந்தையின் குரலை கேட்டு சுற்றிலும் பார்வை யிட்ட மிதுளா அவனைக் கண்டு புன்னகைத்தாள்.

தன் அருகே வருமாறு அவன் கையாட்டி அழைக்கவும் அவனிடம் ஓடி வந்தாள்.

எழுந்து அவளை தூக்கிக் கொண்டவன் தன் வலது கையால் மனைவியின் கையைப் பற்றி அவளை எழுப்பி தன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

தாயின் கண்ணீரை கண்ட மிதுளா, ''எதுக்கும்மா அழறீங்க?'' என்றாள்.

''ஒண்ணுமில்லைடா செல்லம்.''

''டாடி! அம்மா காலையிலயும் இப்படி தான் அழுதாங்க.''

''அப்பா பார்த்துக்கிறேன்டா பேபி.''

வீட்டை அடைந்தவன் மிதுளாவை இறக்கி விட்டு விட்டு கதவை பூட்டி விட்டு வந்தான்.

''மித்து பேபி! அப்பா உனக்காக கேக் வாங்கி வச்சிருக்கேன். சாப்பிடுறியா?'' என்றதும் அவள் சந்தோஷமாய் தலையாட்டினாள்.

அவளுக்கு சாப்பிட கொடுத்தவன் தொலைக் காட்சியை இயக்கி அவளுக்கு பிடித்த கார்ட்டூன் சேனலை போட்டு விட்டான்.

''அம்மாவும் அப்பாவும் ரூமிலே உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்கோம். நீ டிவி பாருடா குட்டி.'' என்றவன் மனைவியை அழைத்துக் கொண்டு படுக்கை அறைக்குள் சென்றான்.



அவளை படுக்கையில் அமர வைத்தவன் அவளருகே அமர்ந்து கொண்டு, ''இப்போ சொல்லு என்ன நடந்துச்சு?'' என்றான்.

நேற்றில் இருந்து நடந்தவற்றை எல்லாம் சொன்னாள். தன் அண்ணனை சந்தித்தது பற்றியும் அவன் கூறியவற்றை பற்றியும் சொன்னாள்.

அவனது புஜத்தில் சாய்ந்து கொண்டு கண்ணீர் விட்டவளை தோளோடு அணைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான். அவள் மனபாரம் இறங்கட்டும் என நினைத்து சிறிது நேரம் அழவிட்டான்.

அதன் பின், ''போதும் சிந்து! போய் முகம் கழுவிட்டு வா. இதுக்கு மேல நீ அழக் கூடாது.'' என்றான்.

அவளும் குளியலறைக்கு சென்று தன் முகத்தை கழுவிவிட்டு வந்தாள். அடுத்து என்ன செய்வது என்பது பற்றி பேசுவதற்கான நேரம் வந்துவிட்டதாக நரேந்திரன் உணர்ந்தான்.

''சிந்து! இப்ப என்ன செய்யலாம்னு நினைக்கிறே!''

''நீங்க சொல்லுங்க. நான் என்ன செய்யட்டும்?''

''எப்போ என் பொண்ணை பார்க்க சம்பளம் வேணும்னு அவங்க கேட்க ஆரம்பிச்சாங்களோ... இனிமேல் அவங்களை நம்பி நான் என் பொண்ணை அந்த வீட்டுல விட்டு வைக்க மாட்டேன்.

''இப்பவே நீ உன் வீட்டுக்கு போ. முக்கியமான பொருட்களை மட்டும் எடுத்துக்கோ. நான் நரேன்

கூட போறேன்னு சொல்லிட்டு வந்துடு. உங்க அண்ணனை மாதிரி நீயும் மாசாமாசம் ஒரு தொகையை பேங்கில் அவர் கணக்கில் அனுப்பி வை. இது தான் என்னோட முடிவு. இனி நீ தான் முடிவெடுக்கணும்.''

''சரி நரேன். நான் அப்படியே செய்யுறேன்.''

''மித்து இங்கேயே இருக்கட்டும். சின்ன குழந்தை முன்னாடி எந்த வாக்குவாதமும் வச்சுக்க வேண்டாம்.''

''சரி நரேன். நான் மட்டும் போயிட்டு வரேன்.'' என்றவள் கிளம்பிச் சென்றாள்.

அவள் சென்ற இரு நிமிடங்களில் வீட்டின் அழைப்பு மணி ஒலிக்கவும், 'இப்ப தானே போனாள். அதுக்குள்ளே எப்படி வர முடியும்?' என்று குழம்பிய நரேந்திரன் கதவை திறக்க சென்றான்.

கதவை திறந்தவன் அங்கே சிந்துவின் அண்ணன் நிற்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டவனாய், ''வாங்க!'' என்று வரவேற்றான்.

சிந்துவின் அண்ணன் நரேந்திரனிடம் அதிகம் பேசியதில்லை. அளவாய் தான் பேசிப் பழகி இருக்கிறான்.

நடுவிலே ஏற்பட்ட இரு வருட இடைவெளி வேறு அவனை சங்கடம் கொள்ள வைத்தது. அதனால் அவன் மௌனமாகவே உள்ளே வந்து அமர்ந்தான்.



அவனது சங்கடத்தைப் புரிந்து கொண்ட நரேந்திரன், ''எப்படி இருக்கீங்க? உங்க பாமிலியிலே எல்லோரும் எப்படி இருக்காங்க?'' என்று பேச்சைத் துவக்கி வைத்தான்.

நரேந்திரன் தன்னிடம் இயல்பாய் கேள்வி எழுப்புவதை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டே, ''நாங்க எல்லோரும் நல்லா இருக்கோம். நீங்க எப்படி இருக்கீங்க நரேன்?'' என்று விசாரித்தான்.

''ரொம்ப நல்லா இருக்கேன். மதியம் நீங்க சிந்துவை மீட் பண்ணி பேசினதா சொன்னாள்...'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது படுக்கை அறையில் இருந்து தன் பொம்மை ஒன்றுடன் மிதுளா ஓடி வந்தாள்.

தன் தாய் மாமன் தன் தந்தையுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதை கண்டவள், ''மாமா! உங்களுக்கு எங்க டாடியை தெரியுமா?'' என்று ஆச்சரியப் பட்டாள்.

அவளது குழந்தைத்தனமான கேள்வியில் பெரியவர்கள் இருவரும் முறுவலித்தனர். அவள் சோபாவில் ஏறி தன் தந்தையின் மேல் சாய்ந்து கொண்டு நின்றாள்.

சிந்துவின் அண்ணன் மிதுளாவிடம், ''உங்க அப்பாவை எனக்கு தெரியும்டா குட்டி. முன்னாடி அவரை பத்தி சரியா புரிஞ்சுக்காமல் இருந்துட்டேன். இப்போ தான் புரிஞ்சுக்கிட்டேன்.'' என்று தன் மன மாற்றத்தை எடுத்துரைத்தான்.

அவன் சொல்ல வந்தது மிதுளாவிற்கு புரிய வில்லை என்றாலும் புரிய வேண்டியவனுக்கு புரிந்து போனது.

''மித்து குட்டி! நீ பெட் ரூமிலே உட்கார்ந்து அந்த டிராயிங்ல கலர் பண்ணு. டாடி மாமா கூட பேசிக் கிட்டு இருக்கேன்.''

''ஓகேப்பா.'' என்று உடனே ஒத்துக் கொண்டவள் அவனது கன்னத்தில் முத்தமிட்டு விட்டு சோபா வில் இருந்து இறங்கி படுக்கையறை நோக்கி சென்றாள்.

''சிந்து எங்கே? அந்த வீட்டிலே இருக்காளா?''

''ம்ம்ம் திங்க்ஸை எடுத்துட்டு உங்க அம்மா அப்பாகிட்ட சொல்லிட்டு வர போய் இருக்காள்.''

''ஐயாம் சாரி நரேன். நான் இத்தனை நாளா உங்களை தப்பா புரிஞ்சுக்கிட்டேன்.''

''நான் சிந்துவை கொடுமைப்படுத்தினதா நீங்க இத்தனை நாளா நினைச்சுகிட்டு இருந்ததா சிந்து சொன்னாள். எனக்கு ஒரு டவுட். உங்க அப்பா சொன்ன இந்த பொய்யை நீங்க எப்படி நம்பினீங்க?''

''சிந்துவுக்கு வேணா அவளோட அப்பா பத்தி சரியா தெரியாமல் போய் இருக்கலாம். ஆனா உங்களுக்கு நல்லா தெரியும் தானே. அப்புறம் எப்படி சிந்துவை கூட விசாரிக்காமல் அதை உண்மைன்னு நம்பினீங்க?''



''அவர் சொன்ன பொய் அப்படி நரேன். நான் மதியம் சிந்துகிட்ட எங்க அப்பா சொன்னதை கொஞ்சம் மாத்தி சொன்னேன். உண்மையிலே எங்க அப்பா என்கிட்டே என்ன சொன்னாருன்னா...'' என்றவன் சொல்ல வாய் வாராமல் சில நொடிகள் அமைதி காத்தான்.

''நீங்க சிந்துவுக்கு செக்ஸ் டார்ச்சர் கொடுத்ததா சொன்னார். ஒரு அண்ணன் தங்கச்சிகிட்ட இதை எப்படி விசாரிக்க முடியும் சொல்லுங்க.''

நரேந்திரன் என்ன சொல்வதென்று தெரியாமல் அமைதியாய் இருந்தான்.

''அந்த கோபத்திலே தான் நீங்க மித்துவை பார்க்க ஹாஸ்பிட்டல் வந்தப்போ நான் உங்களை தடுத் தேன். சாரி.''

''உங்க இடத்துல நான் இருந்திருந்தாலும் இதையே தான் செஞ்சிருப்பேன்.''

''அன்னைக்கு நடந்த விபத்துல தான் உங்க அம்மா இறந்தாங்க என்ற விஷயம் எனக்கு தெரியாது. தெரிஞ்சிருந்தால் கொஞ்சம் மனுஷத்தன்மையோட நடந்திருப்பேன். சாரி. ரியலி சாரி.''

''போனதை விடுங்க. இனிமேலாச்சும் நம்மளோட உறவு நல்லபடியா இருக்கட்டும்.''

''இத்தனை நாளா நான் சிந்துவை என் மாமனார் வீட்டுக்கு கூப்பிட்டதில்லை. அவங்க யாராச்சும் அவளை அவமானப்படுத்துற மாதிரி பேசுவாங்

களோன்னு மனசுக்குள்ள ஒரு பயம். என்னோட மாமனார் மாதிரி நீங்களும் பணக்காரர் தான். ஆனா உங்க ரெண்டு பேருக்கும் இடையிலே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கும்.''

''அப்படி என்ன வித்தியாசம் இருக்கு?''

''இப்போ நீங்க சிந்துவுக்காக இங்கே இந்த சின்ன வீட்டுல வந்து இருக்கீங்க இல்ல... ஆனா எங்க மாமனார் ஒரு மணி நேரம் கூட இருக்க மாட்டார். எதுக்காகவும் தன்னுடைய பணக்கார தோரணையை விட்டு குடுக்க மாட்டார்.''

''அதான் அவருக்கு மத்தியிலே சிந்துவை நான் கூட்டிட்டு போனதில்லை. இப்போ அவள் உங் களோட மனைவியா அங்கே வந்தால்... அதாவது பணக்கார நரேந்திரனின் மனைவியா வந்தால்... அவர் கண்டிப்பா நல்லவிதமாவே வரவேற்பார். இப்படி சொல்லுறதுக்கு ஒரு அண்ணனா எனக்கு சங்கடமா தான் இருக்கு. ஆனால்...''

''ஃப்ரீயா விடுங்க. எனக்கு புரியுது. நான் எதையும் மனசிலே வச்சுக்காமல் சிந்துவையும் மித்துவையும் கூட்டிட்டு உங்க வீட்டுக்கு அடிக்கடி வரேன். போதுமா?''

''தாங்க்ஸ் நரேன்.''

பத்து நிமிடங்கள் நரேந்திரனிடம் பேசிக் கொண் டிருந்தவன் நேரம் ஆகிவிட்டதாக கூறி அவனிடமும் மிதுளாவிடமும் விடைபெற்று சென்றான்.





## 28

அங்கே சிந்துவின் வீட்டில்...

தன் அறைக்கு சென்ற சிந்து கதவை அடைத்து தாளிட்டுக் கொண்டு இரு பெட்டிகளை வெளியே எடுத்து அதில் மடமடவென துணிகளை அடுக்க ஆரம்பித்தாள்.

மிதுளாவின் புத்தக பையையும் தன்னுடைய முக்கிய சான்றிதழ்களையும் எடுத்துக் கொண்டாள். அரை மணி நேரத்தில் இரு பெட்டிகளையும் இழுத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

''பெட்டியோட எங்கே கிளம்பிட்டே?'' என்று அவள் அப்பா கேட்டார்.

''நான் என் புருஷன் வீட்டுக்கு போறேன்பா. என்னோட வாழ்க்கையை வாழ போறேன்.''

''அப்போ நாங்க என்ன செய்யுறது?'' என்று அவள் அம்மா கேட்டார்.

''உங்களுக்கு என்ன செய்யணும்னு தோணுதோ அதை செய்யுங்க. இதே வீட்டிலே இருக்கிறதா இருந்தால் இருங்க. இல்லை வேற வீட்டுக்கு போக நினைச்சால் இதை காலி பண்ணிடுங்க. இதுக்கு நான்

குடுத்த அட்வான்ஸ் பணத்தை நீங்களே வச்சுக் கோங்க.''

''மதியம் அண்ணன் என்னை பார்க்க வந்தான். உங்க வைர வளையல் கதை எல்லாம் சொன்னான். அவன் மாசாமாசம் ஒரு தொகை உங்க பேரிலே போடுறானாமே! நானும் மாசாமாசம் கொஞ்சம் பணம் அனுப்பி வைக்கிறேன்.''

''அதுக்கு மேல என்கிட்ட நீங்க பெருசா எதையும் எதிர்பார்க்காதீங்க. என்னை தேடி நரேன் வீட்டுக்கு வராதீங்க. எனக்கு உங்களை பார்க்கணும்னு தோணு றப்போ அண்ணனை மாதிரி நானும் பத்து நிமிஷம் வந்து எட்டி பார்த்துட்டு போறேன். நான் கிளம் புறேன்.''

வாயடைத்து போய் அவர்கள் இருவரும் பார்த்துக் கொண்டிருக்க அவள் வீட்டை விட்டு வெளியேறி சென்று கொண்டே இருந்தாள்.

எதிரே வந்த வசந்தா, ''எங்கே சிந்து கிளம்பிட்டே?'' என்றாள்.

''அவர் கூட சேர்ந்து வாழுறதுன்னு முடிவு பண் ணிட்டேன்கா.''

"ரொம்ப நல்ல முடிவு சிந்து. என்ன தான் அம்மாவும் அப்பாவும் உனக்கு துணையா இருந்தாலும் புருஷ னோட துணை மாதிரி வருமா? நல்லபடியா இரும்மா!'' என்று வசந்தா ஆசிர்வதித்தாள்.

பெற்று வளர்த்தவர்கள் பண்ணாத ஆசீர்வாதத்தை உறவே இல்லாத வசந்தா அக்கா பண்ணவும் முகம்



மலர, ''தாங்க்ஸ் கா!'' என்று நன்றி உரைத்துவிட்டு நரேன் வீட்டை நோக்கிச் சென்றாள்.

சிந்து வீட்டை விட்டு வெளியேறிய அதிர்ச்சியில் இருந்து வெளியே வந்த அவளின் அம்மா, "என்னங்க... இப்படி ஆகிடுச்சு. அவள் போக மாட் டாள்னு சொன்னீங்க. போயிட்டாள்.''

''அதானே எனக்கும் புரியலை. நமக்கு லட்சாதி பதியா வாழ குடுத்து வைக்கலையே. இவங்க ரெண்டு பேரும் அனுப்பும் பணத்துல வசதியா வாழ லாம் தான். ஆனா ஆடம்பரமான வாழ்க்கை... அது கனவாவே போயிடுச்சே.'' என்று வேலுச்சாமி புலம்பினார்.

மகனோ மகளோ தன் குடும்பத்தோடு உரிமை யாய் தன் வீடு வந்து உறவு கொண்டாட மாட் டார்களே என்று அவர்கள் கவலை கொள்ளவில்லை.

பணக்கார வாழ்வு போயிற்றே என்பதே அவர் களுக்கு வருத்தத்தைக் கொடுத்தது.

கடவுளின் படைப்பில் இப்படிப்பட்ட விந்தை யான மனிதர்களும் இருக்கிறார்கள்!

* * *

என்னுரை:

அன்பார்ந்த வாசகர்களே!

சமீபத்தில் ஒரு குட்டிக் கதை படித்தேன். ஒரு நாள் கடவுள் பத்து மனிதர்களின் முன் தோன்றி 'உங்

களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள். நான் தருகிறேன்' என்று சொன்னாராம்.

முதல் மனிதன் காசும் பிஸினஸும் கேட்டானாம். இரண்டாம் மனிதன் உலகின் பெரிய பதவியை கேட்டானாம். மூன்றாம் மனிதன் பெரிய நடிகரை போல புகழ் வெளிச்சம் வேணும்னு கேட்டானாம்.

இப்படி ஒன்பது பேரும் தங்களுக்கு வேண்டியதை பட்டியலிட்டார்களாம். கடவுளும் அவர்கள் கேட்டதை கொடுத்துக் கொண்டே வந்தாராம்.

பத்தாவது மனிதன் மட்டும் என்ன தெரியுமா கேட்டான்?

இந்த உலகத்திலேயே உச்ச கட்ட மனநிறைவோடும், மன நிம்மதியோடும் வாழும் நிலை எனக்கு வேணும்னு கேட்டானாம். ஒன்பது பேரும் அவனை திரும்பிப் பார்த்து சிரிச்சாங்களாம்.

மனநிம்மதி மனநிறைவு... நாங்களும் அதுக்கு தானே இதையெல்லாம் கேட்டோம்னு சொன்னார்களாம்.

கடவுள் அந்த ஒன்பது பேர்கிட்டயும் 'நீங்க கேட்டதை நான் கொடுத்துட்டேன். நீங்க போகலாம்னு' சொன்னவர் பத்தாவது மனிதனை பார்த்து 'நீ இரு! நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும். கொஞ்ச நேரம் கழிச்சு வரேன்னு' சொன்னாராம்.

இப்போ அந்த ஒன்பது பேரும் போகாமல் தயங்கி நின்னாங்களாம். கடவுள் அந்த பத்தாவது மனுஷன் கிட்ட என்ன பேச போகிறார்? அவனுக்கு என்ன தரப்



போகிறார் அப்படின்னு தெரிஞ்சுக்காமல் போகக் கூடாதுன்னு அங்கேயே இருந்தாங்களாம்.

அவங்க விரும்பினது அவங்க கைக்கு கிடைச்சும் கூட எதுவுமே கிடைக்காத பத்தாவது மனுஷன் மேல பொறாமைப்பட்டு மனம் வெதும்பி நின்னாங்களாம்.

நேரம் ஆக ஆக வெறுப்பிலே வெந்து கையில் இருப்பதை மறந்து அதை அனுபவிக்க மறந்து போனார்களாம். அவர்களது நிம்மதி குலைந்து அவர்களுக்கு மனநிறைவு இல்லாமல் போனது.

ஆனால் அந்த பத்தாது மனிதன் எந்த பதட்டமும் இல்லாமல் காத்து நின்னானாம். கடவுள் தன் கிட்ட பேசப் போகிறார் என்பதிலேயே அவனுக்கு அவன் கேட்ட மனநிறைவு கிடைச்சுடுச்சு.

'நீங்க பத்தாவது மனிதனா' இல்லை 'பத்தாது என்கிற மனிதனா?' அப்படின்னு கேட்டு கதையை முடிச்சு இருந்தாங்க.

உண்மையில் நம்மில் பலர் அந்த ஒன்பது மனிதர்களின் மனநிலையில் தான் இருக்கிறோம். நிம்மதியும் சந்தோஷமும் நம்மோட மனசை பொறுத்த விஷயமே!

சிந்துவின் பெற்றோர்களும் அந்த ஒன்பது மனிதர்களை போல தான்!

இன்றைய காலகட்டத்தில் பிள்ளை வரம் கிடைப்பதே அரிதான விஷயமாகி விட்டது. கடவுள் அவர்களுக்கு மணிமணியாய் இரு பிள்ளைகளை கொடுத்தார்.

பிள்ளைகள் ஒழுக்கமானவர்களாய் இருந்தால் அது பெருமைக்குரிய விஷயம். அந்தப் பெருமையும் அவர்களுக்கு கிடைத்தது.

தாய் தந்தையரை பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற பொறுப்போடு இருக்கும் பிள்ளைகளை கிடைக்க பெற்றவர்கள் புண்ணியம் செய்தவர்கள். அதுவும் அவர்களுக்கு கிடைத்தது.

குலம் தழைத்து ஓங்கும் வகையில் பேரன் பேத்திகள் பிறந்து விட்டால் அவர்கள் பாக்கியசாலிகள். கடவுள் அந்த பாக்கியத்தையும் அவர்களுக்கு அளித்தார்.

ஆனால் இது எதுவுமே அவர்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. அதீத பணம் மட்டுமே மனநிறைவை தரும் என்று சிந்துவின் பெற்றோர் நினைத்தார்கள். அதற்காக செய்யக் கூடாததை எல்லாம் செய்தார்கள்.

அதன் விளைவு? அவர்கள் கேட்டதும் கிடைக்கப் போவதில்லை. கையில் கிடைக்கப் பெற்ற நல்ல விஷயங்களையும் இழந்து நிற்கிறார்கள்.

இப்பொழுதாவது திருந்தினார்களா? அது தான் இல்லை. நாய் வாலை நிமிர்த்த முடியாது. அவர்கள் எப்படியோ போகட்டும். அவர்கள் வெறும் கற்பனை பாத்திரங்கள் தான்.

இருப்பதை கொண்டு நாம் திருப்தி அடைவோம்!

அன்புடன்,
பிரேமா

* * *





## 29

பெட்டியோடு உள்ளே வந்த தாயைக் கண்ட மிதுளா, ''நாம ஊருக்கு போறோமா? எந்த ஊருக்கு போறோம்?'' என்றாள்.

''நீ, நான், அம்மா எல்லோரும் இனிமேல் ஒரே வீட்டிலே இருக்க போறோம்.'' என்று மனைவியை முந்திக் கொண்டு நரேந்திரன் பதிலளிக்கவும், மிதுளா குதித்தாள்.

''நாம மூணு பேரும் ஒண்ணா இருக்க போறோமா? ஹை ஜாலி. அப்படின்னா நான் அப்பா காரிலே ஏறி ஸ்கூல் போலாமா? அப்பா கூடவே தூங்கலாமா?''

''ஆமாடா குட்டி.''

''பாட்டி தாத்தா எங்கே இருப்பாங்க?''

''அவங்க வேற வீட்டுல இருப்பாங்க. உனக்கு அவங்களோட இருக்கணுமா?'' என்று நரேந்திரன் கேட்கவும்,

''வேண்டாம். அவர் பேட் தாத்தா.'' என்று வேகமாக மறுத்தாள்.

''தாத்தாவை அப்படி எல்லாம் சொல்லக் கூடாது மித்து.''

''அவர் மட்டும் எங்க டாடியை பேட்னு சொன்னார்.''

''அவருக்கும் அப்பாக்கும் சின்ன சண்டை. அதுக்காக தான் அப்படி சொல்லி இருப்பார்.''

''அம்மாவுக்கும் உங்களுக்கும் கூட தான் சண்டை. ஆனா அவங்க பேட் அப்பா சொல்லலையே!''

''நீ இப்படி மடக்கி மடக்கி கேட்டால் நான் என்ன பதிலைடா குட்டி சொல்ல?'' என்று முணுமுணுத்தவன் மகள் அருகே குனிந்து,

''தாத்தா அம்மாவோட அப்பா தானே! நீ அவரை பேட்னு சொன்னால் அம்மா மனசுக்கு கஷ்டமா இருக்கும் தானே. இப்பவே பாரு அம்மா சோகமா இருக்காள்.'' என்றதும் மிதுளா சிந்துவை ஏறிட்டாள்.

தாயின் வாடிய முகத்தை கண்டவள், ''சரி இனி மேல் சொல்லலை.'' என்று உடனே ஒத்துக் கொண்டாள்.

சிந்துவின் அண்ணன் வந்து சென்ற கதையை சிந்துவிடம் நரேந்திரன் மெதுவான குரலில் பகிர்ந்தான். தன் அண்ணனோடு உறவு பலப்பட்டதை அறிந்து சிந்து சந்தோஷம் கொண்டாள்.

சிந்து கொண்டு வந்த பெட்டிகளை நரேந்திரன் இழுத்து சென்று படுக்கை அறையில் ஒரு ஓரமாக வைத்துவிட்டு வந்தான். அது ஒற்றை படுக்கை அறை கொண்ட வீடு.



'அம்மாவும் இங்கே தான் இருக்க போறாங்கன்னா அவங்க எங்கே இருப்பாங்க?' என்ற கேள்வி மிதுளாவிற்கு முளைத்தது.

''அப்பா! நீங்களும் நானும் இந்த ரூமிலே இருந்துப்போம். அம்மா எங்கே இருப்பாங்க? அம்மாவுக்கு ரூம் இல்லையே!''

''அடிப்பாவி! எங்க அத்தை கூட இந்த விஷயத்துல என் கூட போட்டிக்கு வந்ததே இல்லை. நீ என்னை வெளியே துரத்தவா பார்க்கிறே! என் அத்தை தான் எனக்கு வில்லின்னு நினைச்சேன். ஆனா என் அத்தை எனக்கு தெய்வமாகிட்டாங்க. நீ தான் என்னோட வில்லியே!''

சிந்து முணுமுணுத்தது நரேந்திரனின் காதில் தெளிவாக விழ அவன் சிரிக்க ஆரம்பித்தான்.

''எதுக்குப்பா சிரிக்கிறீங்க?''

''அம்மா ஒரு ஜோக் சொன்னாள். அதான் சிரிச்சேன். நாம இந்த வீட்டுல இருக்கப் போவதில்லைடா குட்டி. தூங்கி எழுந்த உடனே நாம நம்மளோட வீட்டுக்கு போயிடுவோம்.''

''ஓகேப்பா.'' என்றவள் தொலைக்காட்சியை பார்க்கச் சென்று விட்டாள்.

''பெங்களூருக்கா நரேன் போகப் போறோம்?''

''இல்லை சிந்து. அங்கே உள்ள எல்லாத்தையுமே நான் வித்துட்டேன். எல்லாத்தையும் டிஸ்போஸ் பண்ணிட்டு உங்களை பார்க்க வர தான் ஒன்றரை

வருஷம் ஓடிடுச்சு. இங்கே சென்னையிலே தான் வீடு வாங்கி இருக்கேன்.''

''தனி வீடா?''

''இல்லை. அபார்ட்மெண்டில் தான் ஒரு பிளாட் வாங்கி இருக்கேன். நமக்கு உறவுகளும் பெருசா இல்லை. மித்து தனியா வளர வேண்டாம். அக்கம் பக்கம்னு நாலு பேர் கூட சேர்ந்தே வளரட்டும்னு தான் தனி வீடு வாங்கலை.''

''அதுவும் சரி தான்.''

''நம்ம பெங்களூரு வீட்டுல வேலை செஞ்ச சரோ ஜாம்மா மூணு நாள் முன்னாடி போன் பண்ணினாங்க. பையனுக்கும் அவங்களுக்கும் ஏதோ தகராறு போல. நான் உன் கூடவே வந்து இருந்துக்கிறேன் தம்பின்னு சொன்னாங்க. சரின்னு வர வச்சுட்டேன். இன்னைக்கு தான் சென்னை வந்தாங்க. இப்போ நம்ம வீட்டுல தான் இருக்காங்க.''

''பல வருஷமா உங்க வீட்டோடவே இருந்தாங்க இல்ல. ரொம்ப நல்ல மனுஷி.''

''ம்ம் அதனால தான் நான் முதல்லயே கூப்பிட்டு பார்த்தேன். அப்போ வரலைன்னு சொன்னாங்க. இப்ப வலிய போன் பண்ணி வரேன்னு சொல்லு றாங்க. பையன் கூட என்ன மனஸ்தாபமோ பாவம்.''

''கேட்கிறப்போவே எனக்கு அவ்வளவு கஷ்டமா இருக்கு நரேன். ஆனா ஒரு காலத்திலே இதை தானே நான் அத்தைக்கு செய்ய இருந்தேன். எப்படி



அவ்வளவு அறிவு கெட்டத்தனமா நடந்துக்கிட் டேன்னு எனக்கே ஆச்சரியமா இருக்கு.''

''எதுவுமே விலகிப் போனால் விரும்பி வரும் சிந்து. பக்கத்துலயே இருந்து சண்டையும் மனக்கசப்பும் மேலும் வளர வேண்டாம்னு தான் நான் உன்னை வீட்டை விட்டு போக விட்டேன்.''

''எனக்கு எங்க அம்மா மட்டும் தான் முக்கியம். நீயும் மித்துவும் ரெண்டாம் பட்சம்னு அதுக்கு அர்த்தம் இல்லை.''

''ஒரு கல்லை கண்ணுக்கு முன்னாடி வச்சு பார்த் தால் பெரிய பாறை மாதிரி தெரியும். அதையே தூரமா வச்சு பார்த்தால் கடுகு மாதிரி தெரியும். பிரச் சனைகளும் அப்படி தான். தள்ளி நின்னு பார்க் கிறப்போ இதெல்லாம் ஒரு பிரச்சனையா? இதுக்கா நாம அவ்வளவு ஃபீல் பண்ணினோம்னு தோணும்.''

''எனக்கு இப்போ நல்லா புரியுது நரேன். உண்மை யிலே யார் நம்ம மேல அக்கறையோடு இருக்காங்க. பொய்யாய் முகமூடி போட்டுக்கிட்டு யார் பழகுறாங் கன்னு புரிஞ்ச பின்னால நான் அன்னைக்கு செஞ் சதை எல்லாம் யோசிச்சு பார்த்தால்... எனக்கே என் மேல அவ்வளவு கோபம் வருது.''

''விடு சிந்து. போனதை பேசி ஒண்ணும் ஆகப் போறதில்லை. கொஞ்ச நாள் தள்ளி இருக்கணும்னு நமக்கு விதிச்சிருக்குன்னு எடுத்துக்கோ.''

''ம்ம்ம்...''

''அப்புறம் நம்ம வீட்டு பக்கத்திலேயே மித்து வோட ஸ்கூல் இருக்கு.''

''அப்படின்னா இப்ப அவள் போய்கிட்டு இருக்கிற ஸ்கூல்?''

''அவங்ககிட்ட டிசி வாங்கிட்டு புது ஸ்கூலில் சேர்த்திடலாம்.''

''நடுவிலே போய் கேட்டால் அட்மிஷன் கிடைக் கணுமே?''

''அதெல்லாம் எப்பவோ வாங்கிட்டேன். பெங்களூருல இருந்து நடுவிலே தான் வந்து ஜாயின் பண்ணு வோம்னு சொல்லி வச்சிருக்கேன்.''

''உங்களால எல்லாம் செய்ய முடியும் போல.''

''என் வைஃபை சமாளிக்கிறதை தவிர எல்லாமே எனக்கு ஈஸி தான்.'' என்றதும் அவள் அவனை முறைத்தாள்.

அழைப்பு மணி ஒலிக்கவும், ''சாப்பாடு ஆர்டர் பண்ணி இருந்தேன். வந்துடுச்சு போல!'' என்று சொல்லிக் கொண்டே கதவை நோக்கி நகர்ந்தான்.

அவன் சொன்னது போல் உணவு தான் வந் திருந்தது. அவர்கள் மூவரும் உணவை சாப்பிட்டு முடித்தனர்.

''சிந்து! நீ மித்துவை தூங்க வை. நான் இங்கே உள்ள திங்க்ஸை பேக் பண்ணுறேன்.'' என்றதும் சிந்து படுக்கையில் மகளோடு சென்று படுத்துக் கொண்டாள்.



முதல் நாள் முழுவதும் தூங்காமல் இருந்ததாலும், கணவனோடு சேர்ந்து வாழப் போகிறோம் என்ற நிம்மதி மனதில் குடி புகுந்ததாலும் மகளை முந்திக் கொண்டு சிந்து முதலில் கண்ணயர்ந்தாள்.

அட்டைப் பெட்டியில் பொருட்களை அடுக்கிக் கொண்டிருந்தவன் இடையில் அறைக்குள் வந்து எட்டிப் பார்த்தான்.

இருவரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டவன் ஒரு முறுவலுடன் சென்று அவர்களின் நெற்றியில் முத்தமிட்டு அவர்களுக்கு போர்வை ஒன்றை போர்த்தி விட்டான்.

எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டு சப்தம் எழுப்பாமல் வெளியேறினான். மீண்டும் தன் வேலையை தொடர்ந்தான்.

வேலை முடிந்ததும் வரவேற்பறையில் போர்வை ஒன்றை தரையில் விரித்து கொண்டு தூங்க ஆரம் பித்தான். படுக்கையறையில் உள்ள கட்டில் மிகச் சிறியது. அதில் மூன்று பேர் தூங்க முடியாது என்பதால் தான் அவன் தரையில் படுத்துக் கொண் டான்.

இது நாள் வரை அவன் மெத்தையில் படுத்து தான் பழக்கம். மனதில் ஏற்பட்ட நிம்மதியும் சந்தோஷமும் அந்த தரையை பஞ்சு மெத்தையாய் மாற்றி இருந்தது. அதனால் வெகு நாட்களுக்கு பின் படுத்த உடனே தூங்கி விட்டான்.




**சி**ந்து காலை ஆறு மணிக்கு தான் கண் விழித்தாள். அறையை விட்டு வெளியேறியவள் நரேந்திரன் வரவேற்பறையில் தூங்கி கொண்டிருப்பதை கண்டு, 'கடைசியில் நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து உங்களை வெளியே தள்ளிட்டோமா?' என்று எண்ணி சிரித்துக் கொண்டாள்.

அவர்கள் மூவரும் குளித்துக் கிளம்பிக் கொண்டிருக்கும் பொழுது நான்கு பேர் அவர்கள் வீட்டிற்கு வந்தனர். நரேந்திரன் தான் அவர்களை வரவழைத்திருந்தான்.

இவர்களின் பெட்டிகள் அனைத்தையும் அவர்கள் எடுத்து கொண்டு சென்றார்கள். காலியான வீட்டை பூட்டிக் கொண்டு மூவரும் இறங்கிச் சென்றனர்.

தன் அப்பா அல்லது அம்மா யார் முகத்தையாவது பார்க்க நேரிடுமோ என சிந்து நினைத்தாள். ஆனால் அந்த சங்கடம் அவளுக்கு நேரவில்லை.

மிதுளா காரின் முன்பக்க கதவை திறந்து முன்னிருக்கையில் அமர்ந்து கொண்டாள். சிந்து இடுப்பில்



கை வைத்துக் கொண்டு மகளை முறைத்து கொண்டு நின்றாள்.

அவளின் பாவனையை கண்டு சிரித்த நரேந்திரன், ''நீ இங்கேயே இரு. இப்போ அவள் பின்னாடி போயிடுவாள்.'' என்று மனைவியிடம் சொல்லி விட்டு ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்தான்.

''மித்து குட்டி! பின்னாடி சீட்டை பார்த்தீங்களா?'' என்றதும் மிதுளா திரும்பிப் பார்த்தாள்.

அவளும் நரேந்திரனும் அன்று வாங்கிய பெரிய டெடி பொம்மை அங்கே சீட்டில் சாய்த்து வைக்கப் பட்டிருந்தது.

அதை கண்ட மிதுளா, ''ஹை என்னோட டெடி! அப்பா நான் அதை என் பக்கத்திலே வச்சுக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

''அதை முன் சீட்டிலே வச்சுக்க முடியாதுடா மித்து குட்டி. அப்பாக்கு வண்டி ஓட்ட கஷ்டமா இருக்கும்.''

''அப்போ நான் பின்னாடி போறேன்.'' என்றவள் பின் இருக்கைக்கு தாவினாள்.

அவள் பின்னே சென்றதும் சிந்து முன் இருக்கையில் அமர்ந்தாள்.

''ஆயுசுக்கும் ரெண்டு பொண்ணுங்களுக்கு மத்தியிலே அல்லாடணும் என்பது என் விதி போல! முதல்ல எங்க அம்மாவுக்கும் உனக்கும் இடையிலே அல்லாடினேன். இப்போ உங்க ரெண்டு பேருக்கு இடையிலே மாட்டிக்கிட்டு முழிக்கிறேன்.'' என்று

நரேந்திரன் கூறவும், சிந்து அவனை பொய்யாய் முறைத்தாள்.

வழியில் ஒரு உணவு விடுதியில் காலை உணவை முடித்துக் கொண்டு அவர்கள் வீடு நோக்கிச் சென்றனர்.

அந்த பிரம்மாண்ட குடியிருப்பு வளாகத்தில் வண்டி நுழைந்ததும், ''டாடி! நம்ம வீடு இங்கேயா இருக்கு?'' என்று மிதுளா ஆச்சரியமாய் கேட்டாள்.

''ஆமாடா குட்டி. இங்கே உள்ளேயே சில்ரன்ஸ் பார்க் இருக்கு. ஸ்விம்மிங் பூல் இருக்கு. நீ ஜாலியா விளையாடலாம்.''

மிதுளாவின் முகத்தில் தாண்டவமாடும் மகிழ்ச்சியை கண்டு சிந்து நிறைவாய் புன்னகைத்தாள்.

மகளை கையில் தூக்கி கொண்டு அவன் இரண்டாவது மாடியில் உள்ள தங்களின் வீட்டிற்கு அழைத்து சென்றான். மனைவி மற்றும் மகளோடு உள்ளே நுழைந்தவனை கண்ட சரோஜாம்மா மகிழ்ந்து போனார்.

சிந்துவும் அவரும் பரஸ்பரம் மற்றவரின் நலனை விசாரித்து அறிந்து கொண்டனர்.

''மித்து பாப்பா ரொம்ப வளர்ந்துட்டாள் இல்ல தம்பி?'' என்று கூறிய சரோஜா அவளை பிடித்து கொஞ்சப் போக மிதுளா கூச்சத்தில் நெளிந்தாள்.

''என்னை தெரியலையா குட்டி? நான் சரோஜா பாட்டி.''



இல்லை என்று அவரிடம் தலையசைத்தவள் தந்தையின் தோளில் முகத்தை மறைத்து கொண்டாள்.

''வெட்கப்படுறாள் சரோஜாம்மா. கொஞ்ச நேரம் கழிச்சு வருவாள்.'' என்று நரேந்திரன் கூறவும், அவர்களுக்கு தனிமை கொடுத்து அவர் விலகிச் சென்றார்.

சரோஜாம்மா விலகிச் சென்றதும் மிதுளா தன் தலையை நிமிர்த்தி வீட்டை சுற்றிப் பார்த்தாள்.

அந்த வீட்டின் செழுமையை கண்டவள், ''நம்ம வீடு ரொம்ப பெருசா அழகா இருக்குப்பா.'' என்றாள்.

'எப்படியும் இந்த பிளாட்டின் விலை கோடியை தாண்டி இருக்கும்' என சிந்து நினைத்துக் கொண்டாள்.

''அப்பா! இங்கே ஊஞ்சல்... அதுவும் பாஸ்கட் மாதிரி ஊஞ்சல் இருக்கு. நான் இதுல உட்கார்ந்து விளையாடினால் கீழே விழ மாட்டேன் தானே?''

''ஆமாடா மித்து குட்டி! அதுக்காக தான் அப்பா அதை வாங்கி வச்சேன்.''

''அப்பா உங்க ரெண்டு பேருக்கும் வீட்டை சுத்தி காட்டுறேன். முதல்ல மித்துவோட ரூமை பார்க்கலாம் வரீங்களா?'' என்று கேட்டு மகளையும் மனைவியையும் ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றான்.

ஒரு சுவர் முழுவதும் அவளுடைய புகைப் படங்கள் அலங்கரித்தன. இன்னொரு சுவரில் சிறு சிறு பொம்மைகளின் படங்கள் வரையப்பட்டிருந்தது.

''சூப்பரா இருக்குப்பா. இது என்னோட ரூமா? இந்த குட்டி காட் எனக்கா? நான் இங்கே தான் தூங்குவேனா?'' என்று குதூகலித்த மகளைக் கண்டு அவளுடைய பெற்றோர் சந்தோஷமாய் தலையாட்டி ஆமோதித்தனர்.

''அடுத்த ரூமை பார்க்கலாமா?'' என்று கேட்டு வேறு ஒரு அறைக்கு அழைத்து சென்றான்.

அந்த அறை பெரிதாக இருந்தது. அவர்கள் மூவரும் இருக்கும் புகைப்படம் ஒன்று பெரிதாக்கப் பட்டு ஒரு சுவரில் மாட்டி இருந்தது.

''இது டாடியோட ரூம். கரெக்ட்டா?''

''மித்து பேபி இஸ் ஆல்வேஸ் ரைட். என் பேபி அறிவாளி!'' என்று மகளைக் கொஞ்சினான்.

''அது மித்து ரூம். இது உங்க ரூம். அடுத்த ரூம் அம்மாவுக்கா?''

''உங்க பொண்ணுக்கு எதுக்கு என் மேல இம்பூட்டு அக்கறை? அவளை வாயை மூட சொல்லுங்க.'' என்று சிந்து கடுப்புடன் நரேந்திரனின் காதில் முணு முணுத்தாள்.

''மித்து குட்டி என்னோட செல்ல பேபி. எனக்கு ரொம்ப ஸ்பெஷல். அதனால மித்துக்கு தனி ரூம். அம்மா என்னோட ரூமிலே அட்ஜஸ்ட் பண்ணி இருந்துக்குவாள்.''

''உங்க பொண்ணு தான் ஸ்பெஷலா? நான் இல்லையா?'' என்று சிந்து திரும்பவும் முணுமுணுக்க,



''அப்போ உனக்கு ஒரு தனி அறை ஒதுக்கிட லாமா? எப்படி வசதி?'' என்றதும் அவள் தன் வாயை கப்பென்று மூடிக் கொண்டாள்.

வீடு முழுவதும் சுற்றிப் பார்த்து முடித்ததும் சிந்து தன்னுடைய பெட்டியை இழுத்துக் கொண்டு தங்கள் அறைக்குள் நுழைந்து துணிகளை அடுக்கும் வேலையை செய்ய ஆரம்பித்தாள்.

''மித்து குட்டி! நீங்க கீழே உள்ள பார்க்கில் போய் விளையாடுறீங்களா?''

''ஹை ஜாலிப்பா! வாங்க போகலாம்.''

''அப்பா உன் கூட வரலை. அப்போ ஒரு பாட் டியை பார்த்த இல்ல. அவங்க இங்கேயே நம்ம கூடவே தான் இருப்பாங்க. நீ அவங்களோட போய் விளையாடு.'' என்றதும் சிறிது தயக்கத்திற்கு பின் ஒத்துக் கொண்டாள்.

சரோஜாவை மிதுளாவுடன் அனுப்பி வைத்து விட்டு வீட்டை பூட்டியவன் தங்கள் அறைக்குள் சென்றான்.

அலமாரிக்குள் தலையை குடுத்து துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த மனைவியை பின்னோடு சென்று இறுக்கி அணைத்துக் கொண்டான்.

உடல் முழுவதும் மின்சாரம் தாக்கப்பட்ட நிலை யில் இருவருமே சில பல நொடிகள் அதில் லயித்து போய் நின்றனர். பல மாதங்கள் கழித்து கிடைத்த இந்த அருகாமையை ரசித்து உலகை மறந்திருந்தனர்.

தன் அணைப்பை விலக்கி அவளை தன் புறமாய் திருப்பி அவள் முகம் பார்த்தான். வெட்கத்தின் முகம் சிவந்திருந்தவளை கண்டவன் முறுவலோடு அவளை மீண்டும் இறுக அணைத்தான்.

''டேய் முரடா! என் எலும்பெல்லாம் உடைஞ் சிடுச்சு!'' என்று அவள் சிணுங்கலோடு அலறினாள்.

அவளது சிணுங்கலை கேட்டு அவனது அணைப்பு இறுகியதே தவிர தளரவில்லை. அவளும் அவனிடம் இருந்து விலக நினைக்காமல் மேலும் மேலும் ஒன்றவே முயன்றாள்.

எத்தனை மாதங்கள் ஆயிற்று என்ற நினைவே இருவர் மனதிலும் ஓடிக் கொண்டிருந்தது. அவனிடம் இருந்து மெல்ல விலகியவள் அவன் முகம் பார்த்து பேச ஆரம்பித்தாள்.

''என் மேல உங்களுக்கு இருந்த கோபம் போயி டுச்சா நரேன்?''

''சுத்தமா போயிடுச்சு.''

''முழுசும் போயிடுச்சா?'' என்று சந்தேகமாய் அவள் இழுத்தாள்.

''என்னை வேணாம்னு சொல்லிட்டு போன மூணே மாசத்தில் எனக்கு டைவர்ஸ் நோட்டீஸ் நீ அனுப் பியதா நினைச்ச காலத்துல கூட உன்னை விட்டு பிரிய கூடாதுன்னு நினைச்சு என்னோட ஜாகையை சென்னைக்கு மாத்தின ஆளு நான். இப்போ அதை நீ அனுப்பலைன்னு தெரிஞ்ச பின்னால என்னோட கோபம் சுத்தமா மறைஞ்சுடுச்சு.''



''நிஜமா தானே சொல்லுறீங்க? என்னை சமா தானம் பண்ண சொல்லலையே!''

''ஊகும் இது சரி வராது. உன்னை பேச விட்டால் நீ இன்னைக்கு பூராவும் இதையே தான் கேட்பே அதனால...'' என்றவன் அவளை பேச விடாமல் செய்வதற்காக அவளது இதழ்களை தன் இதழ்களால் சிறை செய்தான்.

சில வருடங்களுக்கு பின் தன் இணையை கண்டு விட்ட அவர்களது இதழ்கள் விடுபட மறுத்தன. ஒன்றாய் இணைந்தது அவர்களது இதழ்கள் மட்டும் அல்ல அவர்களது மனங்களும் தான்.

இனி அவனை விட்டுத் தள்ளிப் போகும் எண்ணம் அவளுக்கு என்றுமே வராது. இனி அவர்கள் வாழ்வில் எல்லா நாளும் நல்ல நாளே!

★


பிரேமா
தள்ளிப்
போகாதே!